www.padippakam.com

1-15 மே '92

ரூ. 2.50

# புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு




## பத்திரிக்கை மீது பாயும் பாசிச கும்பல் பல்லுடைபடும்

படிப்பகம்

www.padippakam.com




# "தடா-வுக்கும் அஞ்சிடோம்!"

# எதிரியின் கோட்டைக்குள் இடிமுழக்கம்

நெய்வேலியில் மக்கள் கலை இலக்கியக் கழகத் தோழர்கள் செந்தில்குமார், பாலு, ரமேஷ், கிருஷ்ணா, அருள்மணி ஆகியோர் கடந்த 16.10.91 அன்று 'தடா' சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு 6 மாதங்களாக சிறையில் உள்ளனர். அவர்களது காவல் நீட்டிப்பிற்காக சென்னை சிறப்பு நீதி மன்றத்தின் முன்பு 9.4.92 அன்று போலீசு கொண்டு வந்தது. தோழர்களது காவல் நீட்டிப்பையும் 'தடா' சட்டத்தையும் கண்டித்து ஆர்ப்பாட்டம் செய்வதென தீர்மானித்து சென்னை ம.க.இ.க தோழர்கள் நீதி மன்ற வளாகத்தில் கூடினர். தோழர்களை அழைத்துவந்த போலீசு 'வேன்' நீதிமன்ற வளாகத்திற்குள் நுழைந்ததுமே செஞ்சட்டையணிந்திருந்த ம.க.இ.க தோழர்கள் முழக்கமிட்டனர். வேனில் வந்த தோழர்களும் சேர்ந்து முழக்கமிடவே உயர்நீதி மன்ற வளாகமே எழுச்சிக்குள்ளானது. ''இம் என்றால் சிறைவாசம், ஏன் என்றால் 'தடா' வாசம்''; ''நாட்டில் நடப்பதோ துப்பாக்கி ஆட்சி, நம்ப மறுத்தால் 'தடா'வே சாட்சி'' போன்ற முழக்கங்களும் போலீசு மற்றும் பார்ப்பன - பாசிச ஜெயாவின் அடிவருடியும் தனிச்சிறப்பு நீதிமன்ற நீதிபதியுமான சவுந்தரபாண்டியனையும் கண்டித்து முழக்கங்கள் எழுப்பப்பட்டது.

போலீசு 'வேன்' நீதி மன்ற வளாகத்தைச் சுற்றிவந்து நிற்கும் வரையும் அதற்குப் பிறகும் ஏறக்குறைய முக்கால் மணிநேரம் தோழர்கள் எழுச்சிகரமாக முழக்கமிட்டனர். சிறப்பு நீதிமன்றமே ஸ்தம்பித்தது. நடந்து கொண்டிருந்த வழக்குகள் எல்லாம் நிறுத்தப்பட்டு வழக்கறிஞர்கள், பொதுமக்கள், ஏன் நீதிபதிகள்கூட ஆச்சரியத்துடன் வந்து கூடிவிட்டனர். சுமார் 3000 பேர் கூடி நின்று ம.க.இ.க தோழர்களின் துணிச்சலைக் கண்டு அதிசயித்தனர். வெகுவாகப் பாராட்டினர். பாசிச ஜெயாவின் அரசியல் பழி வாங்கும் போக்கை உணர்ந்த பலர் வாய்விட்டே ஜெயாவைத் திட்டினர் வழக்கு நிதி கேட்க தோழர்கள் முற்பட்டதுமே கூடியிருந்தவர்கள் தாமாகவே முன்வந்து நிதியளித்து ஆதரவளித்தனர். உயர் நீதி மன்ற கட்டிட மாடிகளில் நின்று ஆர்ப்பாட்டத்தை பார்த்தவர்கள் காகிதப் பொட்டலங்களைப் போட்டனர். பிரித்துப் பார்த்தால் அவர்களின் ஆதரவை சுட்டிக்காட்டும் சில்லறை காசுகள்!

நீதிமன்ற வாயிற்படி வரை சென்று தோழர்கள் இட்ட முழக்கம் நீதிபதி சவுந்திர பாண்டியன் காதில் இடி என விழுந்திருக்க வேண்டும். அதனால்தான் அதைச் சொல்லி சொல்லி புலம்பினார்; வருந்தினார்; கண்டித்தார். சட்டப்படி தோழர்களின் காவல் நீட்டிப்பிற்கு போலீசு துறை மனு செய்ய வேண்டும்; வழக்குக் குறிப்பேடு சமர்ப்பிக்கப்பட வேண்டும் - இவை எதுவுமின்றி 4.6.92 வரை காவலை நீட்டிப்பதாக சட்டவிரோதமாக அறிவித்தார் நீதிபதி. இதைச் சுட்டிக்காட்டி ம.க.இ.க. வழக்கறிஞர் தோழர் கே.வி.சண்முகநாதன் வாதாடினார். மேலும் தோழர்களுக்கு கைவிலங்கு போடப்பட்டுள்ளதைக் கண்டித்தும் கைவிலங்கு போட போலீசுக்கு அதிகாரமில்லை என்பதைச் சுட்டிக்காட்டியும் ஆட்சேபனை குரல் எழுப்பினார்.

பிறகு நீதிபதி போலீசை கூப்பிட்டு ''ஏன் விலங்கு மாட்டினீர்கள்?'' என்று கேட்டதற்கு போலீசோ, ''அவர்கள் விலங்கை கழட்ட விடமாட்டேங்கிறாங்க சார்'' என்றது. ஏதோ அசைக்க முடியாத பதில் கிடைத்துவிட்ட திருப்தியில் மமதையில் நீதிபதி, ''சத்தமாகச் சொல்லு; அவர் (கே.வி.சண்முகநாதன்) காதில் விழட்டும்'' என்றார். மதுரைக்கு வழிகேட்டால் குதிரையை காட்டும் இச்சண்டாளர்களை என்னவென்று சொல்வது? சட்டவிரோதமான இந்த விலங்கை நீதி மன்றத்துக்கு தெரியாமல் மறைப்பதற்காகவே போலீசு, நீதி மன்றத்திற்கு வந்ததும் நல்ல பிள்ளையாக விலங்கை கழற்றி கூட்டி வருகிறது; இதை நீதி மன்றத்திற்கு தெரியப்படுத்தும் பொருட்டே தோழர்கள் விலங்கை கழற்ற மறுத்தார்கள் என நமது வழக்கறிஞர் பிறகு விளக்கமளித்தார்.

கைதான தோழர்கள் வாய்ப்பு கேட்டு தமக்கு சிறையில் இழைக்கப்பட்ட கொடுமைகளை அநீதிகளை எடுத்துரைத்தனர். 'தடா' கைதிகளை மத்திய சிறையில்தான் வைக்கவேண்டும்; ஆனால் தங்களை சட்டவிரோதமாக பண்ருட்டி துணைச் சிறைச்சாலையில் அடைத்ததையும், உண்ணாவிரதம் இருந்து போராடியபின்னரே கடலூர் மத்திய சிறைக்கு மாற்றப்பட்டதையும் குறிப்பிட்டனர். சிறையில் உரிமைகளை கேட்ட போது கண்மூடித்தனமாக தாக்கப்பட்டதையும் அப்பொழுது தங்களுக்கு கை எலும்பு முறிந்ததையும் மூக்கு கண்ணாடி உடைந்ததையும் உடல்நிலை பாதிக்கப்பட்டதையும் சுட்டிக்காட்டினர். இது தொடர்பாக ஏற்கனவே முறையிட்டும் எவ்வித நடவடிக்கையும் சிறை அதிகாரிகள் மீது இல்லாததை எடுத்து அம்பலப்படுத்தினார்கள்.

தற்போது கடலூர் மத்திய சிறையில் மற்ற அரசியல் கைதிகளைப் போலல்லாமல் கிரிமினல்களைவிட கேவலமாக தங்களை நடத்துவதையும், தமது குழந்தையைக் கூட தொட்டு கொஞ்ச முடியாதவண்ணம் கம்பி வலைத்தடுப்புக்குப் பின்னே உறவினர்களை சந்திக்க விடுகிற கொடுமையையும் ஒரு தோழர் புகார் செய்தார் ''ஏன் இப்படி நடத்துகிறீர்கள் என்று சிறையதிகாரிகளிடம் கேட்டால் 'தடா' கைதிகளை எப்படி நடத்த வேண்டும் என்ற விதிமுறையே இல்லை என்று அவர்கள் பதிலுரைக்கிறார்கள்'' என ஆவேசமாய் சாடினார். இதற்கு மேலும் பேசவிட்டால் கூண்டோடு அம்பலப்பட்டுப் போவோம் என எச்சரிக்கையடைந்த நீதிபதி, இக்குறைகளைப் போக்க நடவடிக்கை எடுக்கும்படி சிறைத்துறை மேலதிகாரிக்கு (I.G) உத்தரவிட்டார்.

மொத்தத்தில் இந்நிகழ்ச்சி 'தடா' சட்டத்தினையும், போலீசையும், நீதி மன்றத்தையும் மக்களிடையே, வழக்கறிஞர்களிடேயே அம்பலப்படுத்துவதற்கு நல்ல வாய்ப்பாக அமைந்தது.

அன்பார்ந்த தோழர்களே,

கடுமையான நிதி நெருக்கடியின் காரணமாக ஏப்ரல் மாதத்திய இரு இதழ்களையும் வெளியிட இயலாமல் போய் விட்டதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். நட்டம் ஏற்படினும் அவசியம் கருதி 4 பக்கங்கள் கூடுதலாக இவ்விதழை வெளியிட்டுள்ளோம். இதழை கிரமமாக வெளியிட எல்லாவித முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளோம். இதழ் விற்பனையை உயர்த்தியும் அதன் வளர்ச்சிக்கு நிதியுதவி அளித்தும் ஆதரவு தருமாறு கோருகிறோம்.

—ஆசிரியர் குழு

படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு*

ஏழாம் ஆண்டு

**10-12**

16 மார்ச் - 15 மே '92

உள்நாடு:
தனி இதழ்: ரூ.2.50
ஆண்டு சந்தா: ரூ.60

வெளிநாடுகள்
*(வான் அஞ்சலில்)*
ஆண்டு சந்தா: US$ 15



படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

இரா.சண்முகராசு,
ஆசிரியர், புதிய ஜனநாயகம்,
4,சாமியார் தோட்டம்,
ஆலந்தூர் சாலை,
சைதாப்பேட்டை,
சென்னை - 600 015.


## காங்கிரசு மாநாடு: இரட்டைவேடம்

திருப்பதியில் மூன்று நாட்கள் நடந்து முடிந்த காங்கிரசு மாநாடு வரலாற்றுச் சிறப்புமிக்கதாக இருக்கும் என்று கூறினார்கள். நீண்ட காலமாகக் கட்சிக்குள் ஆதிக்கம் செலுத்திவந்த நேரு பரம்பரையினர் எவருடைய தலைமையும் இல்லாமல் நடக்கும் முதல் மாநாடு; கட்சியின் கொள்கை, அமைப்பு முடிவுகள் எடுக்கும் செயற்குழு பல ஆண்டுகளுக்குப் பிறகு ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்படுகிறது; ஆவடி காங்கிரசில் நிறைவேற்றப் பட்ட, நேரு-இந்திரா பின்பற்றிய 'ஜனநாயக சோசலிச'க் கொள்கைக்கு முடிவுகட்டிப் பொருளாதார சீர்திருத்தங்களை அதிகாரபூர்வமாக அறிவிக்கப்போகிறது - இவை இந்த மாநாட்டின் சிறப்புகளாகக்கூறி நம்பிக்கையூட்ட முயன்றார்கள். ஆனால் கோஷ்டிச் சண்டை, பலப்பரீட்சை, பதவிப் போட்டி, ஆடம்பரக் கேலிக் கூத்து ஆகிய காங்கிரசு அரசியல் கலாச்சார வெளிப்பாடுகள் தவிர இந்த மாநாடு முழுக்க முழுக்க ஒரு பித்தலாட்ட நாடகமாகவே நடந்து முடிந்தது.

ஜனநாயக முறைப்படி உட்கட்சித் தேர்தல்கள் நடத்திய பிறகு வந்த மாநாடு என்பதே ஒரு மோசடி. தமிழ்நாடு, கர்நாடகா, பீகார் போன்ற பத்துக்கும் மேற்பட்ட பெரிய மாநிலங்களில் கட்சித் தேர்தல்களே நடத்தவில்லை. நான்கு மாநிலங்களில் தவிர பிற மாநிலங்களில் கோஷ்டிகளிடையே பதவிகளைப் பகிர்ந்துகொண்டு தேர்தல்கள் தவிர்க்கப்பட்டன. அப்படியும் ஒரிசா, உ.பி. போன்ற மாநிலங்களில் காங்கிரசின் படுதோல்விக்குக் காரணமான பழம் பெருச்சாளிகளே தலைவர்களாகி உள்ளனர்.

''ஒருவருக்கு ஒருபதவி'' என்கிற விதியை இனி கடைபிடிக்கப் போவதாகப் பீற்றிக்கொண்ட காங்கிரசு, மீண்டும் பிரதமர் நரசிம்மராவையே கட்சித் தலைவராக்கியது. அரசியல் கொத்தடிமைகளாகவும் முகத் துதியாளர்களாகவுமே இருக்கப் பழகிய காங்கிரசு நரசிம்மராவ், அர்ஜுன்சிங், சரத்பவார், சோனியா கோஷ்டிகளாக உள்ளது. அதை மூடி மறைப்பதற்காக பொதுக் கருத்து அடிப்படையிலான செயற்குழுவைத் தெரிந்தெடுக்க இறுதிவரை பகீரத முயற்சியில் ஈடுபட்டனர். பதவிகளைப் பகிர்ந்து கொள்வதற்கான உடன்பாடு கான முடியாமல் போனதால் தேர்தல் நடந்தது; அதிலும் சரத்பவார் - அர்ஜுன்சிங் கூட்டு அதிக பதவிகளைக் கைப்பற்றவே, நரசிம்மராவ், சோனியா ஆதரவாளர்கள் படுதோல்வி கண்டனர். தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்களோ பெண்களோ தேர்வு பெறாதது குறித்து வருந்துவதாகப் பாசாங்கு செய்த நரசிம்மராவ் தனது அதிருப்தியைத்தான் வெளிப்படுத்தினார். இனிமேலாவது காங்கிரசுக்குள் ஜனநாயகம் வருமா என்றால் கிடையாது. செயற்குழுவுக்கு மேலும் பத்துப்பேரை நியமிக்கும் உரிமையுள்ள தலைவருக்குத்தான் நிரந்தரமாகவே பெரும்பான்மை இருக்கும்.

மத்தியிலும் பல மாநிலங்களிலும் ஆளும் காங்கிரசு தனது உள்நாட்டு வெளிநாட்டுக் கொள்கைகளைப் பகிரங்கமாக மக்கள் முன்பு வைக்கவும் ஆதரவு பெறவும் முயலவே இல்லை. அது இப்போது அமலாக்கும் கொள்கைகள், திட்டங்களை பூசிமெழுகி முற்போக்கு சாயம் பூசிய தீர்மானங்களை நிறைவேற்றினர்; அதையும் பழைய 'ஜனநாயக சோசலிச' சவடால்களாகப் பேசினர். இந்த நாட்டின் உள் விவகாரங்களில் தலையீடு செய்வதிலும், சர்வதேச விவகாரங்களிலும் ஏகாதிபத்திய மேல்நிலை வல்லரசுகளின் அடாவடித்தனங்களை நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆதரிக்கும் காங்கிரசு, மாறிவரும் உலக நிலைமைகளுக்கும் அமைதிக்கும், உறுதி நிலைக்கும், வளர்ச்சிக்கும் ஏற்ற வகையில் நடுநிலைக் கொள்கையில் மாற்றங்கள் செய்வதாகத் தீர்மானம் நிறைவேற்றியது. ஆனால் மாநாட்டு உரையின் போது அவர்கள்தான் உலகிலேயே முன்னணியான ஏகாதிபத்திய மேலாதிக்க எதிர்ப்பாளர்களைப் போல சவடால் அடித்தார்கள்.

உலக வங்கி, ஐ.எம்.எஃப், ''காட்'' (GATT) முதலிய மேல்நிலை வல்லரசு நிதி, வர்த்தக அமைப்புகளிடம் நாட்டை மறு அடகுவைத்து, அவற்றின் உத்திரவுகளை ஏற்று அமுலாக்கி, தேசங்கடந்த மற்றும் பன்னாட்டுத் தொழில் கழகங்களுக்கு நாட்டின் பொருளாதாரத்தை முற்றாகத் திறந்துவிடுகிறது. ஆனால் மாநாட்டில் உரையாற்றிய பிரதமரும் மந்திரிகளும் நாட்டின் சுயாதிபத்தியத்தை யாருக்கும் அடகு வைக்கவில்லை; சோசலிசம் - சுயசார்பு ஆகிய நேருவிசக் கொள்கைகளையே காலத்திற்கேற்பப் பின்பற்றுகிறோம்; சோசலிசம் என்றால் வறுமை ஒழிப்புதான், அதிலிருந்து காங்கிரசு விலகிச் செல்லவில்லை என்று வியாக்கியானம் செய்தனர். விவசாய உள்ளீடுகளுக்கும், ஏழைகளுக்கு உணவுக்கும் மானியங்கள் போதிய அளவு தரப்படும் என வாக்குறுதி அளித்தனர். தீர்மானமோ, சுயசார்பு என்பது பொருளாதார சுய நம்பிக்கையைச் சாதிப்பதுதான்; ஆகவே தொடர்ச்சியுடன் கூடிய பொருளாதாரம் சாதிக்கப்படும்; உற்பத்தித் திறன், சேமிப்பு, முதலீடு தொழில் நுட்ப நவீனமாக்குதல் ஆகியவற்றுக்காக கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதும் மறு சீரமைப்பதும் பற்றிப் பேசுகிறது.

பஞ்சாப், காஷ்மீர், அசாம், ஈழம், பாகிஸ்தான் போன்ற விவகாரங்களில் வழக்கமான பயங்கரவாத, பிளவுவாத எதிர்ப்புக் கூச்சலும் பீதியும்தான் காங்கிரசின் தீர்மானம். இவற்றை விட முக்கியமாக சாதி - மத விவகாரங்களை அரசியலுடன் இணைப்பதை, குறிப்பாக பாரதீய ஜனதா மற்றும் சிறுபான்மை வகுப்புவாதம் ஆகியவற்றைக் கடுமையாகச் சாடி தீர்மானம் நிறைவேற்றினர். ஆனால் காங்கிரசே மேல் சாதி இந்துமத வகுப்புவாத அரசியல் நடத்தி ஆதாயம் தேடுவதோடு பாரதீய ஜனதாவுடன் கள்ளக் கூட்டுச் சேர்ந்துதான் நாட்டை ஆளுகிறது. இந்து மதவெறியர்களின் அயோத்தி அராஜகத்தை ஆதரிப்பதே இதற்குச் சான்றாக உள்ளது. பொருளாதார நெருக்கடி, சிக்கனம் ஆகியவற்றை உபதேசிக்கும் காங்கிரசுதான் இந்த இரட்டைவேட, பித்தலாட்ட நாடகத்துக்காக அரசு எந்திரத்தைக் கேடாகப் பயன்படுத்தி பல கோடி ரூபாயை வாரி இறைத்து ஆடம்பரக் கூத்துக்களை அரங்கேற்றியது. ●

படிப்பகம்

www.padippakam.com

# பத்திரிக்கை மீது பாயும் பாசிச கும்பல் பல்லுடைபடும்

சரித்திரம் படைக்கிறது பார்ப்பன - பாசிச ஜெயலலிதா கும்பல். சட்டமன்ற அமைப்பின்கீழ் இவ்வளவு கேடுகெட்ட இத்தனை கொடூரமான ஆட்சி வேறு எதுவும் இருக்க முடியாது என்ற பெயரை மிகக் குறுகிய காலத்திலேயே நிலைநாட்டிவிட்டது. இதற்கு முந்தைய கொடுங்கோல் ஆட்சியாளர்கள் எல்லாம் எவ்வளவோ மேல் என்று கருதும்படி செய்துவிட்டது. மேற்கு வங்கத்தை ஆண்ட சித்தார்த்த சங்கர் ரே, பீகாரை ஆண்ட ஜெகந்நாத் மிஸ்ரா, ஒரிசாவை ஆண்ட ஜே.பி.பட்நாயக், ஆந்திராவை ஆண்ட வெங்கலராவ், கேரளாவை ஆளும் கருணாகரன் - இவர்கள் எல்லாரையும் மிஞ்சிவிட்டார், ஜெயலலிதா. தென்னாட்டு இந்திரா, எம்.ஜி.ஆரின் உடன்கட்டை வாரிசு என்பது சரியானதுதான் என்பதையும் நிருபித்துவிட்டார்.

சாதாரணமாகவே அகங்காரமும் வக்கிரமும், பேராசையும் நிறைந்தவர் என்று ஜெயலலிதாவை அறிந்தவர்கள் சொன்னார்கள். போதாதற்கு ஒரு பெரிய பிழைப்புவாத, சாதி-மதவெறி பிடித்த பழைய - புதிய பார்ப்பன கும்பலும் சேர்ந்து கொண்டது. மிருக பலமிக்க சட்டமன்ற ஆட்சியால் - ''என்னை யாரும் அசைக்க முடியாது'' என்கிற திமிரால் பதவிபோதை தலைக்கேறியுள்ளது. எனவே கள்ளும் சாராயமும் கலந்து குடித்த குரங்கைப்போல அதிகார போதையில் அராஜக ஆட்டம் போடுகிறது.

உரிமை மீறல் என்கிற பெயரில் பத்திரிகையாளர்களை சட்டமன்ற சர்வாதிகாரத்தைப் பயன்படுத்தி கூண்டிலேற்றுகிறது; ஆட்சியை அம்பலப்படுத்தும் பத்திரிகையாளர்கள் மீது பொய் வழக்குகள் போடுவதோடு, ஆளும் கட்சிக் குண்டர்களை ஏவித் தாக்குதல் நடத்துகிறது; பத்திரிகைகளை ஒடுக்கும் சட்டம் கொண்டு வருவதாக மிரட்டுகிறது. எதிர்க் கட்சி மேடைப் பேச்சாளர்களைப் பிடித்துச் சிறையிலடைக்கிறது. அடிப்படை உரிமைகளை எல்லாம் பறித்துப் பாசிச வெறியாட்டம் போடுகிறது.

**கொத்தடிமைகளின் கூடாரமாக சர்வாதிகாரியின் சட்டமன்றம்**

சட்ட மன்றத்தில் உள்ள எதிர்க் கட்சிகளின் ஏழு உறுப்பினர்கள் தவிர அனைவருமே ஜெயலலிதா போட்ட பிச்சையின் காரணமாக எம்.எல்.ஏ.- மந்திரிகளானவர்கள். அந்த நன்றி - விசுவாசம் மறவாத கொத்தடிமைகளாக, சுயமரியாதையை பதவிக்கு விற்றுவிட்ட ''அரசியல் விபச்சாரிகளாக'' அவர்

டும் மீண்டும் நிரூபிக்கின்றனர். ''இந்தப் பதவி ஜெயலலிதா போட்ட பிச்சை'' என்று பகிரங்கமாகவே கூறி காலில் விழுபவர்களே மந்திரிகளாக உள்ளனர்.

ஜெயலலிதா சபைக்குள் வந்தாலும் வெளியே போனாலும் எழுந்து நின்று மரியாதை செலுத்த வேண்டும். யாராவது வாய் திறந்தால் ஜெயலலிதாவைப் பற்றி முகத்துதி பாடிவிட்டுத் துவங்கி, முகத்துதியோடுதான் முடிக்க வேண்டும். பார்ப்பன - பாசிச ஜெயா அரசின் நடவடிக்கை எதுவாக இருந்தாலும் ஆதரித்துத்தான் பேச வேண்டும். இல்லையானால் ஈழப் போராளிகளுக்கும், எதிர்க்கட்சிகளுக்கும் குறிப்பாக கருணாநிதிக்கும் எதிரான அவதூறு - வசைபாடுதல் மட்டுமே அனுமதிக்க முடியும். ஜெயாவின் கருத்துக்கு எதிரானது மட்டுமல்ல, மாறான கருத்துக்கள் எதையுமே பேசக்கூடாது. இவைதான் ஆளும் கட்சி மற்றும் அதன் கூட்டுக் கட்சிகளின் உறுப்பினர்களுக்கான உத்திரவாக உள்ளது.

மத்தியில் ஆளும் காங்கிரசு அரசை ஜெயா கண்டித்துப் பேசும் விவகாரங்களைக்கூட மறுத்துப் பேசுவதற்கு காங்கிரசாருக்கு உரிமையில்லை. காங்கிரசுக்காரர்கள் முதுகெலும்பில்லாத பிராணிகளாக மாறிவிட்டார்கள் என்று கேலி பேசப்படுவது கண்டு வெட்கிப் போயும், அரசு சலுகைகளில் தமக்கு உரிய பங்கில்லை என்று மன்றாடியும் சில காங்கிரசுக்காரர்கள் முணுமுணுக்கத் தொடங்கினர்.



சமூக விரோதிகளின் கிரிமினல் குற்றங்கள் பெருகிவிட்டதாகவும் போலீசு தகுந்த நடவடிக்கை எடுப்பதில்லை என்றும் பாலையாவும், போளூர் வரதனும் புகார் கூறினர். போலீசு அதிகாரி வீட்டிலேயே திருட்டு நடந்ததாக போளூர் வரதன் கூறியதை போலீசு அதிகாரியே திருடியதாகக் கூறியதாகப் புரிந்துக் கொண்டு அதற்குப் போய் ஆதாரம் கேட்டார் ஜெயா! குறிப்பான போலீசு அதிகாரி மீது சுந்தர்தாஸ் புகார் கூறியதை மடக்கி உட்கார வைத்தனர். நகரத் தெருக்களில் குப்பைக் கூளங்கள் குவிந்து கிடப்பதைப் பற்றி செல்லக்குமார் புகார் கூறியபோது, அதற்கும் ஆதாரம் கேட்டுப் பாய்ந்து குதறிவிட்டார் ஜெயலலிதா.

காங்கிரசுக்காரர்கள் இப்படி பேசினால் கூட்டணியை முறித்துவிடுவோம் என்று ஒவ்வொரு முறையும் எச்சரிக்கப்பட்டனர். ஒவ்வொரு முறையும் மூத்த உறுப்பினரோ, கட்சித் தலைவரோ எழுந்து மன்னிப்புக் கேட்கும் வகையில் விளக்கங்கள் கொடுத்தனர். சட்ட மன்றத்தில் மட்டுமல்ல; அதற்கு வெளியேயும் கூட தனக்கு எதிரான, மாறான கருத்துக்களை காங்கிரசுக்காரர்கள் எவருமே பேசக்கூடாது, மீறினால் கூட்டை முறித்துவிடுவேன் என்று பகிரங்கமாகவே மிரட்டுகிறார், ஜெயலலிதா! மரியாதை கெட்ட காங்கிரசின் மூப்பனார் - வாழப்பாடி கோஷ்டிகளோ போட்டிப் போட்டுக் கொண்டு ஜெயலலிதாவுக்கு ஊழியஞ் செய்கின்றன.

வாழப்பாடி கோஷ்டியில் இருந்து விலகி மூப்பனார் கோஷ்டியில் சேர்ந்து, அந்த தைரியத்தில் ஜெயா கும்பலின் சட்டமன்ற அடாவடித்தனங்களையும், ஊழல்களையும் விமர்சித்து நக்கீரன் வார ஏட்டில் எழுதி வருகிறார் காங்கிரசின் கொள்கை பரப்புச் செயலாளர், க.சுப்பு! ஜெயாவின் மனது புண்படாத வகையில் நாசுக்காக ஜூனியர் விகடனில் எழுதி வருகிறார் பீட்டர் அல்போன்சு. இவற்றுக்கு எதிராக ஒரு நாள் ஆத்திரத்துடன் வெடித்தார் ஜெயா.

''கோட்டைக்கு மனு கொடுக்க வந்த மக்கள், ஜெயாவுக்கு நேரமில்லாததால் ஏமாற்றத்துடன் திரும்புகின்றனர்; மாற்று ஏற்பாடு செய்ய வேண்டும்'' என்கிற கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்த பீட்டர் அல்போன்சு சபையில் இல்லை. அதையே சாக்கு வைத்து ''பிரச்சினைகளை சபையில் எழுப்புவதற்கு துணிச்சல் இல்லாத பீட்டர், பத்திரிகையில் எழுதுகிறார்; எங்கே அவர்? '' என்று கூச்சல் போட்டார்.

''என்னை ஒரு பெண் இட்லர் என்று காங்கிரசின் கொ.ப.செ. எழுதி வருகிறார்; இன்னும் அவரைக் கட்சிக்குள் எப்படி வைத்துக் கொள்ளலாம்; அப்படி எழுத எங்களிடம் ஆட்கள் இல்லையா? எழுதினால் காங்கிரசு தாங்குமா? இது தொடர்ந்தால் கூட்டே பாதிக்கும்; அந்த நபரை மக்கள் கவனித்துக் கொள்வார்கள்'' என்று சுப்புவைப் பற்றி எச்சரித்து மிரட்டினார். அவரை அடக்கிவைப்பதாக மூப்பனார் கோஷ்டியும், நடவடிக்கை எடுப்பதாக வாழப்பாடி கோஷ்டியும் வாக்குறுதியளித்து, கடைசியாக கட்சியிலிருந்தே

www.padippakam.com

**பாசிஸ்டுகளின் பாசறையாக தமிழக சட்டமன்றம் மாறியது**

அரசின் கருத்துக்கள், திட்டங்களுக்கு எதிரான, மாறான கருத்துக்களைத் தெரிவித்து மக்கள் அதிருப்திகளுக்கு வடிகாலாக செயல்பட எதிர்க் கட்சிகளை அனுமதிப்பது தான் சட்டமன்ற ஆட்சி முறையின் ஜனநாயகம். ஆனால் பாசிஸ்டுகளாகிய ஜெயா கும்பல் இதைக்கூட அனுமதிப்பதில்லை என்று சர்வாதிகாரமாக நடந்துக் கொள்கிறது. அதிகார பூர்வமான எதிர்க் கட்சியாகிய காங்கிரசு, கொத்தடிமையாகிவிட்ட நிலையில், வேறு எதிர்க் கட்சியினர் ஏழு பேரே! அவர்களையும் எதற்கெடுத்தாலும் வாயடைப்பதிலும், முரண்டுபிடித்தால் தாக்குவது அல்லது வெளியே தூக்கி வீசுவதுதான் பார்ப்பன பாசிச ஜெயா கும்பலின் நடவடிக்கையாக உள்ளது.

ஜெயா கும்பல் ஆட்சிக்கு வந்து சட்டமன்றம் தொடங்கிய முதல் நாளே பண்ருட்டி ராமச்சந்திரன் தாக்கப்பட்டார். அதன் பிறகு நிலைமையைப் புரிந்து கொண்டு "திருந்திய" மனிதராகிய பண்ருட்டி நாசுக்காகவும் நழுவலாகவும் பேசி சமாளித்து வருகிறார். இல்லையேல் அவரே வெளியேறி விடுகிறார். அடுத்து, பரிதி இளம் வழுதியைப் "பறப்பயல்" என்று சாதிப் பெயரைச் சொல்லிய தோடு வேட்டியை உருவிக் கொண்டு வெளியே தூக்கி வீசப்பட்டார். அதன் பிறகு ஒரு கூட்டத் தொடரில் கூட முழுமையாக அமரவிடாமல் தொடர்ந்து வெளியேற்றப்படுவதும், கூட்டத் தொடர் முழுவதும் அவையில் இருந்து நீக்கி வைப்பதும் என அராஜக வெறியாட்டம் போடுகின்றனர். இந்தக் கூட்டத் தொடரிலேயே இரண்டாவது முறையாக தொடர் முழுவதும் நீக்கி வைக்கும் உத்திரவு போட்டனர்.

விடுதலைப் புலிகளோடும், ராஜீவ் கொலையோடும் சம்மந்தப்படுத்தியும், பழைய ஆட்சியைப் பற்றியும், கருணாநிதி குடும்பத்தைப் பற்றியும் பல குற்றச்சாட்டுகளை தி.மு.க. மீது நாள் தவறாது ஜெயாவும் பிறரும் அடுக்குகின்றனர். இதற்கு மறுப்புச் சொல்லவோ, அரசு நடவடிக்கைகளை விமர்சிக்கவோ, தானே கடத்தப்பட நடந்த முயற்சி பற்றி புகார் கூறவோகூட பரிதி இளம்வழுதியை அனுமதிப்பதில்லை. அவரை வெளியேற்றிட்டு "இன்னும் ஏன் அவையில் இருக்கிறாய்? நீயும் போய்விடுவதுதானே" என்று இன்னொரு தி.மு.க. உறுப்பினர் செல்வராசைப் பார்த்து ஏளனமாக சபாநாயகரே கூறுகிறார்.

எதற்கெடுத்தாலும் ஆதாரம் கேட்கும் முதல் மந்திரி, விதிகளைக் கூறி எதிர்த் தரப்பை அடக்கும் சபாநாயகர் ஆகியோரே அதற்கு எதிராக நடக்கின்றனர். வரவு செலவுக் கூட்டத் தொடரில் ஒத்தி வைப்புத் தீர்மானம் அனுமதிக்க முடியாது; விசாரணையில் இருக்கும் மகா மகம் பற்றிப் பேசக் கூடாது; சபையில் இல்லாதவர் பற்றிப் பேசக்கூடாது என்று தடுக்கின்றார் சபாநாயகர்.

ஆனால் மகா மகம் பற்றி தன்னிலை விளக்கம் தரவும், மற்றவர்கள் மீது பழிபோடவும், சாபம் விடவும் ஜெயலலிதா மற்றும்



ஜெயா மிரட்டலுக்கு பயந்து காங்கிரசு வெளியேற்றிய சுப்பு

அனுமதிக்கப் படுகின்றனர். சபையில் இல்லாத கருணாநிதி தினந்தோறும் தூற்றப்படுகிறார். மற்றவர்களிடம் ஆதாரம் கேட்கும் ஜெயலலிதா "ராஜீவ் கொலை பற்றி முக்கிய அரசியல் புள்ளிகள் முன்னரே பேசியதற்கான ஒலிப்பதிவு நாடாக்கள் இருந்தன; அவை அழிக்கப்பட்டுவிட்டன; அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி சி.பி.ஐ.-யிடமும் மத்திய உள்துறை மந்திரியிடமும் கேட்டேன்; அவர்கள் ஆதாரம் இல்லை, கொடுங்கள்,நடவடிக்கை எடுக்கிறோம் என்கின்றனர்; ஆனால் அப்போது நான் ஆட்சியில் இல்லாததால் என்னிடமும் ஆதாரம் இல்லை" என்று சபையில் பேசினார்.

ஆக்கபூர்வமான பணிகளுக்குத் தடை செய்வதாக எதிர்க் கட்சியினரைச் சாடி வாயடைத்துவிடும் பார்ப்பன - பாசிச ஜெயா கும்பல், ஜெயாவை முகத் துதி பாடியது போக எஞ்சிய நேரத்திலாவது உருப்படியான காரியம் ஏதாவது செய்கிறார்களா என்றால் இல்லை. சட்ட சபைக்குள் இரண்டு கொசுக்களை ஜெயா பார்த்தது, சபைக்குள் குளுகுளு எந்திரத்தைப் போட்டு வைக்கும் நேரம் - இவை பற்றிப் பேசுகிறார்கள். 1990 ஆம் ஆண்டு பிப்ரவரி 25-ந் தேதி சட்ட சபைக் குறிப்பில் கருணாநிதி கட்சி தவறாகப் பதிவு செய்துவிட்டதாகவும், இப்போது அதைத் திருத்துவதாகவும் பேசி முடிவெடுக்கின்றனர்.

சட்டமன்றத்தின் மரியாதை, புனிதம் என்பதெல்லாம் பத்திரிகைகளையும், எதிர்க் கட்சிகளையும் ஒடுக்குவதற்கானவையாகத் தான் பயன்படுத்தப்படுகின்றன. சபாநாயகரையே ஜெயா காலில் விழவைப்பது, சபாநாயகர் இருக்கையில் ஜெயாவே உட்காருவது, சபையின் உறுப்பினரல்லாத ஜெயாவின் அந்தரங்க சினேகிதி சசிகலாவை சபைக்குள் அனுமதித்து, துணைச் சபாநாயகர் இருக்கையில் உட்கார வைப்பது என்று எல்லாவகையிலும் அவர்களே அவமதிக்கின்றனர்.



பேச்சுரிமை மறுத்து கைது செய்யப்பட்ட வெற்றிகொண்டான்

**எதிர்த்தரப்பே கூடாது என்ற அல்லிராணி ஆட்சி**

சட்டமன்றத்தில் மட்டுமல்ல, வெளியிலேயும் எதிர்க் கட்சிகளும், குழுக்களும், ஜெயா கும்பலை எதிர்க்கும் - விமர்சிக்கும் பத்திரிகைகளும் கூட இருக்கக்கூடாது, ஒடுக்கி ஒழித்துவிடவேண்டும் என்பதில் இந்த அரசு தீவிரமாக உள்ளது. அதன் அதிகார முறைகேடுகள், லஞ்ச ஊழல்கள், கட்சியினரின் சமூகவிரோதக் கிரிமினல் குற்றங்கள் காரணமாக மேலும் மேலும் அம்பலப்பட்டு மக்கள் வெறுப்பு அதிகரித்துவருவதால் இத்தகைய ஒடுக்குமுறையினாலேயே அதைச் சரிகட்ட முயலுகிறது.

இதற்காக, ஜெயாவே ஒப்புக் கொள்ளுவதைப் போல ஆதாரமின்றியே ராஜீவ் கொலையில் தி.மு.க. பிரமுகர்களைக் கைது செய்யும்படி சி.பி.ஐ.-யிடமும், மத்திய உள்துறை மந்திரியிடமும் கோரினார். அது முடியாமல் போகவே தானே ஒரு சிறப்புப் புலனாய்வுக்குழு அமைத்து முன்னாள் போலீசு செயலாளரையும், சில தி.மு.க.-காரர்களையும் பத்மநாபா கொலை வழக்கைக் காட்டி 'தடா'வில் தள்ளியது. இதிலும் அரசியல் பழிவாங்கும் செயல்தான் என அம்பலப்பட்டுப் போய் மக்களிடம் எடுபடவில்லை.

அதோடு புரட்சிகர, ஜனநாயக அமைப்புகள் சிறியவையானாலும் தொடர்ந்து நடத்திவரும் இயக்கங்கள் கணிசமான அளவு மக்களிடம் சென்றுள்ளது. சிறு சிறு இனவாதக் குழுக்களாகச் சேர்த்துக் கொண்டு பாட்டாளி மக்கள் கட்சியும் தொடர்ந்து ஜெயா கும்பலை அம்பலப்படுத்தி வருகிறது. மிகப் பெரிய தேர்தல் வெற்றியைத் தொடர்ந்து உள்ளூராட்சி, கூட்டுறவு தேர்தல்களையும் நடத்தி ஆதாயம்தேடுவதில் தவறிப்போன ஜெயா கும்பல் இப்போது அத்தேர்தல்களைச் சந்திக்கவே அஞ்சுகிறது. நீதிமன்ற உத்திரவு இருந்தும் தேர்தல்களை அது தள்ளிப்போட்டிருப்பதே இதைத்தான் காட்டுகிறது.

எனவே மீண்டும் தேர்தல்களைச் சந்திக்கும் முன் எதிர்த் தரப்பை ஒடுக்கிவிடுவது என்று தீர்மானித்து வெறியோடு பாய்கிறது பார்ப்பன - பாசிச ஜெயா கும்பல். புரட்சிகர, ஜனநாயக சக்திகள் மீது இரண்டாவது சுற்று அடக்குமுறையை ஏவி கூட்டங்களுக்

படிப்பகம்

www.padippakam.com

வும் போட்டு வருகிறது. விடுதலைக் குயில்களின் மாநாடும் ம.க.இ.க.-வின் பொதுக்கூட்டங்களும் தடை விதிக்கப்பட்டு உயர் நீதிமன்றத்துக்குப் போய் அனுமதி பெற்றனர். நீண்ட பயணம் சுந்தரம், ம.ஜ.இ.க. மனோகரன், மு.இ.அ. நடராஜன் ஆகியோர் கைது செய்யப்பட்டு அரசு துரோக வழக்கு போடப்பட்டுள்ளது. ஐ.எம்.எப். கடன் எதிர்ப்பு சுவரெழுத்துக்காக கோவை ம.க.இ.க. தோழர்கள் மீண்டும் மீண்டும் கைது செய்யப்படுகின்றனர்.

ராஜீவ் கொலையுண்டதற்கு அடுத்த நாளில் இருந்து தி.மு.க. மற்றும் பிற எதிர்க்கட்சியினர் மீது ஜெயா, கட்சி குண்டர்களை ஏவித் தாக்குகிறது. மதுரை பவள விழா ஊர்வலத்தின் மீதும், சென்னை தடா எதிர்ப்பு ஊர்வலத்தின் மீதும் போலீசு துணையுடன் வன்முறை வெறியாட்டம் போட்டது. சென்னையில் போலீசு துப்பாக்கிச்சூடு நடத்தியது.

இப்போது, மேடையில் ஆபாசமாகப் பேசுவதாகக் கூறி வெற்றிகொண்டான், நன்னிலம் நடராஜன் ஆகிய தி.மு.க. பேச்சாளர்களையும், பா.ம.க.-வின் இளைஞர் அணிச் செயலாளர் கே.எம்.செரீப்பையும் கைது செய்து பொய் வழக்குப் போட்டுள்ளது. ''எதிர்க் கட்சிகளின் பொதுக்கூட்டம் பேச்சுக்கள் எல்லாம் பதிவு செய்யப்படும்; ஆபாசமாகப் பேசினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்'' என்று போலீசு அதிகாரி எச்சரிக்கிறார். ஆபாசத்தின் மொத்த உருவமே ஜெயாவும் அவரது பாதந்தாங்கிகளும் தான். அக் கட்சியின் பதிவு செய்யப்பட்ட ஒலிநாடாக்களே இதற்கு ஆதாரமாக உள்ளன.

இது போதாதென்று தன்னைக் கொல்வதற்குப் புலிகளின் தற்கொலைப் படை வந்திருப்பதாக புரளி கிளப்புகிறது. போயஸ் தோட்டத்துக்கு முன்பு நரிக்குறவர்களையும், ''வயர்லஸ்'' கருவியுடன் இருந்த ''கூரியர்'' கம்பெனி ஊழியரையும் கைது செய்து புலிகள் பிடிபட்டதாக வதந்தி கிளப்புகிறது. தர்மபுரியில் பிச்சைக்காரர் வேடத்தில் திரிவதாகவும், சேலத்தில் ''வயர்லஸ்'' கருவி இருப்பதாகவும், திருச்சியில் பதுங்கி இருப்பதாகவும் கூறி போலீசை ஏவி வீடுவீடாக சோதனை நடத்தி, பீதிகிளப்பி, பிரச்சாரம் செய்கிறது. ஆனால் உயர் போலீசு அதிகாரியே அப்படித் ''தற்கொலைப் படை'' எதுவும் வந்ததாக தகவலே கிடையாது என்று செய்தி நிறுவனத்திடம் கூறியுள்ளார்.

புலி பீதி, கொலைமுயற்சி நாடகமாடி புலிகள் இயக்கத்தைத் தடை செய்வது, பிறகு அவர்களது ஆதரவாளர் என்கிற பெயரில் யாரைவேண்டுமானாலும் சிறையிலடைப்பது ஆகிய நோக்கத்திற்காக இப்படிச் செய்கிறது. இதற்காக மத்திய அரசை நிர்பந்தித்தும் வருகிறது.

### பத்திரிகைகள் மீது பாய்ச்சல்! பார்ப்பன ஏடுகளும் பதறாம்!

பார்ப்பன - பாசிச ஜெயா கும்பலின் அக்கிரமங்களை வெளியில் தெரியாமல் இருக்க வேண்டுமானால் எதிர்க் கட்சிகளை ஒடுக்கினால் மட்டும் போதாது. பத்திரிகைகளுக்கு வாய்ப்பூட்டுப் போடவேண்டும்




என்று அக்கும்பல் முடிவு செய்து அவற்றின் மீதும் பாய்கிறது.

அதன் முதற்படியாக, சட்டமன்ற மரியாதை, கௌரவத்தைக் காப்பது என்கிற பெயரில் அதற்குரியவானளாவிய சுயாதிகாரத்தைப் பயன்படுத்தி சில பத்திரிகைகள் மீது உரிமைப் பிரச்சினை எழுப்பித் தண்டிப்பதாக முடிவு செய்துள்ளது. பரிதி இளம்வழுதி மீதான தாக்குதலைப் பற்றிய உண்மைச் செய்தி வெளியிட்டதற்காக கோவை மாலை முரசு, தினகரன் ஆகிய முன்னாள் தி.மு.க. மந்திரி குடும்ப ஏடுகள் மீது போலீசு விசாரணை நடத்தி தண்டிக்க விழைந்தது. இதே காரணத்திற்காகவும், 1989 ஆம் ஆண்டு ஜனவரியில் சட்டமன்றத்தில் ஜானகி-ஜெயா ஆதரவு கோஷ்டிகள் நடத்திய சக்களத்தி சண்டை 1990 பிப்ரவரியில் ஜெயா நடத்திய அராஜக - மானபங்கக் கூத்து ஆகியவற்றை எழுதிய ''இல்லஸ்டிரேட்டட் வீக்லி'' நிருபர் கே.பி.சுனில், ஆசிரியர் மீது உரிமைப்பிரச்சினை எழுப்பி தண்டிக்க உள்ளது.

தொடர்ந்து, கருணாநிதி குடும்ப ஏடுகளான தமிழன், முரசொலி மீது பாய்ந்தது. அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்ட பகுதிகளைப் பிரசுரித்ததாக இவற்றின் மீது குற்றஞ் சாட்டுகிறது. இப்படிப் பத்திரிகையாளர்களை தண்டிப்பதற்கென்றே தனியான குற்றவாளிக் கூண்டுகட்டி அவமானப்படுத்தும் வேலை செய்கிறது.

சபையின் உரிமை மீறல் விவகாரத்தைக் கிளப்பிப் பத்திரிகைகளைத் தண்டிப்பதற்குக் காரணமே, பெரும்பான்மை பலமுடைய இவர்களது முடிவே இறுதியானது; அதற்குமேல் மேல்முறையீடு செய்யமுடியாது என்பதுதான். முறைப்படியான நீதிமன்ற வழக்குகளில் எல்லாம் இந்தக் கும்பல் தோற்றுப் போவதும் நீதிமன்றத்தையே சாடி, மிரட்டி அடக்கவும் விடுவதும் சட்டமன்ற விவகாரங்கள் அல்லாதவற்றுக்கும்

பத்திரிகைகள் மீது பொய்வழக்குப் போடுவதுமே இதற்குச் சான்றாகும்.

எதிர்க்கட்சி ஏடுகள் தவிர, பார்ப்பனரல்லாதவை உட்பட அனைத்துமே பார்ப்பன - பாசிச ஜெயா கும்பல் ஆட்சிக்கு வருவதில் முக்கிய உதவி செய்திருக்கின்றன. அதனால்தான், ''சட்டமன்றத்தில் எதிர்க் கட்சிகள் ஒற்றைபடையாகப் பலவீனப்பட்டிருந்ததாலும் பத்திரிகைகள் எதிர்த் தரப்பாக இருந்து விமர்சிக்கலாம்'' என்று பதவியேற்றதும் ஜெயா கூறினார்.

ஆனால் இப்போது சட்டமன்ற அக்கிரமங்கள், ஜெயாவின் முகத்துதி, சுயவிளம்பரங்கள், சாராய ஆலை - நிலபேர ஊழல்கள், ஆண்-பெண் எம்.எல்.ஏ., எம்.பி.-க்களின் ரௌடித்தனங்கள் மட்டுமல்ல ஆபாச - விபச்சாரக் கூத்துக்களையும் பத்திரிகைகள் எழுதுகின்றன என்பதால் ஆத்திரமடைந்துள்ளது பார்ப்பன - பாசிச ஜெயா கும்பல். இதற்கு முன்னோடியாக ஜெயாவின் இரகசிய வாழ்க்கை வரலாற்றை எழுதிவிடும் என்றஞ்சி அவரது முன்னாள் அந்தரங்க உதவியாளர் வலம்புரி ஜான் துவங்கிய ''ராஜரிஷி'' பத்திரிகையின் மீது மானநட்ட வழக்குப் போட்டதோடு, போலீசை ஏவி சட்ட விரோதமாகப் பறிமுதல் செய்தார் ஜெயலலிதா.

''பட்ஜெட்'' ரகசியங்களை வெளியிடுமென்று நக்கீரன் மீது பொய்வழக்குப் போட்டு அதன் ஆசிரியர் குழுவினரைக் கைதுசெய்தார். அச்சகத்தாரை மிரட்டி, மின் இணைப்பைத் துண்டித்துத் தொல்லை கொடுத்தார். இப்போது க.சுப்புவின் ''இங்கே ஒரு பெண் இட்லர்'' என்கிற தொடரையும் ஜெயாவின் நிலபேர - சாராய ஊழல்களை அம்பலப்படுத்துவதையும் கண்டு ஆத்திரம் அடைந்து தனது கட்சிக் குண்டர்களை ஏவி ஆங்காங்கே பத்திரிகைகளைப் பறித்து எரித்தார்; முகவர்கள், விற்பனையாளர்களைத் தாக்கினார். நக்கீரன் அச்சகத்தாரைக் கைது செய்து, ஆசிரியருக்கு பிடிவாரண்ட் போட்டுள்ளார்.

பாசிச ஜெயாவின் பத்திரிகைகள் மீதான தாக்குதல் பார்ப்பன ஏடுகளான இந்துவையும் இந்தியன் எக்ஸ்பிரசையும் கண்டிப்பதாகவும், எல்லா பத்திரிகைகளுக்கும் வாய்ப்பூட்டுச் சட்டம் போடுவேனென்று மிரட்டுவதாகவும் விரிவடைந்துள்ளது. மகாமகம் கொலையையும், சங்கராச்சாரியுடன் முரண்பட்டதையும் தொடர்ந்து பார்ப்பன ஏடுகளும் முன்னைப்போல தீவிரமாக ஜெயா கும்பலை ஆதரிப்பதில்லை என்று ஆத்திரப்படுகிறார். பத்திரிகைகளுக்கு வாய்ப் பூட்டுப் போட முயன்ற எம்.ஜி.ஆர், ராஜீவ், ஜெகந்நாத் மிஸ்ரா முயற்சிக்கு நேர்ந்த கதியைக் காட்டி அப்பத்திரிகைகள் ஜெயாவை எச்சரிக்கின்றன.

என்னவானாலும் என்னை யாரும் அசைக்க முடியாது என்கிற திமிரின் உச்சியில் அராஜக ஆட்டம் போடுகிறது பார்ப்பன - பாசிச ஜெயா கும்பல். இது இப்படியே நீடிக்க முடியாது. ஒரு பேரெழுச்சியில் அக்கும்பலை மக்கள் விரட்டியடிக்கும் நாள் வெகுதூரம் இல்லை.

● ஆர்.கே.

www.padippakam.com

# போபார்ஸ்: கொள்ளையை மறைக்க புதிய சதி



போபர்ஸ் கொள்ளையில் சிக்கிய குற்றவாளிகளை விட, இக் கொள்ளையை மூடி மறைக்க நடந்த சதிகளும் சதிகாரர்களும் தான் அதிகமாக இருப்பார்கள் போலிருக்கிறது. இப்போது மத்திய வெளியுறவு (முன்னாள்) மந்திரி சோலங்கியின் தலைமையில் ஒரு புதிய திரை மறைவுச் சதி நடந்துள்ளது. போபர்ஸ் கொள்ளையை மூடி மறைக்கப் போய், அம்பலப்பட்டு மாட்டிக் கொண்ட அவர், அதற்கு விலையாக தனது நாற்காலியையே பறிகொடுத்து விட்டார்.

கடந்த ஜனவரி மாத இறுதியில் சுவிஸ் நாட்டின் டேவோஸ் நகரில் நடைபெற்ற உலகப் பொருளாதார அரங்கின் மாநாட்டுக் கூட்டத்தில் கலந்து கொள்ள சோலங்கி சென்றிருந்தார். அங்கு 4 நாட்கள் தங்கியிருந்த அவர் நாடு திரும்பும் போது சுவிஸ் வெளியுறவு அமைச்சரான ரினீ ஃபெல்பரைச் சந்தித்து 5 பக்கங்களைக் கொண்ட கடிதம் ஒன்றைக் கொடுத்தார். அதில், இந்தியக் கோர்ட்டில் போபர்ஸ் விவகாரம் முடிவுக்கு வரும் வரை சுவிஸ் கோர்ட்டில் எந்த நடவடிக்கையும் எடுக்க வேண்டாம்; விசாரணையை தாமதப் படுத்துங்கள் என்று கோரப் பட்டிருந்தது.

சோலங்கியின் அயோக்கியத்தனமான தில்லுமுல்லுகளை ''எக்ஸ்பிரஸ்'' நாளேடு மார்ச் 30 -ம் தேதியன்று அம்பலப் படுத்தியதும் முதலில் இவற்றை மறுத்தார் சோலங்கி. அடுத்த நாளே ''எக்ஸ்பிரஸ்'' நாளேடு சுவிஸ் வெளியுறவு அமைச்சரிடம் அவர் கொடுத்த கடிதத்தை அப்படியே வெளியிட்டு அம்பலப்படுத்தியது. அதைத் தொடர்ந்து சுவிஸ் அரசும் இதை உறுதிப்படுத்தியது. அதன் பிறகு சோலங்கி வேறு வழியின்றி கடிதம் கொடுத்தது உண்மைதான் என்று ஒப்புக் கொண்டு, நவீன அரிச்சந்திரனாக மாறி நாடகமாடத் தொடங்கினார்.

யாரோ ஒரு இந்திய வக்கீல், சுவீஸ் வெளியுறவு அமைச்சரை சந்திக்கும் முன்பு சோலங்கியிடம் இந்தக் கடிதத்தைக் கொடுத்து அவரிடம் சேர்ப்பிக்கக் கோரினாராம். அக் கடிதத்தின் முன் பக்கத்தை மட்டும்தான் சோலங்கி படித்துப் பார்த்தாராம். பின் பகுதியில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று அவருக்கே தெரியாதாம். நம்பச் சொல்கிறார் சோலங்கி! ''எக்ஸ்பிரஸ்'' நாளேட்டின் ஆசிரியர் பிரபு சாவ்லாவும், அதன் ஐரோப்பிய புலனாய்வுச் செய்தியாளர் சித்ரா சுப்பிரமணியமும் அம்பலப் படுத்தியதைத் தொடர்ந்து எதிர்க் கட்சிகள் நாடாளுமன்றத்தில் பெருங்கூச்சல் போட்டதும், தனது



செயலுக்கு வருத்தம் தெரிவித்த சோலங்கி இப்படியொரு அரிச்சந்திர நாடகமாடினார். ஆனால் இன்னும் பல தகிடு தத்தங்கள் வெளியாகிவிடுமோ என்றஞ்சிய நரசிம்மராவ் அரசு, அடுத்த நாளே அவரை நாற்காலியிலிருந்து இறக்கி, எதிர்க் கட்சிகளின் வாயை அடைத்தது.

உண்மையில் கொள்ளையைப் மூடி மறைக்க ஒரு புதிய சதி திட்டமிட்டு நடந்துள்ளது. சுவிஸ் நாட்டில் நடந்த பொருளாதார மாநாட்டில் கலந்து கொள்ள சோலங்கியை அனுப்புவதாக இந்திய அரசு முதலில் தீர்மானிக்கவில்லை. கடைசி நேரத்தில் அவசரமாக அவரது பயணம் ஏற்பாடு செய்யப்பட்டது. இம் மாநாட்டின் இறுதி நாளன்று பிரதமர் நரசிம்மராவும் கலந்து கொள்ள முடிவு செய்யப் பட்டது. உலகின் மிகப் பெரிய கோடீசுவரர்கள், முன்னாள் அதிபர்கள், பிரதமர்கள், அதிகாரத் தரகர்கள் கூடிக் களிக்கும் இந்த மாநாடு இந்தியாவுக்கு எந்த வகையிலும் முக்கியத்துவமுடையது அல்ல.

ஆனாலும், போபர்ஸ் கொள்ளையை மூடி மறைக்க கிடைத்த இன்னுமொரு வாய்ப்பாக கருதி, கொள்ளையர்களின் பிரதிநிதிகளாகவே சோலங்கியும் நரசிம்மராவும் சுவிஸ் நாட்டுக்குச் சென்றனர்.

ஏற்கனவே செய்து கொண்ட ஏற்பாட்டின்படி, போபர்ஸ் கொள்ளையில் சிக்கிய முக்கிய குற்றவாளிகளான இந்துஜாக்களும் சுவிஸ் நாட்டுக்கு வந்திருந்தனர். நரசிம்மராவுக்கும் சோலங்கிக்கும் ஆடம்பரமான வரவேற்பும், சாராய விருந்தும் இந்துஜாக்களால் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்து ஜாக்களால் தயாரிக்கப்பட்ட கடிதமும் சோலங்கி மூலமாக சுவிஸ் வெளியுறவு அமைச்சரிடம் சேர்க்கப் பட்டது.

இந்தியக் கோர்ட்டிலேயே போபர்ஸ் விசாரணை மீது நீதிபதிகள் சந்தேகப்படுவதால், ரகசிய சுவிஸ் வங்கிக் கணக்கு பற்றிய விசாரணையை ரத்து செய்ய வேண்டுமென்று ஜெனிவா கோர்ட்டில் எதிர் வழக்காடி வந்தது இந்த இந்துஜாக்கள்தான். இந்தியக் கோர்ட்டில் போபர்ஸ் விசாரணை மீது மீண்டும் சந்தேகங்களை எழுப்பி, இதுவரை புலனாய்வுத் துறையினர் நடத்திய விசாரணையையும் முதல் தகவல் அறிக்கையையும் ரத்து செய்து தீர்ப்பளித்துவிடுவது; அதை ஆதாரமாகக் காட்டி ஜெனிவா கோர்ட் விசாரணையையும் ரத்து செய்துவிடுவது என்பதுதான் இந்துஜாக்கள் மற்றும் ராவ் கும்பலின் திட்டம். இதன்படி, இந்திய கோர்ட்டில் தீர்ப்பளிக்க கால அவகாசத்தைப் பெறுவதற்காகவே ஜெனிவா கோர்ட் விசாரணையைத் தாமதப் படுத்துமாறு கடிதம் மூலம் கோரியுள்ளனர். இத்திரை மறைவுச் சதியை மூடி மறைக்கத்தான் சோலங்கியைப் பலிகடாவாக்கி பதவி விலகல் நாடகம் நடத்தப்பட்டுள்ளது.

இருப்பினும், சோலங்கியின் கடிதத்தைப் புறக்கணித்து விடுமாறும், மீண்டும் விசாரணையைத் தொடருமாறும் சுவிஸ் அரசுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், விசாரணையை நேர்மையாக நடத்துவதில் முழுமையாக அக்கறை கொண்டுள்ளதாகவும், ''இந்திய மக்களே, என்மீது நம்பிக்கை வையுங்கள்'' என்றும் யோக்கிய சிகாமணியாக வேஷங்கட்டி ஆடுகிறார் நரசிம்மராவ். ஆனால் ராஜீவ் ஆட்சியில் அவர் வெளியறவு அமைச்சராக இருந்த போது, ரகசிய உலகப் பேர்வழிகளுடன் கூட்டுச் சேர்ந்து போபர்ஸ் கொள்ளையை திசைதிருப்ப, வி.பி.சிங்கின் மகனுக்கு செயிண்ட கிட்டீஸ் தீவிலுள்ள ரகசிய வங்கியில் கணக்கு இருப்பதாக போலியான ஆவணங்களைத் தயாரிக்க உடந்தையாக இருந்தவர்தான் நரசிம்மராவ். இப்போது அவர் பிரதமரானதும், போபர்ஸ் ஊழலை புலன் விசாரணை செய்து வந்த சி.பி.ஐ.யின் இணை இயக்குனரான மாதவனை பொறுப்பிலிருந்து நீக்கிவிட்டு, ராஜீவின் விசுவாசியான சர்மாவை நியமித்துள்ளார். இதுவும் போதாதென்று மணிசங்கர் அய்யர், சிதம்பரம், மார்க்ரெட் ஆல்வா, ஜெயந்தி நடராஜன் முதலான காங்கிரசு பெருச்சாளிகள் மாண்டு போன தலைவரின் முகத்தில் கரிபூச நினைப்பது கீழ்த் தரமான செயல் என்றும் விசாரணையே தேவையில்லை என்றும் நாடாளு மன்றத்திலேயே கூச்சல் போடுகின்றனர். இத்தகைய காங்கிரசுக் கயவாளிகள் போபர்ஸ் விசாரணையை நேர்மையாக நடத்துவார்கள் என்று நம்புவதற்கு நாட்டு மக்கள் முட்டாள்களல்ல.

தில்லு முல்லுகள், திரை மறைவுச் சதிகள் மூலம் போபர்ஸ் கொள்ளையை மூடி மறைத்து, ராஜீவுக்கு ஏற்பட்ட களங்கத்தைப் போக்கிவிடலாம் என்று காங்கிரசு கழிசடைகள் கணக்கு போடுகின்றனர். ஆனால் இதன் எதிர் விளைவாக போபர்ஸ் விவகாரம் இன்னும் பல ஆண்டுகளுக்கு தொடர்ந்து நீடிக்கவே செய்யும்; பீரங்கிக் கொள்ளைக்காரன் ராஜீவும் நாட்டு மக்கள் மனதில் நீங்கா இடம் பெற்றுவிடுவார்!

● குமார்

படிப்பகம்

www.padippakam.com

## பட்டினிச் சாவுகள்

# இந்தியா எத்தியோப்பியா ஆகிறது

பாசிச ராஜீவ் காலத்தில் 1986-ல் ஒரிசா - கலாகாந்தியில் ஆயிரக்க ணக்கானவர்கள் பட்டினியால் மாண்டனர். அப்போது கலாகாந்தியை இந்தியாவில் ஒரு எத்தியோப்பியா என்றது பத்திரிகை உலகம். ஆனால் இன்று இந்திய மாநிலங்க ளனைத்திலும் மக்கள் பட்டினிக்கு பலியாவ தைப் பார்த்தால் இந்தியாவே ஒரு எத்தி யோப்பாவாகிவிட்டது என்பதுதான் உண்மை.

கடந்த ஆண்டில் ஆந்திர நெசவாளர்க ளும், கர்நாடக விவசாயிகளும், திரிபுரா மலைவாழ் மக்களும் என்று நூற்றுக் கணக் கானவர்கள் பட்டினிச்சாவிற்கு இரையா னார்கள். இந்த ஆண்டு பிப்ரவரி - மார்ச் மாதங்களில் மட்டும் குஜராத், மத்திய பிரதே சம், மகாராஷ்டிரத்தில் குறைந்தது 100 பேர் பட்டினிக்கு பலியாகியுள்ளனர். கலாகாந்தி யில் மீண்டும் எண்ணற்றவர்கள் பட்டினிச்சா வின் விளிம்பிற்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

குஜராத் - பாச்செள மாவட்டத்தின் சுராஜ்பாரி கிராமத்தைச் சேர்ந்த புரா அகமது ஜாபாய் என்பவர் 15 நாட்களாக பட்டினி கிடந்து பிப்ரவரி 14 -ந் தேதி இறந்து போனார். இவரும் இவரது மனைவி ஹஜ்ரா பாயும் வறட்சி நிவாரண பணித் திட்டத்தின் கீழ் அரசு அமைத்துள்ள கல்லுடைக்கும் இடத்தில் வேலை செய்தார்கள். பகல் முழு வதும் வெயிலில் கருகிவிட்டு வரும் இவர்க ளுக்கு ஒரு நாள் கூலி 4 அல்லது 5 ரூபாயே! இதுவும் முறையாகவும் முழுவதுமாகவும் கிடைப்பதில்லை. எப்பொழுதாவது கொஞ்ச பணம் கிடைக்கும். அதுவரை பட்டி னிதான். "15 நாட்களாக நானும் எனது கண வரும் டித்தண்ணியும், சேத்துத்தண்ணியுமே (குடிக்க இங்கு இது கூட கிடைப்பது அரிது) குடித்து காலந்தள்ளினோம். முடியாமல் அவர் போய்விட்டார். நானும் அவரைப் போலத்தான் சாகவேண்டி வரும்" என வேதனையை கொட்டுகிறார், ஹஜ்ராபாய்.

மத்திய பிரதேசம்-சர்குஜா மாவட்டத் தின் பிஜாகுரா கிராமத்தைச் சேர்ந்த முதிய வர் ரிபாய் பாண்டே ஒரு விவசாயி! பல நாள் பட்டினி கிடந்ததால் உடல் குன்றிப் போய் மருத்துவ மனையில் சேர்க்கப்பட் டுள்ளார். இவரை பத்திரிக்கையாளர்கள் அணுகியபோது இவர் கூறிய செய்தி அனை வரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. விவசா யம் இல்லாததால் கூலி வேலையின்றி இவ ரது மகன் பெரிதும் கஷ்டப்பட்டார். காட்டி லிருந்து வெட்டிக்கொண்டும் வரும் கிழங்கு-வேர் முதலியவற்றை குடும்பத்தில் பிறருக்கு விட்டுக் கொடுத்து பட்டினியாகவே கிடந்த வர், சில மாதத்திற்கு முன்பு இறந்து போனார். அதற்குப் பிறகு குடும்பத்தினரின் பட்டினிக் கொடுமை மேலும் அதிகரித்தது. பசி தாங்க முடியாமல் கைக் குழந்தை கடந்த மாதம் பிப்ரவரி 9-ந் தேதி இறந்தது. நான்கு வயது பையன் அடுத்த நாளே இறந்தான். பசிக் கொடுமையோடு கணவனும் பிள்ளை களும் பிரிந்த துக்கமும் சேர்ந்து வாட்டவே ரிபாய் பாண்டேயின் மருமகளும் சில வாரங்களில் உயிர்துறந்தார். ஒரு குடும்பத் தையே பசி தின்று விட்டது!

பூலிதுமார் கிராமத்தில் பூல்சாய் என்ற முதியவர் பட்டினியால் மாண்டார். இவரது மகன் அமார்சை இனியும் உள்ளூரில் வேலை கிடைக்கும் என நம்பியிருக்க விரும்பவில்லை. அருகிலுள்ள உத்திர பிர தேசத்திற்கு வேலை தேடிப் போய்விட்டார். அமார்சையின் தாயும் மனைவியும் மக்க ளும் தற்போது பசியோடு போராடிக் கொண்டிருக்கிறார்கள். "நாங்கள் மூன்று நாளாக சாப்பிடவில்லை. தண்ணீர் மட்டுமே கிடைத்தது. இன்றைக்கு பழுக்காத பழம் கொஞ்சம் கிடைத்திருக்கிறது. அவ்வளவு தான்! முன்பெல்லாம் சீமல் பூவியிலிருந்து ரொட்டி சுட்டு தின்போம். இப்போது அது வும் கிடைக்கவில்லை" என்கிறார், அமார் சையின் மனைவி கிஸ்மதியா.

மேலும் பிஜாகுரா கிராமத்தில் கங்கா பிரசாத் கோண்ட் என்பவரது தாயும், நௌ கெயின் கிராமத்தின் பிர்ஜூ கோண்ட் என்ப வரும் பட்டினிச் சாவுக்கு இரையானார்கள்! ஒருநாத் நகரை சுற்றியுள்ள கிராமங்களில் இப்படி 12 பேர் மாண்டனர்.

மகாராஷ்டிரம் - தானே மாவட்டத்தில் உள்ள ஹவர் மலைப் பகுதி வாழ் மக்கள் வெளியுலக தொடர்புகள் துண்டிக்கப்பட்டு கிடக்கிறார்கள். இவர்களது நாகரிகம், அரசி யல், பொருளாதாரம் எல்லாம் மிகவும் பின் தங்கிய பழைய உற்பத்தி முறையோடு பிணைந்துள்ளது. இயற்கையோடு சார்ந்தி ருந்த இம்மக்கள் தற்போதைய வறட்சியால் - பஞ்சத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டு உயி ருக்குப் போராடி நிற்கிறார்கள். பட்ட மரத் தின் இலைகளையும், சருகான பழங்களை யும் உணவுக்காக இன்று தேடியலைகிறார் கள். கடந்த மார்ச் மாதத்தில் மட்டும் 40 பச்சிளங் குழந்தைகள் பட்டினிக்கு பலியாகி யுள்ளனர்.

ஒரிசா - கலாகாந்தியின் நிலைமையோ மேலும் மேலும் மோசமாகியே வருகிறது. இது ஒரு குட்டி பாலைவனமாக காட்சியளிக் கிறது. அதில் எலும்புக் கூடுகளாகதான் மனி தர்களைப் பார்க்க முடிகிறது. நாட்களை எப் படி கழிக்கிறார்கள் என்று அவர்களுக்கே சொல்லத் தெரியவில்லை என ஒரு பத்திரிக் கையாளர் குறிப்பிடுவதிலிருந்தே அங் குள்ள நிலைமையின் தீவிரத்தை நாம் புரிந்து கொள்ள முடியும்.

சமவெளிப் பகுதிக்கும் பட்டினிச்சாவுகள் பரவுகிறது. வறட்சியால் வாழ்விழந்து நிற்கும் விவசாயக் குடும்பம்.



இந்தியாவின் அநேக விவசாய நிலங்கள் தரிசாகி - பொட்டல் காடாகி விட் டன. வறட்சி காலத்தில் மட்டுமல்ல; பருவ

படிப்பகம்

www.padippakam.com

மழை காலத்திலும் கூட இந்நிலங்களின் நிலை இதுதான். விளைச்சலின் அளவும், விளை நிலங்களின் அளவும் படிப்படியாக குறைந்து வருகிறது. வறட்சி பாதித்த பகுதிகளின் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. வேலையிழக்கும் கூலி விவசாயி பஞ்சம் பிழைக்க நகரத்தை தேடியலைகிறான். எண்ணற்ற கிராமங்களில் விவசாயக் குடும்பங்கள் நிரந்தரப் பட்டினியில் தள்ளப்பட்டுவிட்டார்கள். காடு - கழனிகளில் இலவசமாகக் கிடைக்கும் காய், கனி, பூ, இலை, தழைகளைக் கொண்டு பல நாட்களுக்கு ஒரு முறை-ஒரு வேளை வயிறாறுகிறார்கள். ம.பி.-சர்குஜா மாவட்டத்தில் மக்கள் விஷச் செடிகள் - வேர்களைக் கூட எடுத்துவந்து வெந்நீரில் பல நாள் போட்டு விஷத் தன்மையைப் போக்கி பின் உண்ணுகிறார்கள். இருந்தாலும் அதன் விஷத் தன்மை முற்றிலும் நீங்கி விடுவதில்லை; அவை சிறுநீரகத்தைப் பாதிக்கின்றன என்கிறார் ஒரு மருத்துவர். இதைவிட கொடுமை குஜராத் - சுராஜ்பாரி கிராமத்தில் சிலர் பட்டினியால் சிறுகச் சிறுகச் சாவதை விரும்பாமல் மொத்தமாக போய்விடலாம் என தற்கொலை செய்து கொண்டுள்ளனர். கலாகாந்தியில் எண்ணற்றவர்கள் பட்டினி கிடந்ததால் குடல் சம்பந்தமான நோயில் வீழ்ந்து கிடக்கிறார்கள். வறட்சி பாதித்த பகுதிகளில் எல்லாம் பட்டினிக்கு முதலில் தாக்கப்பட்டு குழந்தைகளே கொத்து கொத்தாக சாகிறார்கள்.

''இல்லை, இல்லை யாரும் பட்டினியால் சாகவில்லை; நோய் கண்டே இறந்தார்கள்'' என்பது அந்தந்த மாநில ஆளுங்கட்சியின் வாதம். சரி நோய் எப்படி வந்தது என்று ஆராய்ந்தாலும் அதற்கும் பசிதான் விடையாக கிடைக்கிறது. சத்தான உணவின்மை - போதிய உணவின்மையால் பல்வேறு நோய்களுக்கு ஆளாகி சாவின் படுக்கையில் தள்ளப்பட்டார்கள் என்று மருத்துவர்களும் பத்திரிக்கையாளர்களும் ஆதாரங்களுடன் அம்பலப்படுத்தினர். இதுவன்றி 1986-ல் கலாகாந்தியில் பட்டினியால்தான் செத்தார்கள் என ஒரிசா உயர்நீதி மன்றம் கடந்த பிப்ரவரியில் தீர்ப்பளித்துள்ளது. இத்தீர்ப்பு பிற மாநிலங்களின் பட்டினிச் சாவிற்கும் பொருந்தும். இதில் வேடிக்கை என்னவென்றால் தாங்கள் ஆளும் மாநிலங்களில் நடந்த பட்டினிச் சாவை மறுத்துக் கொண்டே எதிர் கட்சியினர் ஆளும் மாநிலங்களில் நடந்த பட்டினிச் சாவை மட்டும் அங்கீகரித்து சாடுகிறார்கள்; தாக்கி அறிக்கை விடுகிறார்கள், ஓட்டுக் கட்சிக் காரர்கள்.

தொடர்ச்சியாக அம்பலப்பட்டு போவதாலும், மக்களின் எதிர்ப்பை சம்பாதித்துக் கொள்ள விரும்பாமலும் ஆள்பவர்கள் மறைமுகமாக பட்டினிச் சாவை அங்கீகரித்து நிவாரணப் பணிகளை அறிவித்து ஏய்க்கிறார்கள். பட்டினிச் சாவுகள் கலாகாந்தியில் நடந்து சந்தி சிரித்ததும் பல வறட்சி நிவாரணத் திட்டங்களை அறிவித்து பஞ்சப் பகுதி இனி பசுமைப் பகுதியாகிவிடும் என ஜால வித்தைக் காட்டினர். வறட்சி பாதித்த பகுதிக்கான திட்டம் (DPAP) வறுமை ஒழிப்பு - வளர்ச்சி பணிக்கான பகுதி (ADAPT), கிராமப்புற ஏழைகளின் பொருளாதாரத்தை புணரமைக்கும் திட்டம் (ERRP), மலைவாழ் மக்கள் முன்னேற்றத்திற்கான ஒருங்கிணைப்புத் திட்டம் (ITDP) மற்றும் கிராமப்புற விவசாயிகள், இளைஞர்கள், பெண்கள், குழந்தைகள் வளர்ச்சிக்குரிய திட்டங்கள் (IRDP, RLEGP, JRY, ITDA, KADA, NREP, DWRCA முதலியவை). என்று ஆத்தாளும், பிள்ளையும் ஆளாளுக்கு அறிவித்து புரட்சி செய்து விட்டதாக தம்பட்டமடித்தனர். இத்திட்டங்கள் எல்லாம் அரசியல் செல்வாக்கை தக்கவைத்து ஓட்டுப் பொறுக்கும் நோக்கத்திலேயே கொண்டுவரப்பட்டன. எனவேதான் பல நூறு கோடிகளை விழுங்கியும் இத்திட்டங்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எவ்வித பயனையும் தரவில்லை.



ராஜீவ் ஆட்சியிலும் பட்டினி; ராவ் ஆட்சியிலும் பட்டினி. நடை பிணமாகிவிட்ட கலாகாந்தி விவசாயி.

கலாகாந்தியில் வறட்சி பாதித்த பகுதிக்கான திட்டத்தின் கீழ் 500 சிறிய நீர் தேக்கும் நிலைகளை அமைத்தார்கள். இவற்றில் எதுவும் இன்று நீர் தேக்கி வைக்கும் நிலையில் இல்லை. 4000 கிணறுகளும், 5000 ஆழ்குழாய் கிணறுகளும் கலாகாந்தியில் அமைப்பதற்கு பரிந்துரையாகியும் நடைமுறையாகாமல் முடங்கி கிடக்கிறது. இதே போல் இப்பகுதியில் சிறிய அணைக்கட்டுத் திட்டங்கள் இரண்டு திட்டமிடப்பட்டு காகிதத்திலேயே தூங்குகிறது.

பட்டினியால் சிறுகச் சிறுக
சாவதைவிட மொத்தமாக
போய்விடலாம் என்று
குஜராத்தில் சில
விவசாயிகள் தற்கொலை
செய்து கொண்டுள்ளனர்.

நாடுமுழுவதும் வறட்சி
பகுதிகளில் பட்டினியால்
தாக்குண்டு குழந்தைகளே
கொத்துக் கொத்தாக
சாகிறார்கள்.

படிப்பகம்

ம.பி.யில் பட்டினிச்சாவுகள் அம்பலமானதும் தற்போதைய பாரதீய ஜனதா கட்சியின் அரசு இலவச அரிசி வழங்கும் திட்டத்தை அறிவித்தது. இன்றைக்கு அரிசி வழங்கப்படும் என்ற அறிவிப்பு வந்ததும் கிராம மக்கள் பொது இடத்தில் கூடி அரசு ஜீப் வரும் என காத்திருப்பார்கள். பல நாள் அரசு ஜீப் வராமல் ஏமாந்து திரும்பியுள்ளனர். பசிக் கொடுமையோடு இத்தகைய கொடுமை வேறு!

அரசின் திட்டங்கள் - சலுகைகள் அனைத்தும் ரேசன் கடை சலுகை விலை பொருட்கள் உட்பட உள்ளூர் ஆதிக்க கும்பலாலும், வர்த்தக சூதாடிகளாலும், அரசு அதிகாரிகளாலும் அபகரித்துக் கொள்ளப்படுகின்றன. இவர்களில் ஒருவராகவோ அல்லது இவர்களுடன் கூட்டுக் கொள்ளை அடிப்பவர்களாகவோ உள்ளூர் அரசியல் தலைவர்கள் இருப்பதால் எவ்வித சிறு பயனையும் மக்கள் அடைவதில்லை. பட்டினிச் சாவின் கொடுமை தொடர்வதற்கும் பரவுவதற்கும் உரிய அடிப்படைகளே இங்கு நிலவுவதால் கொத்து கொத்தாக மக்கள் பசியால் சாகும் செய்தி இனி நம்மை அன்றாடம் எட்டும். கடந்த மார்ச் மாத கடைசி வாரத்தில் தர்மபுரியைச் சேர்ந்த 35 மலைவாழ் மக்கள் பிழைப்புக்காக புதுக்கோட்டை வந்து வேலை செய்தும் கூலி கிடைக்காததால் பசியோடு நடைப்பிணமாக தர்மபுரி திரும்பியவர்கள் மயக்கமடைந்து விழுந்துள்ளனர். எனவே நாம் தமிழ்நாட்டிலும் நேரிடையாக பட்டினிச்சாவை காணவோ, நாமே பட்டினிச் சாவிற்கு இலக்காகவோ வெகுநாள் பிடிக்காது.

மலைவாழ் மக்களும் - விவசாயிகளும் பட்டினிச் சாவிற்கு பலியாவதற்கு இன்னொரு முக்கிய காரணம் நிலப் பிரப்புத்துவச் சுரண்டல். கொத்தடிமைகளாகவும் கூலி விவசாயிகளாகவும் நிலப் பிரபுக்களாலும் கைகழுவி விடப்படுகிறார்கள். நிலத்தையும்

www.padippakam.com

# முற்போக்கு இளைஞர் அணியின் ஒப்புதல் வாக்குமூலம்!

''எண்பதுகளில் அரசியலும் பொருளாதாரமும்'' என்ற திருச்சி ஆய்வரங்கம் பற்றி கடந்த புதிய ஜனநாயகம் இதழில் எழுதியிருந்தோம். அந்த ஆய்வரங்கத்தின் ஒரு நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கிய முற்போக்கு இளைஞர் அணியின் நடராசன் பின்வருமாறு புதிய ஜனநாயகம் ஏட்டிற்குக் கடிதம் எழுதியுள்ளார்.

*அன்புள்ள தோழருக்கு!*

*திருச்சி கருத்தரங்கம் பற்றிய கட்டுரையில் சில தவறான தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.*

*கட்டுரையில் "அத்தோடு மார்க்சிய ஆசான்களின் மீது வேணு போன்றவர்கள் அவதூறு செய்ததைக் கண்டித்து பேசவோ, விளக்கமளிக்கவோ முயலாமல் இருந்தது" என்று குறிப்பிட்டுள்ளீர். அந்த தலைப்பு கருத்தரங்க ஆரம்பத்தில் நான் பேசும் போது "இங்கு பேசியவர்களின் கருத்துகளில் பெரும்பாலனவற்றில் எனக்கு உடன்பாடில்லை" என்று எழுதி வைத்தே பேசப்பட்டது. வேணு பேசிய பிறகும், நான் குறிப்பிடும் போது வேணு பேசியவற்றில் பலவற்றில் குறிப்பாக பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பற்றி முழுக்க உடன்பாடில்லை என்றும் குறிப்பிட்டேன்.*

*இதை தாங்கள் கவனிக்காது விட்டு, தவறான தகவலை தங்கள் வாசகர்களுக்கு அறிவித்து உள்ளீர்கள்.*

*தோழமையுள்ள*
நடராசன்.
முற்போக்குஇளைஞர்அணி
சென்னை.
31.3.92.

மு.இ.அ.யின் மீதான பு.ஜ. விமர்சனம் சரியானதுதான் என்கிற ஒப்புதல் வாக்குமூலமாகவே நடராசனின் கடிதம் உள்ளது. பு.ஜ. குறிப்பிட்டதைப் போலவே, ''மார்க்சிய ஆசான்களின் மீது வேணு போன்றவர்கள் அவதூறு செய்ததைக் கண்டித்துப் பேசவோ, விளக்கமளிக்கவோ'' நடராசன் முயலவில்லை. ''இங்குபேசியவர்களின்கருத்துக்களில் பெரும்பாலானவற்றில் எனக்கு உடன்பாடில்லை'' என்றும் ''வேணுபேசியவற்றில் பலவற்றில்குறிப்பாகபாட்டாளிவர்க்கசர்வாதிகாரம் பற்றி முழுக்கஉடன்பாடில்லை'' என்றும்தான் குறிப்பிட்டதாகத்தான் இப்போதும் எழுதுகிறார். மார்க்சிய - லெனினிய ஆசான்களுக்கும் அமைப்புகளுக்கும் எதிராக வசைமாறிப் பொழிந்தவர்களுக்கு பதிலடி தந்ததாகக் கூறவில்லை. ஒரு பரட்சியாளருக்குரிய உணர்வு எதுவும் அவரிடம் வெளிப்பட்டதாக தெரியவில்லை. தனக்கு ''உடன்பாடில்லை'' என்பதை மட்டும் ''பணிவோடு'' தெரிவித்துக் கொண்டார். அதையும் கூட அங்கு திரண்ட கூட்டத்தினர் கேளாமல் ஆரவாரம் செய்து அரட்டை அடித்து நடராசனை உட்கார வைத்துவிட்டனர் என்பதுதான் உண்மை.

இந்தத் திருச்சி கருத்தரங்கில் முற்போக்கு இளைஞர் அணியினர் பங்கேற்றது பற்றி புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணியினர் ஒரு திறந்த மடல் எழுதியுள்ளனர். அதைப் பார்த்த மு.இ.அ அதற்குப் பதில் சொல்வதை விட்டுவிட்டு, இப்படி செய்வது புரட்சிகர ஐக்கியத்தையும் தோழமையையும் பாதிக்கும் என எச்சரித்துள்ளனர். இந்த கருத்தரங்கை நடத்திய புதிய இடது கலைப்புவாதிகள் உட்பட எவரையுமே புரட்சியாளரா இல்லையா என்று மு.இ.அ-யினர் வரையறுத்திடவே இல்லை. நம்மோடும் புரட்சிகர அமைப்பிற்குரிய தகுதியும் உறவும் எதுவும் தனிச்சிறப்பாக கொண்டிருக்கவில்லை. ஆகவே விமர்சனத்தைத் தவிர்ப்பதற்காக இப்படிச் செய்கின்றனர்.

பு.மா.இ.மு-வின் திறந்தமடலைப் படித்த மாணவர் சங்கப்பொறுப்பாளரோ இன்னும் ஒரு படி மேலே போய் ''நீங்கள் இப்படி விமர்சனங்களை எழுதி சுற்றுக்கு விடுங்கள்; ஆங்காங்கே உதைக்கச் சொல்கிறேன்'' என்று மிரட்டி இருக்கிறார். இதுதான் முன்னால் சொன்ன தோழமையோ! அவதூறு அல்லது துப்பாக்கித்தனம்தான் அரசியல் விமர்சனங்களுக்கு பதில் போலிருக்கிறது! ஆனால் இந்தக் கோபத்தில் ஆயிரத்தில் ஒரு பங்கு கூட மார்க்சிய - லெனினிய ஆசான்களையும் அமைப்புகளையும் ஏசிய புதிய இடது கலைப்புவாதிகளிடம் இவர்கள் ஏனோ காட்டவில்லை.!

-ஆசிரியர்குழு
புதியஜனநாயகம்

உழுபடைக் கருவிகளையும் நிலப் பிரபுவிடமே இழந்து கூலி வேலையை நம்பியிருந்தவர்கள் அதுவும் இல்லாத போது நிர்கதியாக வீதியில் வீசியெறியப்படுகிறார்கள். நிலப்பிரபுத்துவக் கும்பலோ பருவ காலத்தில் நடக்கும் விவசாயத்தின் மூலமே எண்ணற்றோர் உழைப்பைச் சுரண்டி வருடம் முழுவதும் சுகபோகமாக திளைப்பதற்கு சேமித்துக் கொள்வதோடு தனது தலைமுறைகளும் செல்வச் செழிப்போடு வாழ சொத்தும் சேர்த்து வைக்கிறது.

களாகாந்தியில் பிரதாப் கேசரி தியோ என்ற நிலப் பிரபு (அரச பரம்பரை வழிவந்தவர்) சுமார் 10000 ஏக்கர் நிலங்களை அனுபவித்து ஆண்டு வருகிறார். அரச குலத்தின் சொத்துக்களை நிர்வகித்தவர்கள், நிலப் பிரபுவின் உறவினர்கள் முதலியோர் வசமே எஞ்சியுள்ள பெரும்பான்மை நிலங்களும் உள்ளன. பிரசந்தா ப்ரதன் என்ற நிலப் பிரபுவிடம் கங்கா, பாட்மு ஆகிய இருவரும் கொத்தடிமைகளாக உள்ளனர். வருடத்திற்கு 400, 450 ரூபாயே இவர்களுக்கு கூலியாக கொடுக்கப்படுகிறது. வாரம் வாரம் சாப்பாட்டிற்கென 6 கிலோ அரிசி பொறுமானமான நெல் கொடுக்கப்படுகிறது. அவ்வளவுதான்! தினம் 20 மணி நேரம் நிலப் பிரபுவால் கசக்கிப் பிழியப்படுகிறார்கள். இதே போல் நிலப் பிரபு வயலில் வேலை செய்யும் விவசாயிகளுக்கு ஐந்து ரூபாயோ, ஒரு கிலோ அரிசியோ, அரை கிலோ அரிசியோ ஒரு நாள் கூலியாக கொடுக்கப்படுகிறது. இதை விட மோசமான நிலையே மற்ற பகுதிகளில் நிலவுகிறது.

ஏற்கனவே வறட்சி பாதித்த பகுதிகளில்தான் பட்டினிச்சாவுகள் நடந்துள்ளன. அதுவும் பின்தங்கிய உற்பத்தியைச் சார்ந்த மலைவாழ் மக்கள், நெசவாளிகள், விவசாயிகளே இத்தாக்குதலுக்கு அதிகம் பலியாகியுள்ளனர். தனிச்சிறப்பான கவனம் செலுத்தி இவர்களது வாழ்க்கைத் தரம் படிப்படியாக முன்னேற்றப்பட வேண்டும். இதை செய்வதற்கான திட்டமோ நோக்கமோ எந்த ஓட்டுக் கட்சியிடமும் இல்லை. அதனால்தான் எந்த கட்சியாலும் தாங்கள் ஆளும் மாநிலங்களில் வறட்சி பாதித்ததாக அறிவிக்கப்பட்ட பகுதிகளை சிறிய மாற்றத்திற்குக் கூட உட்படுத்த முடியவில்லை. மாறாக வறட்சி பிரதேசங்களின் நிலைமை தீவிரமடைந்தே வருகின்றன. வளமான சமவெளிப் பகுதிகளும் - பாலைவனமாக மாறிவருகின்றன. தமிழகத்தில் வட ஆற்காடு, தருமபுரி மாவட்டங்கள் 10 ஆண்டுகளுக்கு முன்பே வறட்சி பிரதேசங்களாக அறிவிக்கப்பட்டு பல நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் இன்றும் அவை (முன்பை விட) வறட்சி தீவிரமடைந்த பிரதேசங்களாக இருப்பதோடு தமிழகத்திலுள்ள 13 மாவட்டங்கள் வறட்சி பிரதேசமாக மாறியிருப்பதுதான் ஆட்சியாளர்கள் சாதித்த சாதனை. தமிழகமே இந்நிலையென்றால் பாலைவனமும் அதிக காடுகளும் மலைகளும் அடங்கிய பிற மாநிலங்கள் பற்றி சொல்லத் தேவையில்லை!

எனவே, நிலப்பிரபுவின் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு கூலி, ஏழை விவசாயிகளுக்கு பிரித்துத் தரப்படவேண்டும். விவசாயிகளை ஏய்க்கும் புல்லுருவிகளான ஆதிக்க கும்பல்கள், வர்த்தகச் சூதாடிகள், ஒட்டுப் பொறுக்கிகள் களையெடுக்கப்பட வேண்டும். பருவமில்லா காலத்திலும் விவசாயி பயிர் செய்வதற்கு ஏற்ப நவீன முறைகளில் நீர்ப்பாசன வசதிகளும் ஏனைய உதவிகள், சலுகைகளும் செய்து தரப்பட்டு இவர்களின் வாழ்க்கைத் தரத்தைப் படிப்படியாக உயர்த்தி முன்னேறிய உற்பத்தியோடு பிணைக்க வேண்டும். அப்பொழுதுதான் பட்டினிச்சாவு கொடுமையை இம் மண்ணிலிருந்து நிரந்தரமாக துடைத்தொழிக்க முடியும்.

இ. சுப்பு

படிப்பகம்

www.padippakam.com

# கேடயம் - மனஓசை கும்பலின் அரசியல் இரட்டை வேடம்

## -அம்பலப்படுத்துகிறார்கள் வாசகர்கள்

*ஓடுகாலிகளும் அரசியல் சுதந்திரமும்*

*ஐ.எம்.எஃப். உலக வங்கியின் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வது என்பது கடன் கொடுப்பவன் நிபந்தனை போடத்தான் செய்வான் என்ற பாணியில் அது ஒன்றும் அரசியல் சுதந்திரத்தைப் பாதிக்காது. என்று ஓடுகாலிகளும் அவர்களது சகபாடிகளும் பேசி வருகின்றனர். இதே போன்ற கேள்வியும் அதற்கான பதிலும் கடந்த புதிய ஜனநாயகம் இதழில் வெளிவந்தது.*

*இவர்கள் கேள்விகளை கேட்டுக் கொண்டே இருக்க பல சமயங்களில் பு.ஜ. விற்கு முன்னரே, ஆளும் வர்க்கங்களே அதற்கான பதிலை சொல்லிவிடுகின்றன; உண்மைகளை முகத்திலடிக்கின்றன.*

*15.3.92 தேதியிட்ட துக்ளக் இதழில் முன்னாள் மத்திய அமைச்சர் சுப்ரமணிய சுவாமியின் 'ஐ.எம்.எஃப்., உலக வங்கி கடன்கள் - தேவை அரசியல் அணுகுமுறை' என்ற தலைப்பில் கட்டுரை ஒன்று வந்துள்ளது.*

*''சந்திரசேகரின் அமைச்சரவை பதவியிலிருந்த போது ஐ.எம்.எஃப்.டமிருந்து கடனுதவி பெற்றோம்... இதற்கு ஐ.எம்.எஃப். எந்த நிபந்தனையும் விதிக்கவில்லை.*

*இது எப்படி சாத்தியமாயிற்று? அந்த நேரத்தில் வளைகுடா போர் நடந்து கொண்டிருந்தது. அமெரிக்க விமானங்களுக்கு இடையில் பெட்ரோல் நிரப்பிக் கொள்ள வேண்டிய அவசியமிருந்தது. இதற்காக நமது உதவியை அமெரிக்கா எதிர்பார்த்தது. இதற்கு நாம் ஒப்புக் கொண்டதால் அந்த கடன் வசதியை நிபந்தனையின்றி பெறுவது மிகவும் எளிதாகி விட்டது.'' என்றும்*

*''நாங்கள் பதவியில் இருந்தபோது வளைகுடா போரினால் நமக்கு அரசியல் ரீதியான ஒரு சந்தர்ப்பம் கிட்டியது. இப்போதைய நிலையை எடுத்துக் கொண்டால் கூட சென்ற ஜூன் மாதத்தில் இஸ்ரேலுடன் தூதரக தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள நாம் சம்மதித்து, நமது தூதரை அங்கு அனுப்புவதாக முடிவெடுத்திருந்தால் இந்த கடனுதவியை நாம் மிக எளிதாக பெற்றிருக்க முடியும்'' என்றும் திருவாய் மலர்ந்திருக்கிறார்.*

*இவர் எளிதாக பெற்றதாக கூறப்படும் 3,100 கோடி ரூபாய் கடனை எதிர்பார்த்திருந்த இந்தியாவிற்கு போடப்பட்ட நிபந்தனைதான் எரிபொருள் நிரப்பும் விவகாரம் என்று பத்திரிக்கைகள் எழுதின. பு.ஜ.வும் குறிப்பிட்டது. (புதிய ஜனநாயகம், ஆறாமாண்டு-இதழ் எண்: 7)*

*ஆக, இந்தியாவின் நடுநில்லக் கொள்கையை கைவிட்டு, நிபந்தனையை ஏற்று அரசியல் சுதந்திரம் சம்பந்தப்பட்டதுதான் என்பது சொல்லாமலே விளங்கும். மேலும் 'ஜியோனிச' யூத மதவெறி நாடென உலகமே தனிமைப்படுத்தி வைத்துள்ள இஸ்ரேலுடன் உறவு வைத்துக் கொண்டிருந்தால் கடன் எளிதில் கிடைத்திருக்குமென்று சுவாமி கூறுகிறார். இப்போது இந்தியா இஸ்ரேலுடன் கூடி குலவுவது - தற்போதைய ஐ.எம்.எஃப். கடன் மற்றும் நிபந்தனைகள் - சுவாமியின் வாக்குமூலம் இவற்றை இணைத்துப் பார்த்தால் பாமரர்க்கும் அரசியல் சுதந்திரத்தின் போலித்தனம் தெரியும்.*

*முதலில் சந்திரசேகர் அரசு அப்படி ஏதும் எரிபொருள் நிரப்பவில்லை என்று தடாலடியாக மறுத்தது. ஆனால், பத்திரிக்கைகள் ஆதாரங்களை முகத்தில் வீசவே பல்வேறு பொய்களைச் சொல்லி மழுப்பியது. இப்படித்தான் ஆளும் வர்க்கங்கள் அரசியல் சுதந்திரத்தை செல்லாக் காசாக்கும் எந்த ஒரு நிபந்தனையையும் வெளியே சொல்வதில்லை, பாராளுமன்றத்தின் முன்கூட வைப்பதில்லை. ரகசியமாகவே நிபந்தனை*



*களை நிறைவேற்றுகின்றன. ஆக, நாடு அடகு வைக்கப்பட்டுள்ளதையும் அரசியல் சுதந்திரம் பறிபோயுள்ளதையும் உண்மைகள் உறைத்தாலும் கண்களை மூடிக் கொண்டிருக்கிறார்கள், ஓடுகாலிகள்.*

● ● ●

பிப்ரவரி 16—29 கேடயம் இதழில், ''சிகப்புப் போர்வையில் இன்னொரு காங்கிரசுக் கட்சி'' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வந்தது. அதில் நாட்டின் பொருளாதார சுதந்திரத்தை அடகுவைக்கும் இழிசெயலில் இன்று இ.காங்கிரசு ஆட்சியாளர்கள் கங்கனம் கட்டி இருக்கிறார்கள் என்று எழுதினர்.

''அமெரிக்கா பணியச் சொன்னால் மண்டியிட்டே தொழுகிறார்கள்'' என்ற கட்டுரையில் பின்வருமாறு எழுதியுள்ளனர். ''ஏகாதிபத்தியங்களைச் சார்ந்து பொருளாதாரக் கொள்கைகளை அமல் நடத்தி வந்த இந்திய ஆட்சியாளர்கள் நாட்டின் பொருளாதாரத்தைக் கடும் நெருக்கடிக்குள்ளாக்கி விட்டனர். இப்போது இந்தியப் பொருளாதார சுதந்திரத்தை மேலும் ஏகாதிபத்திய வாதிகளிடம் அடகு வைக்கத் துவங்கிவிட்டனர். ஆம்! அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகள் பணியச் சொன்னால் மண்டியிட்டுத் தொழத் துவங்கிவிட்டனர்.

—நாட்டின் எதிர்காலம் முடமாக்கப்பட்டு இருளில் தள்ளப்படுகிறது. ஆனால் ஐ.எம்.எஃப் நிபந்தனைகள் இத்தோடு நின்றுவிடவில்லை என்பதே மிகுந்த அபாயகரமான விஷயம். எண்ணிப் பார்க்க முடியாதபடி பொருளாதாரச் சுதந்திரத்தின் எல்லா அம்சங்களையும் இந்திய ஆட்சியாளர்கள் படிப்படியாக அடகு வைத்துக் கொண்டிருக்கின்றனர்''.

கேடயம் குழுவின் அரசியல் கோட்பாட்டு ஆவணப்படி இந்தியாவுக்கு அரசியல் சுதந்திரம் கிடைத்துவிட்டது. இன்னும் பொருளாதார சுதந்திரம் கிடைக்கவில்லை என்பதுதான் அவர்களின் நிலைப்பாடு. ஆனால் இப்போது கேடயத்தில் எண்ணிப் பார்க்க முடியாதபடி பொருளாதாரச் சுதந்திரத்தின் எல்லா அம்சங்களையும் படிப்படியாக அடகுவைப்பதாக எழுதுகின்றனர். இல்லாத பொருளாதார சுதந்திரத்தை எப்படி அடகு வைக்க முடியும் என்று தெரியவில்லை.

—ஏ.தர்மராஜ், பள்ளிப்பாளையம்.

*இங்கே வாசகர் சுட்டிக் காட்டுவது போல அரசியல் கோட்பாட்டு ஆவணத்தில் ஒன்றும், பத்திரிக்கையில் வேறு ஒன்றுமாக எழுதுவது கேடயம் - மன ஓசை கும்பலைப் பொறுத்தவரை புதிதல்ல. பாசிச சக்திகளுக்கும் மக்களுக்கும் இடையிலுள்ள முரண்பாடு பிரதானமாக இருக்கும் போது, பாசிச எதிர்ப்பு அரசியல் இயக்கம் பிரதானமாகிவிடும் என்று அவர்கள் ஆவணத்தில் எழுதி வைத்துக் கொண்டு, அவ்வாறு இல்லாத போதே பாசிச எதிர்ப்பு இயக்கம் நடத்திக் கொண்டிருக்கும் அவர்களது சுய முரண்பாட்டை ஏற்கனவே ஒரு வாசகர் சுட்டிக் காட்டினார்.*

*இந்திய ஆளும் வர்க்கம் சார்பு நிலை முதலாளிகள்தான்; அதை தரகு அதிகார முதலாளிகள் என்று வரையறுப்பது அதை ஏகாதிபத்திய ''ஏஜெண்ட்'' என்பதாகக் கருதி பல தவறுகள் செய்வதாகிவிடும் என்று கேடயம் - மன ஓசை கும்பலின் அரசியல் கோட்பாடு ஆவணத்தில் உள்ளது. ஆனால் ''ஏஜெண்ட்'' என்ற சொல்லை பயன்படுத்தவில்லையே தவிர ஏகாதிபத்திய ''அடிவருடி'', ''கைக்கூலி'', ''எடுபிடி'', ஏகாதிபத்திய உத்தரவுப்படி நடக்கும் அடியாள் என்றெல்லாம் கேடயம் - மன ஓசையில் எழுதி வருவதை ஆதாரத்துடன் நாம் வெளியிட்டு மூன்று ஆண்டுகள் ஆகின்றன. அதற்கு எவ்வித பதிலும் இல்லை. இப்போது வாசகர் சுட்டிக் காட்டுவது போல நாட்டின் பொருளாதார சுதந்திரத்தை அடகு வைப்பதாக ஒருபுறம் எழுதிக் கொண்டே, நாடு மறு அடகு வைக்கப்படுகிறது, மீண்டும் காலனியாக்கப்படுகிறது என்று நாம் எழுதுவதையும் மறுபுறம் மறுத்துப் பிரச்சாரம் செய்கிறது கேடயம் - மன ஓசை கும்பல்.*

www.padippakam.com

## அயோத்தி:

# இந்து வெறியர்களின் கடப்பாரை சேவை

அயோத்தியில் இந்து வெறியர்கள் மீண்டும் தமது கடப்பாரை சேவையைத் துவக்கியுள்ளனர். ராம ஜென்ம பூமி என்றால் அது பாபர் மசூதியில் இந்து வெறியர்கள் திருட்டுத்தனமாக ராமர் சிலையை வைத்துள்ள இடம்தான்; அதுதான் "ஒரிஜினல் ராம ஜென்ம பூமி" என்று நிலை நாட்டுவதற்காகவே மற்ற சிறிய ராமர் கோயில்களை இடித்து எந்த வரலாற்றுத் தடயமும் இல்லாமல் அழிக்கும் கரசேவையில் இந்து வெறியர்கள் ஈடுபட்டுள்ளனர். ஏனெனில் இங்குள்ள சில சிறிய கோயில்கள் 40 ஆண்டுகளுக்கும் மேலாக இருந்து வருகின்றன. சக்ஷி கோபால் கோயில் 150 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று கூறப்படுகிறது. இவற்றையே ஒரு வரலாற்று ஆதாரமாகக் காட்டி போட்டிக் குழுக்களும் எதிர்க் கட்சிகளும் வாதிட இடமளித்து விடக்கூடாது என்பதற்காகவே அந் நிலங்களையும், கோயில்களையும் பலாத்காரமாகக் கைப்பற்றி இடிக்கும் வேலையில் இந்து வெறியர்கள் இறங்கியுள்ளனர்.

கடந்த ஆண்டு அக்டோபர் மாதத்தில் இத்தகைய திருப்பணியைத் துவக்கிய இந்து வெறியர்கள், ராம் - ஜானகி கோயிலையும் சத்ருகன் கோயிலையும் இடித்து தரை மட்டமாக்கினர். இக் கோயில்களைப் பராமரித்து வந்த பூசாரிகளும் மகந்துகளும் பஜ்ராங்தள குண்டர்களால் விரட்டியடிக்கப்பட்டனர். எதிர்க் கட்சிகளின் கூச்சல்களுக்குப் பிறகு, தற்காலிகமாக இடிப்பு வேலையை நிறுத்தி வைத்திருந்த இந்து வெறியர்கள் கடந்த மார்ச் மாத இறுதியில் மீண்டும் தமது கடப்பாரை சேவையைத் துவக்கிவிட்டனர்.

பாபர் மசூதியைச் சுற்றியுள்ள தாவாவுக்குட் படுத்தப்பட்ட நிலப்பகுதியை உ.பி. அரசின் சுற்றுலாத் துறை கையகப்படுத்தியதை அலகாபாத் உயர் நீதி மன்றம் அங்கீகரித்த போதிலும் அங்கே கட்டிடம் கட்டுவதையோ இடிப்பதையோ ஏற்க முடியாது என்று 1991 அக்டோபரில் தீர்ப்பளித்திருந்தது. ஆனால் இப்போது சிறிய கோயில்கள் இடிக்கப்பட்ட போதிலும், ராமர் கோயிலுக்கான சுற்றுச் சுவர் இந்து வெறியர்களால் கட்டப்பட்ட போதிலும் அது வாயே திறக்கவில்லை. கோயில்களை இடிக்க வன்முறை ஏவப்பட்டதாக எங்களுக்கு எந்த புகாரும் வரவில்லை என்று கூறி அதிகார வர்க்கமும் போலீசும் இந்து வெறியர்களின் அட்டூழியங்களுக்கு கைகட்டி சேவகம் செய்தன.

இந்து மதக் கோட்பாட்டின்படி கோயிலை இடிப்பது பாவச் செயல். ஆனால் மதவெறியர்களுக்கு தமது மதக் கோட்பாடுகளிலேயே நம்பிக்கை கிடையாது. இதை அயோத்தியில் இந்து வெறியர்கள் மீண்டும் நிரூபித்துள்ளனர். நட்ட ஈட்டுத் தொகையை வாங்கிக் கொண்டு ஊரை விட்டே ஓடிவிடு என்று மகந்துகளையும் பூசாரிகளையும் பைசாபாத் தொகுதியின் எம்.பி.யான வினய் கத்தியார் தலைமையாலான பஜ்ராங்தள குண்டர் படையினர் சூலாயுதங்களுடன் மிரட்டினர். மறுத்தவர்களை கடத்திச் சென்று போலீசார் முன்னிலையிலேயே கட்டாயப்படுத்தி பத்திரத்தில் கையெழுத்து பெற்றனர். மகந்துகளைத் துரத்திவிட்டு கோயில்களை இடித்த இந்து வெறியர்கள், உள்ளே இருந்த கடவுள் சிலைகளைக்கூட பராமரிக்காமல் திறந்த வெளியில் வீசியெறிந்து விட்டுப் போயுள்ளனர். அவ்வளவு பக்தி! 1989 நவம்பரில் இந்து வெறியர்கள் ராமர் கோயில் கட்ட செங்கல் பூசை நடத்திய மேடை தவிர இதர அனைத்து கட்டிடங்களும் இன்று தரைமட்டமாகிவிட்டது.

சுருக்கமாகச் சொன்னால், எதைச் சொல்லி பாபரையும் கஜினி முகமதுவையும் இந்துக்களின் எதிரிகளாகச் சித்தரிக்கிறார்களோ, அதையேதான் இப்போது அயோத்தியில் இந்து வெறியர்கள் செய்துள்ளனர். இதுவும் போதாதென்று பைசாபாத்திலுள்ள ஒரு மசூதியையும் குண்டுவைத்து ஒரு பகுதியை சிதைத்துள்ளனர்.

தான் பராமரித்து வந்த சுமித்ராபவன் கோயில் இடிக்கப்பட்டதைக் கண்டு புலம்பும் பூசாரி ராஜ்மங்கள்தாஸ்.



இவ்வளவுக்கும் பிறகு எந்த சங்கராச்சாரியோ, சாமியாரோ வாய் திறக்கவே இல்லை. அப்படி ஏதாவது பேசினால் அவர்கள் இந்துக்களின் எதிரிகள் என்று முத்திரை குத்தப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டு தாக்கப்படுவார்கள். இந்து மதத் தலைவர்கள் வாய் மூடிக் கிடப்பதைச் சாதகமாக்கிக் கொண்டு பஜ்ராங்தள குண்டர் படைத் தளபதியான வினய் கத்தியார், "இவை கோயில்களே அல்ல" என்ற அரிய கண்டுபிடிப்பை அவிழ்த்து விட்டுள்ளார். "நாங்கள் கோயில்களை இடிக்கவில்லை. மறுசீரமைப்பு (புனருத்தாரணம்) செய்கிறோம்" என்று நியாயமும் கற்பிக்கிறார். மட சங்கராச்சாரி கூட்டமும் இதை வாய் பொத்தி அங்கீகரித்துள்ளது.

இந்து வெறியர்கள் அயோத்தி விவகாரத்தை மீண்டும் இப்போது கிளறி விடுவதற்கு காரணம் இல்லாமல் இல்லை. பாரதீய ஜனதாவின் அரசியல் சித்து வேலைகள் அடுத்தடுத்து மக்களிடம் அம்பலப்பட்டு தோல்வியடைந்துவிட்டன. விலையேற்றத்தால் தொடர்ந்து தாக்கப்பட்டு மக்கள் வறுமையில் வாடிக் கொண்டிருக்கும் போது பாரதீய ஜனதா நடத்திய காஷ்மீரை நோக்கிய ஒருமைப்பாட்டு யாத்திரை மக்கள் ஆதரவை இழந்து பிசுபிசுத்துப் போனது. அதோடு, காஷ்மீர் மக்களின் போராட்டத்தை மேலும் தீவிரப்படுத்துவதில் போய் முடிந்தது. காங்கிரசின் பொருளாதாரக் கொள்கைகளை ஒருபுறம் ஆதரித்துக் கொண்டே மறுபுறம் பட்ஜெட் எதிர்ப்பு நாடகமாடிக் கொண்டு பாரதீய ஜனதா நடத்திய உண்ணாவிரதப் போராட்டம் மக்கள் ஆதரவை இழந்து தோல்வியடைந்துவிட்டது. அதேபோல, "டயோட்டா" காரில் ரதயாத்திரை சென்ற இந்து வெறியர்கள் இப்போது பன்னாட்டு மூலதன ஆதிக்கத்தை எதிர்த்து நடத்தும் "சுதேசி இயக்கம்" மக்களிடம் எடுபடாமல் போய்விட்டது.

எல்லாவற்றுக்கும் மேலாக ராம ராஜ்ஜியத்தை நிறுவியுள்ளதாக கூறிக்கொள்ளும் அதன் மாநில அரசுகள் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறி, மக்களின் வெறுப்புக்கு ஆளாகி நிற்கின்றன. குறிப்பாக, பாரதீய ஜனதாவின் ம.பி.மாநில அரசு பஸ்தார் பழங்குடி மக்களை அடக்கி ஒடுக்குவதோடு, ஊழல் புதை சேற்றிலும் கோஷ்டி சண்டையிலும் மூழ்கிக் கிடக்கிறது. உ.பி.அரசோ சிறுபான்மை இனத்தவரை ஒடுக்குவதோடு, கிரிமினல் கொள்ளையர்களின் கூடாரமாகிவிட்டது. எனவேதான் தமது தோல்விகளை மூடி மறைக்கவும் மக்களது எதிர்ப்புணர்வைத் திசை திருப்பவும் மீண்டும் அயோத்தி விவகாரத்தைக் கிளறிவிட்டுள்ளது.

நாட்டை மறு அடகு வைக்கும் பொருளாதாரக் கொள்கையாலும், வறுமை - விலையேற்றத்தாலும் மக்களின் ஆத்திரத்தைச் சந்தித்துக் கொண்டிருக்கும் சிறுபான்மை நரசிம்மராவ் அரசு, பிரிவினைவாத - பயங்கரவாதப் பீதியூட்டி மக்களை திசை திருப்புவதையே அரசியலாகக் கொண்டுள்ளது. அதேபோல தமது தோல்

www.padippakam.com

வியை மறைத்து திசை திருப்புவதறகாக மக்களின் உணர்ச்சிகளைப் பாதிக்கக்கூடிய மத வெறியைக் கிளறிவிடுவதே இந்து வெறியர்களின் அரசியலாகிவிட்டது.

அயோத்தியில் ராமர் கோயில் கட்ட சுற்றுச் சுவர் எழுப்பி வருவது, பைசாபாத்திலுள்ள மசூதியைத் தகர்த்தது ஆகியவற்றின் விளைவாக முஸ்லிம்கள் ஆத்திரமடைந்த போதிலும் ரம்ஜான் நோன்பு காரணமாக அமைதி காத்தனர். ஆனாலும் கேரளாவிலுள்ள முஸ்லிம்கள் தமது குமுறலை வெளிப்படுத்தி போராட்டங்களில் ஈடுபட்டனர். எதிர்க் கட்சிகள் நாடாளுமன்றத்தில் கூச்சல் போட்டன. இத்தனைக்கும் பிறகும் நரசிம்மராவ் அரசு இந்து வெறியர்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அப்படி ஏதாவது செய்தால் அது இந்து வெறியர்களுக்குச் சாதகமாகி விடும் என்று அஞ்சுகிறது. எனவேதான் காலத்தை நீட்டித்து பிரச்சினை ஆறப்போட்டு நீர்த்துப் போகச் செய்வது. அதேசமயம் இந்து ஓட்டுக்களை இழந்துவிடாமல் தக்க வைத்துக் கொள்வது என்கிற நரித்தனத்துடன் காய்களை நகர்த்துகிறது.

உண்மையில் காங்கிரசும் பாரதீய ஜனதாவும் தமது அரசியல் ஆதாயங்களுக்காக பரஸ்பரம் விட்டுக் கொடுத்துக் கொண்டு கள்ளக்கூட்டு சேர்ந்துள்ளன. கடந்த ஆண்டு அக்டோபரில் அயோத்தியில் கோயில்கள் இடிக்கப்பட்டபோது ராவ் அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதேபோல பாரதீய ஜனதாவின் காஷ்மீரை நோக்கிய ஏக்தா யாத்திரைக்கு முழுப்பாதுகாப்பு கொடுத்து மறைமுகமாக ஆதரித்தது. இப்போது மீண்டும் அயோத்தியில் இந்து வெறியர்கள் சட்ட விரோத ஆக்கிரமிப்பில் ஈடுபட்ட போதிலும், வழக்கம் போலவே எதிர்ப்பு சவாடால் அடித்துக் கொண்டே மறைமுகமாக ஒத்துழைப்பு அளித்துக் கொண்டிருக்கிறது.

ஆயிரக்கணக்கான உளவுத் துறை போலீசாரையும், "ரா", "சி.பி.ஐ.", "ஐ.பி." முதலான ரகசிய உளவு நிறுவனங்களைத் தனது பொறுப்பில் வைத்துக் கொண்டுள்ள உள்துறை அமைச்சரான எஸ்.பி.சவாண், அயோத்தியில் என்ன நடந்துள்ளது என்று தனக்கு முழுமையாகத் தெரியாது என்று கூசாமல் புளுகினார். அதைத் தொடர்ந்து தேசிய ஒருமைப்பாட்டுக் கவுன்சில், நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவை அயோத்திக்கு அனுப்பி உண்மை நிலையை கண்டறியும் நாடகம் நடத்தப்பட்டது. இக் குழுவில் பாரதீய ஜனதா தவிர மற்ற எதிர்க் கட்சிகள் பங்கேற்ற போதிலும், காங்கிரசின் கையாலாகாத்தனத்தை எந்தக் கட்சியும் எதிர்க்கவில்லை. அயோத்திக்குச் சென்று திரும்பிய தூதுக் குழு, உண்மை நிலையை உள்துறை அமைச்சரிடம் தெரிவித்த போதிலும், அதுவரை உ.பி.அரசைக் கலைக்கப் போவதாக சவடால் அடித்த உள்துறை அமைச்சர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மீண்டும் நாடாளுமன்றத்தில் இதுபற்றி விவாதிக்கலாம் என்ற முடிவுடன் அனைத்துக் கட்சிகளும் அரைத்த மாவையே அரைக்கத் தீர்மானித்துள்ளன.



150 ஆண்டுகளுக்கு முந்தைய சக்ஷிகோபால் கோயில் இடிப்பு; கூலியாட்களைக் கொண்டு இந்து வெறியர்கள் நடத்திய கடப்பாரை சேவை.

காங்கிரசின் கையாலாகாத்தனம் - மறைமுக ஒத்துழைப்பு, எதிர்க் கட்சிகளின் போலி மதச் சார்பின்மை, பெருகிவரும் அரசியல் - பொருளாதார நெருக்கடிகள் ஆகியவற்றைச் சாதகமாக்கிக் கொண்டு இந்து வெறி பாசிசம் பற்றிப் படர்ந்து வருவதையே இவை தெளிவாக்குகின்றன. இந்து வெறி பாசிசத்துக்கு எதிராக நமது முன்முயற்சியையும் போர்க குணத்தையும் ஒருக்கால் தளர்த்துவோமேயானால், நமது நாடு இன்னுமொரு இட்லரின் ஜெர்மனியாக மாறுவதைத் தவிர்க்க முடியாது.

● மனோகரன்

# ராம ராச்சியத்தில் ஆபாச — நாய்ச்சண்டை

பாரதீய ஜனதாவின் ஆபாச - நட்சத்திரப் பேச்சாளர் உமாபாரதி. பெண் சாமியாரான இவர் மத்திய பிரதேசம் - கஜுராஹோ தொகுதியின் எம்.பி. ஆவார். இவருக்கும் ம.பி. முதல்வர் சுந்தர்லால் பட்வாவுக்குமிடையே பதவிப் போட்டிக்காக நடக்கும் நாய்ச் சண்டையைப் பார்த்து ம.பி. மாநிலமே கைகொட்டிச் சிரிக்கிறது.

முதல்வர் பட்வா, லஞ்ச ஊழல் - அதிகார முறைகேடுகளில் சிக்கியுள்ளதைச் சாதகமாக்கிக் கொண்டு எதிர்கோஷ்டி ஆதரவுடன் முதல்வர் பதவியைக் கைப்பற்ற முயற்சிக்கிறார் உமாபாரதி. பட்வாவை பதவியிலிருந்து இறக்காமல் விடமாட்டேன் என்று பொதுக்கூட்டங்களில் சவால் விடுத்தார். தனக்குப் போட்டியாக உமாபாரதி வளர்ந்து வருவதைக் கண்டு ஆத்திரமடைந்த பட்வா, 22 கொலை - கொள்ளை வழக்குகளில் உமாவின் குடும்பத்தினரைத் தொடர்புபடுத்தி கோர்ட்டுக்கு இழுத்தடித்தார். உமாவின் பொதுக்கூட்டங்களில் பட்வா ஆதரவாளர்கள் கலாட்டா செய்தனர். பட்வாவின் அட்டூழியங்களைக் கண்டித்து பா.ஜ.க. தலைவரான முரளிமனோகர் ஜோஷிக்கு கடிதம் எழுதி முறையிட்டார் உமாபாரதி. அதைத் தொடர்ந்து 3 பேர் கொண்ட கமிட்டி அமைத்து விசாரணை நடத்த உத்திரவிட்டார் ஜோஷி. ஆனாலும் பிரச்சினை இன்னும் தீரவில்லை.

இதற்கிடையே பட்வா கோஷ்டியினர் உமாபாரதியை ஆபாசமாகச் சித்தரித்து சுவரொட்டிகளை ஒட்டி அசிங்கப்படுத்தினர். அவருக்கும் எதிர் கோஷ்டித் தலைவருக்கும் ரகசிய உறவு உள்ளதாக கதைகட்டி அவரது நடத்தையின் மீதே சந்தேகம் எழுப்பி அவமானப்படுத்தினர். இதனால் மனமுடைந்த உமாபாரதி தூக்க மாத்திரைகளை அளவுக்குமேல் சாப்பிட்டு தற்கொலை முயற்சியில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது. மேலும், அவர் கட்சியை விட்டு விலகப் போவதாகவும் வதந்திகள் வருகின்றன.

"ஒழுக்கமும் கட்டுப்பாடும் மிக்கது எங்கள் கட்சி; ராம பக்தர்களாகிய எங்களிடம் கருத்து வேற்றுமைகளையோ கோஷ்டிப் பூசலையோ காணவே முடியாது" என்று தேர்தலின்போது பீற்றிக் கொண்டது பாரதீய ஜனதா கட்சி. அது எவ்வளவு பெரிய பித்தலாட்டம் என்பதை இப்போதைய ஆபாச - நாய்ச்சண்டை நிரூபித்துக்காட்டிவிட்டது. அயோத்தியில் 'கடப்பாரை சேவை' நடத்திய கட்சி இன்று ம.பி.-யில் கோஷ்டி சண்டையால் இடிந்து உடைந்து குட்டிச் சுவராகிக் கிடக்கிறது. நல்ல முன்னேற்றம்தான்!

படிப்பகம்

www.padippakam.com

# இந்தியாவில் இட்லரின





"யாரோ தெரியவில்லை. கால்வாயில் பிணமாகக் கிடந்தார். தற்கொலையாக இருக்கலாம்!" - இப்படித்தான் டெல்லி போலீசார் கூறினார்கள். இறந்துபோனவரின் பிணம் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டது - அடையாளம் கண்டு பிடிப்பதற்காக.

போலீசாரின் கூற்றை பலரும் நம்பவில்லை. இதில் ஏதோ மர்மம் இருப்பதாக சந்தேகித்தனர். இறந்து கிடந்தவர் 50 வயதான ராம் ஸ்வரூப் எனும் கூலித்தொழிலாளி. புது டெல்லியின் நரைனா மேம்பால கட்டுமானப் பணிக்காக ஆசாத்பூரிலிருந்து பிழைக்க வந்த ஓர் ஆசிவாசி என்று தெரியவந்தது. அடுத்தநாளே அவரது குடும்பத்தினர் ராம் ஸ்வரூப்பை போலீசார் இரு நாட்களுக்கு முன்பு இழுத்துச் சென்றதாக முறையிட்டனர். குறைவான கூலி கொடுத்து ஏமாற்றியதற்காக அவர் காண்டிராக்டரிடம் சண்டை போட்டார் என்றும் தெரியவந்தது.

"இல்லையில்லை; அவன் ஒரு கிரிமினல் பேர்வழி. சந்தேகத்தின் பேரில் அவனைப் பிடித்து சென்று விசாரித்துவிட்டுப் பிறகு அனுப்பிவிட்டோம். அவனுடைய எதிரிகள் அவனைக் கொன்றிருக்கலாம்" -இது போலீசாரின் இரண்டாவது விளக்கம். சந்தேகம் வலுத்தது. பிரேதப் பரிசோதனை நடந்தது.

இதே நேரத்தில் ராம் ஸ்வரூப்புடன் கைது செய்து சித்திரவதை செய்யப்பட்ட மற்றொரு கூலித்தொழிலாளியான பிரதாப் என்பவர், "ராம் ஸ்வரூப்பைக் கொன்றது இந்தர்புரி போலீசு நிலையக் காக்கிச் சட்டைக்காரர்கள்தான். என் கண்முன்னே சித்திரவதை தாளாமல் அவர் துடிதுடித்து மாண்டார்" என்று வாக்குமூலம் அளித்தார். 3 மாதங்களுக்கு விசாரணை நடந்தது. ராம் ஸ்வரூப் இறந்ததும் போலீசார் பிணத்தை கால்வாயில் வீசியது தெரியவந்தது. வேறு வழியின்றி டெல்லி உதவி போலீசு கமிஷனர் இந்தர்புரி போலீசார் சார்பில் குற்றத்தை ஒப்புக்கொண்டு, சம்பந்தப்பட்ட போலீசாரை தற்காலிக வேலை நீக்கம் செய்ய உத்திரவிட்டார். இது 1989 ஜனவரி முதல்வாரத்தில் நடந்த ஒரு கொட்டடிக்கொலை. ஆனால் வெளியுலகுக்குத் தெரியாமல் நாடு முழுக்கவும் கொட்டடிக் கொலைகள் ஏராளமாக நடக்கின்றன.

## போலீசுக்காரர்கள் கொலைகாரர்களாக கொட்டடிகள் கொலைக்களங்களாக

இந்தியப் போலீசின் கொட்டடிச் சுவர்களிலே இரத்தத்தால் எழுதப்பட்ட சித்திரவதைக் கதைகள் மிகக் கொடூரமானவை. பெண்களானால் கதறக் கதற கற்பழிக்கப்பட்டு... அவர்களின் மறைவிடங்களிலே மிளகாய் தூளும் சிகரெட் நெருப்பும் சுட்டு எரிக்கப்பட்டு... ஆண்களானால் ஆசன வாய்களில் கம்பு செருகப்பட்டு... அவர்களது குதிகால் நரம்பு துண்டிக்கப்பட்டு... அவர்களது சதைகள் கிழித்தெறியப்பட்டு... எலும்புகள் நொறுக்கப்பட்டு... —அந்த வலிதாளாமல் மாண்டு போனவர்கள் எழுந்து வந்தால்தான் அந்தக் கொடூரமான கதைகளை வாசிக்க முடியும்.

இந்த வக்கிரமான வெறியாட்டங்கள் அதிகாரத்திலுள்ளவர்களால் அறிந்தே மறைக்கப்படுகிறது. கிரிமினல் குற்றங்களைத் தடுப்பதற்காக என்று சொல்லிக் கொண்டு நடக்கும் இத்தகைய கிரிமினல் குற்றங்கள் ஆட்சியாளர்களால் எழுதப்படாத சட்டமாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. போலீசு கொட்டடிச் சித்திரவதை ஒரு கலையாகவே வளர்க்கப்பட்டு, அதில் தேர்ச்சிப் பெற்ற போலீசுக்காரர்கள் கதாநாயகர்களாக காவல் தெய்வங்களாகப் போற்றப்படுகிறார்கள். இந்தக் காக்கிச் சட்டை கிரிமினல் குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டதாக ஒரு வழக்கு கூட கிடையாது. மாறாக, அவர்கள் சலுகையும், சன்மானமும், பதவி உயர்வும் பெறுவதுதான் நடந்துள்ளது.

இந்த உண்மைகளை இந்தியாவைப் பற்றிய சர்வதேச மனித உரிமைக் கழகத்தின் (ஆம்னஸ்டி இன்டர்நேஷனல்) சமீபத்திய அறிக்கை மீண்டுமொருதரம் நிரூபித்துள்ளது. "இந்தியா: சித்திரவதை, கற்பழிப்பு, கொட்டடிச் சாவுகள்" என்ற தலைப்புடன் வெளியாகியுள்ள இந்த அறிக்கை 1985 ஜனவரி முதலாக 1991 நவம்பர் 1-ந்தேதி முடிய இந்தியாவெங்கும் நடந்த போலீசு கொடுமைகளைச் சித்தரிக்கிறது. இந்த ஆறாண்டு காலத்தில் 415 பேர் போலீசு கொட்டடிகளில் கொல்லப்பட்டுள்ளனர்.

காலனிய ஆட்சியாளர்களிடமிருந்த ஒடுக்குமுறைக் கருவியான போலீசுத்துறையை அதே கட்டுக் கோப்பு சட்டதிட்டங்களுடன் காந்திய காங்கிரசுக்காரர்கள் வரித்துக் கொண்டார்கள். இன்னும் கொடியதாகவும், பூதாகரமாகவும் போலீசுதுறை வளர்ந்ததைப் போலவே அதன் காட்டுமிராண்டித்தனமான சித்திரவதைகளும் வரைமுறையின்றி பெருகிவிட்டது. 1985-லிருந்து 1991 வரை, நினைத்தாலே இரத்தம் கொதிக்கும் இத்தகைய கொடிய சித்திரவதை - கொட்டடிக் கொலைகளை மனித உரிமைக் கழகத்தின் அறிக்கை தொகுத்தளிக்கிறது.

www.padippakam.com

## ...ாரிசுகள்

...கழகத்தின் அறிக்கை - ஒ...



...ரின் காட்டுமிராண்டித்தனம்
...ன் ''உருளை'' சித்திரவதைக்குப்
...னயில் குற்றுயிராய் கிடக்கும்
...ாம்குமார்.
...ு விசாரணைக் கைதியைக்
... பீகார் போலீசு.

... 1991 ஜனவரி வரை ...டிகளில் 415 பேர் கொல் ...ர். இந்தியாவின் 25 மாநி ...லீசு மற்றும் ராணுவத்தால் ...த்திரவதைகளும் கொலை ...ட நிகழ்ச்சிகளாகிவிட்டன. ..., காஷ்மீர் மாநிலங்களில் ...புகள் ராணுவத்தின் ஒழுங் ...ட்டது.''

அந்தரத்தில் தலைகீழாகத் தொங்கவிட்டு அடித்து தூரி ஆட்டுவது; மயங்கி விழும்வரை சூழ்ந்துகொண்டு அடித்து பந்தாடுவது; மின்சார அதிர்ச்சி கொடுப்பது; இரும்புத் தடியால் அடித்து எலும்புகளை உடைப்பது; கனமான உருளைகளை வைத்து உருட்டுவது; கோணி ஊசி, பேனா கத்தி, உடைந்த பிளேடு முதலானவற்றைக் கொண்டு பிறப்புறுப்பில் வேகமாக சொருகுவது; அல்லது மிளகாய்ப் பொடியைத் தூவுவது முதலானவை இந்தியப் போலீசாரின் கைவந்த கலைகள் என்கிறது அறிக்கை.

### போலீசு அட்டூழியங்களுக்கு அரசியல் அமைப்பே உடந்தை

போலீசாரின் சித்திரவதையில் பாரபட்சம் ஏதும் கிடையாது. 6 வயதான சிறுமியும் கர்ப்பிணிப் பெண்ணும் கூட மிருகத்தனமாக வதைக்கப்பட்டுள்ளனர். போலீசாரின் கொடூரமான சித்திரவதைகளுக்கும், கொட்டடி கொலைகளுக்கும் பலியானவர்களில் ஆகப்பெரும்பான்மையினர் தாழ்த்தப்பட்ட - பழங்குடி மக்கள், கூலி விவசாயிகள், கூலித் தொழிலாளர்கள் மற்றும் புரட்சிகர இயக்கங்களைச் சேர்ந்தவர்கள்தான். 415 கொட்டடிக் கொலைகளில் இதுவரை 12 வழக்குகளில் மட்டுமே பாதிக்கப்பட்டோரின் குடும்பத்தாருக்கு நட்ட ஈடு வழங்க உத்திரவிடப்பட்டுள்ளது. அதில் 6 குடும்பத்தாருக்கு மட்டுமே தொகை வழங்கப்பட்டுள்ளது. கேரளாவின் புரட்சிகர மாணவர் ராஜன் படுகொலை செய்யப்பட்டு 14 ஆண்டுகள் கழித்து நட்டஈடு வழங்கப்பட்டதை ஒப்பிடும் போது இது முன்னேற்றம்தான் என்கிறது அறிக்கை.

இதிலே கொடுமை என்னவென்றால், போலீசாரின் கொலைகளுக்கும் சித்திரவதைகளுக்கும் பிரேதப் பரிசோதனை செய்யும் மருத்துவர்களும், நீதித் துறையும், அதிகார வர்க்கமும், அரசியல் வாதிகளும் உடந்தையாக நின்று, போலீசாரைக் காப்பாற்றுவதிலே குறியாக இருந்துள்ளனர். எனவேதான் ''இந்தியாவின் 25 மாநிலங்களில் போலீசு மற்றும் ராணுவத்தால் செய்யப்படும் சித்திரவதைகளும் கொலைகளும் அன்றாட நிகழ்ச்சிகளாகிவிட்டன'' என்கிறது மனித உரிமைக் குழுவின் அறிக்கை. இவைதவிர கலவரப் பகுதிகளாக அறிவிக்கப்பட்டு, பத்திரிகைகளுக்கு தணிக்கை நிலவும் பஞ்சாப், அசாம், காஷ்மீர் மாநிலங்கள் மற்றும் நக்சல்பாரி புரட்சியாளர்கள் செயல்படும் பகுதிகளில் நடக்கும் சித்திரவதைகளும், போலீசுடன் மோதல் என்ற பெயரில் நடக்கும் கொலைகளும், கற்பழிப்பு வன்முறைகளும் தனிக் கதை; இப்பகுதிகளில் அரச பயங்கரவாத அடக்குமுறையால் கருத்து சுதந்திரத்திற்கே இடமில்லை; கும்பல் கற்பழிப்புகள் ராணுவத்தின் ஒழுங்கு முறையாகி விட்டது என்கிறது அறிக்கை.

ஐ.நா. மன்றத்தின் 42 -வது மனித உரிமைக்காப்பு கூட்டத் தொடரில், ''பத்திரிகைகளிடமிருந்தும் தனிநபர்களிடமிருந்தும் எப்போதெல்லாம் சித்திரவதை செய்யப்பட்டதாக புகார்கள் வருகிறதோ, அப்போதெல்லாம் உடனுக்குடன் நீதித் துறையின் விசாரணை இந்தியாவில் மேற்கொள்ளப்படுகிறது'' என்று கூசாமல் புளுகிய இந்திய அரசும் ஆட்சியாளர்களும் மனித உரிமைக் கழகத்தின் இந்த அறிக்கையைப் பற்றி என்ன கருதுகிறார்கள்? உலக நாடுகளின் முன்பு மனித உரிமைகளை மீறும் காட்டுமிராண்டி ஆட்சியாளர்கள் என்று அம்பலப்பட்டதற்காக வெட்கித் தலைகுனிந்தார்களா? இல்லவே இல்லை. கிரிமினல் போலீசுக்காரன்களைப் போல அவதூறுகளையும் அண்டப்புளுகையும் அவிழ்த்துவிட்டு வெட்கமின்றி தமது செயலுக்கு நியாயம் கற்பித்துக் கொண்டிருக்கிறார்கள்.

### அடக்குமுறையை மறைக்க அமெரிக்க எதிர்ப்பு நாடகம்

''சர்வதேச மனித உரிமைக் கழகம் (ஆம்னஸ்டி இன்டர்நேஷனல்) என்பது ஒரு வெளிநாட்டு அமைப்பு. அதன் அணுகுமுறையும் ஆய்வும் மேலைநாடுகளுக்குச் சார்பானவை. அது ஒரு சுயேச்சையான சுதந்திரமான அமைப்பு அல்ல. இராணுவ சர்வாதிகார நாடுகளில் நடக்கும் அட்டூழியங்களைப் பற்றி மௌனம் சாதிக்கும் அதே சமயம், இந்தியா போன்ற வளரும் நாடுகள் மீதே அது குற்றம் சாட்டுகிறது. அமெரிக்காவின் அரசியல் - பொருளாதார நிர்ப்பந்தங்களுக்கான ஒரு கருவியாக மனித உரிமை பற்றிய கூச்சல்கள் கிளப்பப்படுகின்றன'' என்பது இந்திய ஆட்சியாளர்களின் முதலாவது வாதம்.

சர்வதேச மனித உரிமைக் கழகம் ஏகாதிபத்தியங்களின் நலனுக்கான ஒரு அமைப்பாக இருந்துவிட்டுப் போகட்டும். ஆனால் அது முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகள் உண்மையா, இல்லையா என்பதுதான் கேள்வி. இந்தியாவின் மனித உரிமை மீறலைப் பற்றிய இந்த அறிக்கை வெளியிடப்படுவதற்கு ஒரு மாதத்துக்கு முன்பாகவே, ஐ.நா. மனித உரிமைக் கமிஷனுக்கான இந்தியத் தூதுக்குழுத் தலைவர் வி.என்.கட்கிலிடம் கொடுத்து விளக்கம் கேட்கப்பட்டது. அதற்கு முன்பு மாநில முதல்வர்கள், உள்துறை அமைச்சர்களுக்கும் அனுப்பப்பட்டது. ஆனாலும் இந்திய அரசோ, அமைச்சர்களோ இதுவரை அவற்றுக்கு பதிலளிக்கவில்லை. இந்த நிலையில் அறிக்கையின் மீது சந்தேகம் எழுப்புவதற்கு இவர்களுக்கு எந்த அருகதையும் இல்லை.

மறுபுறம், சர்வதேச மனித உரிமைக் கழகம் ஏகாதிபத்தியங்களின் நலனுக்காக ஒருசார்பாக செயல்படுகின்றன என்ற இந்திய ஆட்சியாளர்களின் குற்றச்சாட்டில் உண்மை இல்லாமல் இல்லை. நிறவெறி பிடித்த தென்னாப்பிரிக்கா, இஸ்ரேலின் இனவெறியாட்டம், பர்மா, தென் கொரியாவின் ராணுவ சர்வாதிகார அட்டூழியம் முதலானவற்றைப் பற்றி மனித உரிமைக் கழகம் பெரிதும் லட்சியம் செய்வதில்லை. ஏகாதிபத்தியங்கள் தமது ஆதிக்கத்துக்கான ஒரு கருவியாக மனித உரிமை விவகாரத்தைக் கேடாகப் பயன்படுத்துகின்றன என்பதும் உண்மைதான். இவற்றை அம்பலப்படுத்தி எதிர்ப்பதும், அதே சமயம் தமது நாட்டில் மனித உரிமைகளை மதித்து நடப்பதும்தான் வளரும் நாடுகளது ஆட்சியாளர்களின் கடமையாகும். ஆனால், இந்திய ஆட்சியாளர்

www.padippakam.com

# "அந்தக் கொடிய ஐந்து நாட்கள்!"

"நள்ளிரவுக்குப் பிறகு அவர்கள் எனது குடிசைக்கு வந்தார்கள். இரயில்வேக்குச் சொந்தமான சில அலுமினிய - செப்புத் தகடுகளை நான் திருடியதாகவும், குற்றத்தை ஒப்புக் கொள்ளுமாறும் அவர்கள் என்னை மிரட்டினார்கள். அவர்களோ 5 ஆண் போலீசுக்காரர்கள். நானோ நிராதரவான ஓர் ஏழை. அவர்கள் நடத்திய களேபரத்தில் எனது 8 வயது ஒரே மகளான மோகனா விழித்துக் கொண்டு மிரண்டு அழுதாள்.

"நான் எங்கேயும் எதையும் திருடவில்லை என்று அவர்களிடம் கெஞ்சிக் கதறினேன். அவர்கள் எதையும் கேட்பதாக இல்லை. என்னை இழுத்துச் சென்று ஜீப்பில் ஏற்றினார்கள். இரயில் பெட்டித் தொழிற்சாலையிலுள்ள ரயில்வே பாதுகாப்புப் படையின் கொட்டடியில் என்னை அடைத்து எனது சேலையை உருவிக் கொண்டு மானபங்கப்படுத்தினர். குற்றத்தை ஒப்புக்கொள்ளச் சொல்லி மிருகத்தனமாக என்னை அடித்தார்கள். நான் நிரபராதி என்று பலமுறை கெஞ்சியும்கூட அவர்கள் கருணை காட்டவில்லை. இரண்டு நாற்காலிகளைப் பிடித்துக் கொண்டு குனியச் சொல்லி என் முதுகில் சரமாரியாக தடியால் அடித்தார்கள். தொடர்ச்சியாக 5 நாட்களுக்கு இப்படி சித்திரவதை செய்தார்கள். எனது முதுகு முழுவதும் ரணமாகி தோலும் சதையும் பிய்ந்து தொங்கி இரத்தம் ஒழுகியது" என்று விம்மிக் கொண்டே அந்தக் கொடிய 5 நாட்களை நினைவு கூர்ந்தார், நாகம்மாள்.

நாகம்மாள் - சென்னை வில்லிவாக்கத்திலுள்ள சேரிப் பகுதியில் வாழும் ஓர் ஏழை. 28 வயதான அந்த இளம் விதவைக்கு ஒரே துணை அவரது 8 வயதுக் குழந்தை மோகனாதான். 4,5 வீடுகளில் வீட்டு வேலைகளைச் செய்து அதில் கிடைத்த அற்ப வருமானத்தைக் கொண்டு வாழ்க்கையோடு போராடி வந்தார். செய்யாத குற்றத்துக்காக பிப்ரவரி 5-ம் தேதியிலிருந்து அவருக்கு நேர்ந்த கொடுமைதான் இது.

தொடர்ச்சியான காட்டுமிராண்டித்தனமான சித்திரவதையால் அவர் பிப்ரவரி 10-ந் தேதியன்று காய்ச்சல் கண்டு மயங்கி விழுந்தார். பின் கழுத்திலிருந்து பிட்டம் வரை ரணமாகிக் கிடந்த போதிலும் அவருக்கு மருத்துவ உதவி செய்யப்படவில்லை. காய்ச்சலுக்கான சில மாத்திரைகளும் காபியும் மட்டுமே போலீசார் கொடுத்தனர். காய்ச்சல் தீவிரமானதால் பிப். 11-ந் தேதியன்று கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு மருத்துவ சான்றிதழ் பெறுவதற்காக அவரைக் கொண்டுவந்தனர். போலீசார் தூங்கியபோது, திருடிய பொருளுடன் தப்பியோடி ஒரு மரத்தில் ஏறி கீழே விழுந்து காயமடைந்ததாக மருத்துவரிடமும் கோர்ட்டிலும் கூறுமாறும் இல்லையேல் உன் மகளை என்றைக்குமே பார்க்க முடியாமல் செய்து விடுவோம் என்றும் போலீசார் அவரை மிரட்டினர். அதன் பிறகு ஒரு வாக்குமூலத்தை அவர்களாகவே தயாரித்து அதில் நாகம்மாளின் கைநாட்டையும் பெற்றுக்கொண்டனர்.



சட்ட விரோதமாக 5 நாட்கள் கொட்டடியில் அடைத்து சித்திரவதை செய்ததை மறைத்த போலீசார் பிப்.-12-ந் தேதியன்று நாகம்மாளைக் கோர்ட்டுக்கு கொண்டு வந்த பிறகு அவர் சட்டரீதியாக சிறையிடப்பட்டார். பின்னர் "சகோதரி" என்ற தன்னார்வக் குழுவின் உதவியால் பிணையில் வெளிவந்து அவர்களது காப்பகத்தில் தங்கி சிகிச்சை பெற்று வருகிறார்.

இத்தனைக்கும் நாகம்மாள் திருடியதாக கூறப்பட்ட பொருளின் மதிப்பு எவ்வளவு தெரியுமா? வெறும் 270 ரூபாய்தான்! தாங்களே திருடி விற்ற பொருளுக்கு கணக்கு காட்டத்தான் அப்பாவி நாகம்மாள் மீது பழிசுமத்தி இப்படியொரு கொடுமையை போலீசார் நடத்தியுள்ளனர்.

'மாதர்குல மாணிக்கம்' பாசிச ஜெயா ஆட்சியில் தொடரும் கொட்டடி சித்திரவதைகளுக்கு இச்சம்பவம் ஓர் உதாரணம்தான். இன்னும் வெளியுலகுக்குத் தெரியாதவை ஏராளம்! "போலீசார் நடத்தும் சித்திரவதைகளும், கொட்டடிக் கொலைகளும், கற்பழிப்புகளும் இந்தியாவில் அன்றாட நிகழ்ச்சிகளாகிவிட்டன" என்கிறது சர்வதேச மனித உரிமைச் சங்கத்தின் சமீபத்திய அறிக்கை. அது முற்றிலும் உண்மைதான் என்பதை தமிழக காட்டுமிராண்டி போலீசு மீண்டும் நிரூபித்துக் காட்டியுள்ளது.

கள் ஏகாதிபத்திய எதிர்ப்பையும் மனித உரிமை விவகாரத்தையும் எதிரெதிராக நிறுத்தி ஆதாயமடையப் பார்க்கின்றனர். இது தமது குற்றங்களை மறைக்க இந்திய மக்களிடம் நிலவும் அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வைக் கேடாகப் பயன்படுத்திக் கொள்ளும் முயற்சியே அன்றி வேறில்லை.

### நாட்டின் வளர்ச்சியா? மனித உரிமையா?

ஆட்சியாளர்கள் முன்வைக்கும் மற்றொரு வாதம், நாட்டின் வளர்ச்சிக்கு மனித உரிமை தடையாக இருக்குமானால் மனித உரிமைப் பிரச்சினையைப் பெரிதுபடுத்தக் கூடாது என்பதாகும். அதாவது, தேரி போன்ற பெரும் அணைக்கட்டுத் திட்டங்களால் ஆயிரக் கணக்கான ஆதிவாசிகளின் வாழ்வும் அவர்களின் நிலங்களும் பறிக்கப்படுமானால் அதற்காக அவர்களது உரிமைக்காகப் போராடுவது நாட்டின் வளர்ச்சிக்கு எதிரானதாகும்; நலிவடைந்த அரசுத் துறை ஆலைகளை மூடுவது அல்லது தனியார் முதலாளிகளுக்கு தாரைவார்ப்பது தான் இன்றைய நிலையில் நாட்டின் வளர்ச்சிக்குத் தேவையாக இருக்கும் போது, அதனால் பாதிக்கப்படும் தொழிலாளர்கள் உரிமை கோரி போராடுவதை ஏற்க முடியாது என்பதாகும். நாட்டின் வளர்ச்சியை முன்னிட்டு ஏழைநாடுகளில் மனித உரிமை விவகாரத்தை பெரிதுபடுத்தக்கூடாது; வளர்ச்சியடைந்த நாடுகளில்தான் இதை முக்கிய பிரச்சினையாக கருத முடியும் என்று வாதிடுகின்றனர்.

ஆனால் மக்களின் வாழ்வையும் உரிமையையும் பறித்துக் கொண்டு எந்த நாடும் வளர்ச்சியடைந்ததாக வரலாறில்லை. அப்படி வளர்ச்சியடைந்தாலும் அது நாடாக இருக்காது. சுடுகாடாகத்தான் இருக்க முடியும். இங்கே நாடு என்று ஆட்சியாளர்கள் குறிப்பிடுவது தரகு முதலாளிகள், நிலப் பிரபுக்கள், ஏகாதிபத்தியங்களின் நலனையும் வளர்ச்சியையும்தான். அவர்களின் ஆதிக்கத்துக்கும் வளர்ச்சிக்கும் உழைக்கும் மக்களின் வாழ்வையும் உரிமையையும் பலியிடச் சொல்வது அப்பட்டமான பாசிச அடக்குமுறையே அன்றி வேறில்லை. ஜெர்மனியை வல்லரசாக மாற்றப் போவதாகக் கூறி, இலட்சக்கணக்கான யூதர்களையும், கம்யூனிஸ்டுகளையும் [illegible] ஒழித்த பாசிச இட்லரின் வாதம்தான் இது.

### தனிநபர் பயங்கரவாதமும் அரசு பயங்கரவாதமும்

"மனித உரிமை அமைப்பினர் போலீசு - இராணுவத்தின் அத்துமீறல்களைப் பற்றித்தான் பேசுகிறார்களே தவிர, அப்பாவி பொது மக்களை பயங்கரவாதிகள் அநியாயமாக சுட்டுக் கொல்வதையும் அவர்களது கருத்துரிமையை மறுப்பதைப் பற்றியும் வாயே திறப்பதில்லை. அவர்கள் பயங்கரவாதிகளின் பிரச்சாரகர்களாகத்தான் செயல்படுகிறார்கள். வதந்திகளும் பொய்களும் தான் அவர்களது குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரமாக உள்ளது. பயங்கரவாதத்தை முறியடிக்க அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளை சீர்குலைக்கும் முயற்சியே இது. எனவே மனித உரிமை மீறல் பற்றி அவர்கள் போடும் கூச்சல்களைப் பொருட்படுத்த வேண்டியதில்லை" —இது இந்திய ஆட்சியாளர்களின் மூன்றாவது முக்கியமான வாதம்.

இங்கே, தனிநபர் அல்லது சிறுகுழுக்களின் பயங்கரவாத நடவடிக்கைகளையும் அரசு பயங்கரவாதத்தையும் ஆட்சியாளர்கள் சமமாக நிறுத்துகிறார்கள். ஆனால் அரசின் அமைப்பு ரீதியான திட்டமிட்ட பயங்கர

படிப்பகம்

www.padippakam.com

..ாத வன்முறையையும், தீவிரவாதிகளின் ..ாக்குதல்களையும் ஒருக்காலும் சமப்ப ..த்த முடியாது. மக்களுக்கு ஜனநாயக உரி ..மைகள் மறுக்கப்படுவதன் எதிர் விளைவு ..ான் தனிநபர் பயங்கரவாத நடவடிக்கை. ..து விரக்தியின் வெளிப்பாடு. அரசு பயங்க ..வாதத்துக்குப் பழிக்குப்பழி வாங்கும் எதிர் ..டவடிக்கை. ஆனால் அரசு பயங்கரவா ..மோ திட்டமிட்ட கொலைவெறியாட்ட நட ..படிக்கை. இரண்டையும் ஒருக்காலும் சமமா ..ப் பாவிக்க முடியாது. அரச பயங்கர ..ாதத்தை எதிர்ப்பதாலேயே மனித உரி ..மைக் குழுவினர் தனிநபர் பயங்கரவா ..த்தை ஆதரிப்பதாக கருத முடியாது. தமது அரசு பயங்கரவாத அடக்குமுறையை மூடி ..றைக்க ஆட்சியாளர்கள் செய்யும் கீழ்த்தர ..ான அவதூறுதான் இது.

அதே சமயம் சில சீக்கிய தீவிரவாத அமைப்புகளும் காஷ்மீரின் அல்லா புலி ..ள், ஹிஸ்புல் போன்ற பாக். ஆதரவு இஸ் ..ாமிய அடிப்படைவாத அமைப்புகளும் அப்பாவி இந்துக்கள் மீது பயங்கரவாதத் ..ாக்குதல் நடத்தி கொன்றொழிப்பதையும் அவர்களை தமது மாநிலத்திலிருந்து விரட்டி ..படிப்பதையும் நாம் அங்கீகரிக்க முடியாது. இவற்றை அரச பயங்கரவாதத்தின் எதிர் ..விளைவுதான் என்று நியாயப்படுத்தவும் ..முடியாது. இத்தகைய மதவெறி பயங்கரவா ..த் தாக்குதல்களை அம்பலப்படுத்தி சமரச ..மின்றி எதிர்த்து முறியடிக்க வேண்டியது ..மனித உரிமை - ஜனநாயக இயக்கங்களின் ..கடமையாகும். ஆனால் பெரும்பாலான ..மனித உரிமை அமைப்புகள் இதில் உரிய அக்கறை காட்டுவதில்லை. இதனால் குடிப் ..ரிமை இயக்கங்களின் அருகதையையும், நேர்மையையும் ஆட்சியாளர்கள் கேள்விக் ..குள்ளாக்குகின்றனர். இதனால் அரச பயங்க ..வாதத்துக்கு எதிரான, நியாயமான ஜனநா ..யக உரிமைக்கான போராட்டங்கள் கூட தார் ..மீக ஆதரவை இழந்து விடுகின்றன.

### ஈழத் தமிழருக்கு இங்கே உரிமை வேண்டும் ஈழத்திலும் ஜனநாயகம் வேண்டும்

இதே போல, ''ஈழ அகதிகளை வெளி யேற்றாதே! ஈழப் போராளிகளுக்கும் அகதி களுக்கும் தமிழகத்தில் தஞ்சம்புக உரிமை உண்டு'' என்று போராடும் அதேசமயம் ஈழத்திலும் ஜனநாயகம் வேண்டும் என் பதை நிபந்தனையாக வைத்துப் போராடு வது குடியுரிமை இயக்கங்களின் இன்றைய முக்கிய கடமையாக இருக்க வேண்டும். ஈழத்தில் அப்பாவி சிங்கள சிவிலியன்க ளைக் கொல்லுவது, சக போராளிகளையும் இயக்கங்களையும் தடை செய்து இரகசிய மாக கொன்றொழிப்பது முதலான புலிக ளின் ஜனநாயக விரோத பாசிச நடவடிக்கை களையும் அம்பலப்படுத்தி எதிர்ப்பதுதான் நேர்மையான ஜனநாயக உரிமை இயக்கங்க ளின் பணியாகும். ஆனால் களத்தில் நின்று போராடும் புலிகளை விமர்சிப்பது சிங்கள அரசு பயங்கரவாதத்துக்குத் துணைப்போவ தாகும் என்று கூறி பல அமைப்புகள் வாய் மூடி கிடக்கின்றன. இத்தகைய சந்தர்ப்பவா தம்தான் சிங்கள அரசு பயங்கரவாதத்தை

கச் செய்கிறது. நாளடைவில் ஈழத் தமிழர்க ளின் ஆதரவும் இல்லாமல் செய்து விடுகி றது. குடியுரிமை இயக்கங்கள் பயங்கரவாத அமைப்புகளின் பிரச்சாரகர்கள் என்று முத் திரை குத்தி பழிதூற்றவும் தமது அரசு பயங்க ரவாதத்தை நியாயப்படுத்தவும் இலங்கை அரசுக்கும் இந்திய மேலாதிக்கவாதிகளுக் கும் வாய்ப்பாக அமைந்துவிடுகிறது.

### பலவீனமான மனித உரிமை இயக்கங்கள் பரவிவரும் பயங்கரவாத அடக்குமுறை

அரசு பயங்கரவாத அடக்குமுறை யின், காக்கிச்சட்டை ரௌடிகளின் சித்திரவ தைகளும் கொட்டடிக் கொலைகளும் பெரு கிவிட்ட நிலையில், இந்தியாவில் குடியு ரிமை - ஜனநாயக உரிமைக்கான இயக்கங் கள் பலமானதாக இல்லை என்பது வேத னைக்குரியது. முன்முயற்சியுடன் செயல்ப டும் ஒருசில அமைப்புகள் கூட, குறிப்பிட்ட அரசியல் மற்றும் அரசியல் கட்சி சார்புடை யவைகளாகவே உள்ளன. அவற்றின் செயல்பாடுகள் நாடு தழுவிய ரீதியில் அல் லாமல், குறிப்பிட்ட மாநில அல்லது பிராந் திய வரம்புக்குட்பட்டவையாக உள்ளன. பாரதூரமான அடக்குமுறை - அத்துமீறல்க ளுக்கு எதிராக பிரச்சார இயக்கங்களையும் சட்ட ரீதியான போராட்டத்தையும் மேற் கொள்ளும் இத்தகைய அமைப்புகள், மக் கள் அன்றாடம் எதிர்கொள்ளும் அடக்கு முறை - ஜனநாயக உரிமைப் பறிப்பு முதலா னவற்றுக்கு எதிராகப் போராடும் அளவுக்கு இன்னமும் வளரவில்லை.

இதன் காரணமாகவே மனித உரிமை அமைப்புகளை துச்சமாக மதித்து, அவற் றின் மீது பழி தூற்றி தமது அரச பயங்கரவாத அடக்குமுறையை ஆட்சியாளர்கள் மேலும் தீவிரப்படுத்தி வருகிறார்கள். 1992-ம் ஆண்டை கொட்டடிக் கொலைகளற்ற ஆண் டாக மாற்றப் போவதாக டெல்லி போலீசு கமிஷனர் அறிவித்த 3 மாதங்களுக்குள்ளா கவே டெல்லியில் 4 கொட்டடிக் கொலைகள் நடந்துள்ளன. தமிழகத்தில் கடந்த ஒரு மாதத்துக்குள் குள்ளஞ்சாவடி, ஒட்டன்சத்தி ரம், அம்பாத்துறை, நாகூர் ஆகிய போலீச நிலையங்களில் 4 கொலைகள் போலீசாரால் நடத்தப்பட்டுள்ளது.

கொட்டடிக் கொலைகளை — சித்திர வதை முகாம்களை நடத்துவதில் பாசிச இட் லரையும் இந்திய போலீசு விஞ்சிவிட்டது. அவன் கண்களைத் தோண்டினான்; ஆண் மையைப் பறித்தான்; கம்யூனிசப் புரட்சியா ளர்களை நரவேட்டையாடினான். இந்த அக் கிரமங்களுக்கெல்லாம் தோழர் ஸ்டாலினது செஞ்சேனை தண்டனை அளித்தது. ஐரோப்பா முழுவதும் இருந்த பாசிச இட்ல ரது எஸ்.எஸ்.குண்டர் படையை அழித்தொ ழித்தது. இட்லரின் வாரிசுகளான இந்திய போலீசு கிரிமினல் கும்பலைத் தண்டிக்கவும் அழித்தொழிக்கவும் ஒரு செஞ்சேனையி னால்தான் முடியும். கம்யூனிசப் புரட்சியா ளர்களின் தலைமையில் உழைக்கும் மக் களே அதை உருவாக்க முடியும்.

● பாலன

## காலனி கேட்டு பஸ் மறியல்! தாழ்த்தப்பட்டோர் மீது போலீசு தடியடி!

உசிலை வட்டம் ஆரியப்பட்டியில் ஆதிதிராவிட மக்கள், காலனி வீடுகள் கேட்டு 15 வருடகாலமாக போராடி வருகின் றனர். பகுதியிலுள்ள விவசாயிகள் விடு தலை முன்னணி தலைமையில் அணிதி ரண்டு உயர் அதிகாரிகளுக்கு மனு கொடுத் தும், ஊர்வலம் - பொதுக்கூட்டம் நடத்தி யும், ஆர்.டி.ஓ. அலுவலகம் முன்பு ஆர்ப் பாட்டம் செய்தும் இதுவரை அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எனவே 18.3.92 அன்று பஸ் மறியல் போராட்டம் நடத்தினர். சுமார் 100 பேர் விவசாயிகள் விடுதலை முன்னணி தோழர் சி.நல்லு தலைமையில் முழக்கத்துடன் ஊர் வலமாக வந்து மறியல் செய்யும் இடத்திற்கு வந்து நடுரோட்டில் அமர்ந்தனர். தோழர் குருசாமி, ஆதி திராவிட மக்களுக்கு அரசு அறிவிக்கும் குறைந்த பட்ச சலுகைக்கூட கிடைப்பதில்லை என்பதையும், இன்றைய ஓட்டுக் கட்சிகளின் பித்தலாட்டத்தையும், அதிகாரிகளின் ஊழல் - அடாவடித்தனத்தை யும் அம்பலப்படுத்திப் பேசினர். மறியலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது அங்கு வந்த போலீசார் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி காட்டுமிராண்டித்தனமாக தடியடி நடத்தினர். இன்ஸ்பெக்டர் தங்கராஜ் தோழர் குருசாமியை ஆபா[illegible]னான். இன்ஸ்பெக்டர், எஸ்.ஐ. இருவரும் சேர்ந்து தோழரை பலவந்தமாக சட்டையைப் பிடித்து இழுத்துச் சென்றனர். அப்பொழுது கூடியிருந்த மக்கள் மிக ஆவேசமாக எங்க ளையும் வேனில் ஏற்றுங்கள் என்று கோஷ மிட்டுக் கொண்டு வேன் வாசற்படியை நோக்கி ஓடிவந்தனர். இதைக்கண்டு ஆத்திர மடைந்த இன்ஸ்பெக்டர் தங்கராஜ் மேலும் காட்டுத்தனமாக தாக்கினான். இத்தாக்குத லில் 5 பெண்கள் உட்பட 10 பேர் காயம டைந்தனர். 4 பெண்கள் உட்பட 22 பேர் கைதாகி உள்ளனர். கைதான பெண் தோழர் களைப் பார்த்து இன்ஸ்பெக்டர் தங்கராஜ் ''பொட்டத் ........ ளுக்கு அரசியல் தேவை யாடி?'' எனவும் இன்னும் மோசமாக ஆபா சமாகத் திட்டினான்.

அம்பேத்கார் பிறந்த நாளுக்கு விடுமு றையெல்லாம் அறிவித்து அம்பேத்கார் நூற் றாண்டு விழாவை ஒருபுறம் கொண்டாடிக் கொண்டிருக்கும் அரசு, மறுபுறம் தாழ்த்தப் பட்டவர்கள் மீதான அநீதிகளை கண்டு கொள்வதில்லை. தாழ்த்தப் பட்டவர்கள் சிறு சலுகைகளுக்காகப் போராடினாலும் வெறி யோடு அடக்கி ஒடுக்குகிறது. அதிகாரிக ளும் அரசும் போலீசும் தாழ்த்தப்பட்ட மக்க ளுக்கு எதிரானதே என்பதுதான் உண்மை. அரசு கொண்டாடும் அம்பேத்கார் நூற் றாண்டு விழா எல்லாம் நாடகம் என்பது வெளிச்சம்.

படிப்பகம்

www.padippakam.com

# "சி.பி.எம்." துரோகம் ஊழியர் படுகொலை



ராதாகிருஷ்ணன் - செங்கல்பட்டு மாவட்டத்தில் 'மார்க்சிஸ்ட்' கட்சியின் முழு நேர ஊழியராகச் செயல்பட்டவர். அதன் தொழிற்சங்கமான சி.ஐ.டி.யு.-வின் பொதுக் குழுவிலும், கட்சியின் வட்டக் கமிட்டியிலும் உறுப்பினர். '70-களின் தொடக்கத்திலிருந்தே கட்சியோடு தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்ட துடிப்பான இளைஞர்.

கடந்த 31.3.92 அன்று ராதாகிருஷ்ணன் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டு, செங்கல்பட்டு "ஜிப்" கம்பெனி வாசலில், ஈக்கள் மொய்க்க பிணமாகக் கிடந்தார். கழுத்து நெறிக்கப்பட்டு அல்லது கொடிய விஷம் வைத்துக் கொல்லப்பட்டு வாயில் நுரை தள்ளிய நிலையில் அவர் மாண்டு போயிருந்தார்.

போலிக் கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கிய பொறுப்பிலிருந்து ராதாகிருஷ்ணன் செயல்பட்ட போதிலும், அநீதிக்கு எதிராகக் குரலெழுப்பும் போர்க் குணத்தை இயல்பாகக் கொண்டிருந்தார். சாராய உடையாரின் ஓரியண்ட் டிஸ்டிலரீஸ் எனும் சாராய ஆலையின் கழிவு நீர், பாலாற்றில் கலப்பதை எதிர்த்தும், திம்மாவரம் எல்.ஜி.ரப்பர் ஆலை விஷப் புகையைப் பரப்பி சுற்றுச் சூழலை நஞ்சாக்கிவருவதை எதிர்த்தும், கழிவு நீரை வீதியில் திறந்துவிடும் அங்கமுத்து திரையரங்கத்தின் அடாவடித்தனத்தை எதிர்த்தும் கடுமையாகப் போராடி வந்தார். 'குடியரசு'த் தலைவர் வெங்கட்ராமனின் பினாமிகள் நடத்தும் "திரிவேணி அகாடமி" எனும் நவோதயா பாணியிலான கல்வி அறக்கட்டளையின் ஊழல்களை மக்களிடம் தொடர்ந்து அம்பலப்படுத்தி வந்தார்.

கடைசியாக, பாசிச ஜெயாவின் அந்தப்புர தோழி சசிகலாவின் கூட்டாளியும், காண்டிராக்டருமான "ரதிமீனா" டிராவல்ஸ் நிறுவனத்தின் முதலாளி பாலாற்றின் மணலை சட்டவிரோதமாக கடத்துவதை எதிர்த்து வந்தார். இதனால் நகரில் குடிநீர் தட்டுப்பாடு பெருகி வருவதை விளக்கி சர்வகட்சி ஆதரவோடு அண்மையில் கடையடைப்புப் போராட்டத்தை நடத்தினார். பீதியடைந்த "ரதிமீனா" முதலாளி, அனைத்துக் கட்சிப் பிரமுகர்களுக்கும் பணத்தை அள்ளித் திணித்து வாயை அடைத்த போதிலும், ராதாகிருஷ்ணன் மட்டும் இதற்கு மசியவில்லை.

அநீதிகளுக்கெதிராக ராதாகிருஷ்ணன்

நடத்தி 'நன்கொடை'களைப் பெற்று வந்தனர். இதை அறிந்ததும் ராதாகிருஷ்ணன், அவர்களை அம்பலப்படுத்தி எதிர்க்கத் தொடங்கினார். இனியும் விட்டு வைத்தால் ஆபத்து என்று துரோகிகள் அவரைத் தனிமைப் படுத்தத் தொடங்கினர். அவரை மனநோயாளி என்று அவதூறு செய்து பரிகசித்தனர்.

"திரிவேணி அகாடமி" ஊழல் விவகாரத்தை மாவட்டக்குழு நிகழ்ச்சி நிரலில் சேர்க்க விடாமல் கே.நாராயணசாமி, டி.கிருஷ்ணராஜ், ஜி.மணி, டி.லட்சுமணன், ஒய்.எம்.நாராயணசாமி முதலான முன்னணி துரோகத் தலைவர்கள் பெரும்பான்மையுடன் தடுத்தனர். சாராய உடையாருக்குச் சாதகமாக நடந்து கொண்டதால், அவரது ஏற்பாட்டின்படி பி.சுந்தர்ராஜன் என்ற மாவட்டக்குழு உறுப்பினர் ரூ. 15,000 'நன்கொடை' பெற்றார். டி.லட்சுமணனின் சாதிக்காரர் - உறவினர் என்பதால் அங்கமுத்து திரையரங்கு கழிவு நீர் விவகாரம் கிடப்பில் போடப்பட்டு, அராஜகமாக செயல்பட்டதாக ராதாகிருஷ்ணன் எச்சரிக்கப்பட்டார்.

இவற்றையெல்லாம் சகித்துக் கொள்ள முடியாமல் ராதாகிருஷ்ணன் எதிர்த்த போது, "நீ நக்சலைட் ஆதரவாளன்; விடுதலைப் புலிகளை ஆதரிப்பவன்; நீ கட்சிக் கட்டுப்பாட்டை மீறி நடக்கிறாய்; பிடிக்காவிட்டால் கட்சியை விட்டுப் போய்விடு!" என்று அவதூறு - பிளாக்மெயில் முறைகளின் மூலம் அவரைத் தனிமைப்படுத்தி கட்சியைவிட்டே விரட்ட முயற்சித்தனர்.

விரக்தியின் விளிம்புக்கே தள்ளப்பட்ட ராதாகிருஷ்ணன் கட்சியின் மாநிலச் செயலரான நல்லசிவனுக்கு பலமுறை கடிதம் எழுதி முறையிட்டார். கட்சித் தலைவர்களின் துரோகத் தனத்திற்கும் எதிரிகளுடன் கூடிக்குலாவி காட்டிக் கொடுத்ததற்கும் அவரது கடிதங்களே சாட்சியமாக உள்ளது. போந்தூரில் 50 ஏக்கர் பரப்பளவில் 'மார்க்சிஸ்ட்' கட்சியால் நடத்தப்பட்டு வரும் கூட்டுப் பண்ணையில் மாநிலத் தலைவர்களில் ஒருவரான பி.ஆர்.பரமேஸ்வரனும், விவசாய சங்கத் தலைவர் கிருஷ்ணராஜும் கூட்டுச் சேர்ந்து லட்சக்கணக்கில் கொள்ளை அடித்துள்ளதையும் அவர்களது குடிவெறி கூத்துக்களையும் இக்கடிதங்களில் அம்பலப் படுத்தியுள்ளார். டி.லட்சுமணன், நாராயணசாமி, மணி ஆகியோர் முதலாளிகளிடம் மாதா மாதம் மாமூல் வாங்கு

மூலம் வட்டித் தொழிலை நடத்தி வருவதையும் தனது கடிதத்தில் ராதாகிருஷ்ணன் தோலுரித்துக் காட்டியுள்ளார். கட்சிக்கு வெளியே - இதர ஓட்டுக் கட்சிப் பிரமுகர்களிடமும் ஏன், போலீசிடம்கூட தன்னைப் பற்றி அவதூறு செய்து தனிமைப் படுத்தி வருவதையும் வேதனையுடன் குறிப்பிட்டுள்ளார். இவ்வளவுக்குப் பிறகும் நல்லசிவன் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

கட்சி அவருக்கு ஆதரவாக இல்லை என்பதை உணர்ந்து கொண்ட முதலாளிகள், இதைச் சாதகமாக்கிக் கொண்டு திட்டமிட்டே ராதாகிருஷ்ணனைக் கொலை செய்துள்ளனர். ரதிமீனா அல்லது சாராய உடையாரின் அடியாட்கள் இக் கொலையை செய்திருக்கலாம் என்று அவரது நெருங்கிய நண்பர்கள் ஊகிக்கின்றனர்.

இக் கொலைக்குப் பின்னர், குற்றவாளிகளைத் தண்டிக்கவும் உரிய விசாரணை நடத்தவும் 'மார்க்சிஸ்ட்' கட்சி எந்தவொரு போராட்டத்தையும் இன்றுவரை நடத்தவில்லை. 'மார்க்சிஸ்ட்' தலைவர்களின் துரோகத்தை சில பத்திரிக்கைகள் அம்பலப் படுத்தியும்கூட, இதுவரை கட்சித் தலைமை தன்னிலை விளக்கம் அளிக்கவில்லை.

ராதாகிருஷ்ணன் மட்டுமல்ல; 'மார்க்சிஸ்ட்' கட்சியிலுள்ள ஊழியர்கள்கூட மறந்து போயிருக்கலாம். 'மார்க்சிஸ்டுகள்' தமது நாற்காலி சுகத்துக்காக "70-களில் ஆயிரக்கணக்கான நக்சல்பாரி புரட்சியாளர்களை போலீசுக்குக் காட்டிக் கொடுத்து நரவேட்டையாட துணை நின்றார்கள். அதைத் தொடர்ந்து கடந்த பல்லாண்டுகளாக கட்சித் தலைமையை விமர்சிப்பவர்களை எல்லாம் "நக்சலைட்" என்று முத்திரை குத்தி, எங்களுக்கும் அவருக்கும் எந்தத் தொடர்புமில்லை என்று பகிரங்கமாக போலீசுக்குக் காட்டிக் கொடுத்தனர். இதோ, மீண்டும் 'மார்க்சிஸ்டு' துரோகிகள் தமது முகத்திரையை கிழித்தெறிந்துவிட்டு வந்துவிட்டார்கள். தமது கட்சி ஊழியரையே பலிகொடுக்குமளவுக்கு அவர்களது துரோகம் புதிய பரிமாணத்தை எட்டியிருக்கிறது.

'மார்க்சிஸ்ட்' கட்சியிலுள்ள புரட்சியை நேசிக்கும் ஊழியர்கள் இனி ஒரு முடிவுக்கு வரவேண்டும்; அவர்கள் மட்டுமல்ல; அக்கட்சி மீது இன்னமும் நம்பிக்கை வைத்துள்ள உழைக்கும் மக்கள், இனிமேலும் இந்தத் துரோகக் கூட்டத்தை புரட்சிகர கம்யூனிஸ்டுகளாக அங்கீகரிப்பதைப் பற்றி

படிப்பகம்

www.padippakam.com



# புரட்சிப் பாதையில் முன்னேறுவோம்!

ஏப்ரல் 22:
உலகப் பாட்டாளி வர்க்கத்தின்
ஒடுக்கப்பட்ட மக்களின்
மாபெரும் தலைவர் லெனின்
பிறந்த நாள்.

★ ★ ★

புத்துலகச் சிற்பியே, புரட்சிப் புயலே, அடிமை விலங்கொடித்து ஆர்த்தெழுந்த ரஷிய சோசலிசப் புரட்சி நாயகனே, அனைத்துலக உழைக்கும் மக்களின் கலங்கரை விளக்காய்த் திகழ்ந்த சோசலிச நாடுகளிலே முதலாளித்துவத்தை மீட்ட துரோகிகள் இன்று உனது சிலைகளைத் தகர்த்து, நீ வகுத்தளித்த மார்க்சிய — லெனினிய சித்தாந்தத்தை குழிதோண்டிப் புதைக்கக் கிளம்பியுள்ளார்கள். அவர்களின் இந்திய வாரிசுகளோ காலத்திற்கு ஏற்ப மாறவேண்டும் என்று கலைப்பு வாதத்தில் இறங்கி உன்னை பூஜையறைப் படமாக்க தருணத்தை எதிர்பார்த்து காத்திருக்கிறார்கள். இந்தத் துரோகிகளைத் தோலுரித்து மகத்தான மார்க்சிய — லெனினிய — மாசேதுங் சிந்தனையைப் பற்றிப் பாதுகாக்க, ஆயிரமாயிரம் தியாகிகளின் உதிரத்தால் சிவந்த புரட்சிப் பாதையில் தடம் புரளாமல் தொடர்ந்து முன்னேற உனது 123 -வது பிறந்த நாளில் சூளுரைக்கிறோம்!

ஏப்ரல் 22:
வசந்தத்தின் இடிமுழக்கமாய் எதிரொலித்த மகத்தான உழவர் பேரெழுச்சியில் உதித்தெழுந்த செந்தாரகை இந்தியப் பொதுவுடைமைக் கட்சி (மார்க்சிஸ்ட் — லெனினிஸ்ட்) யின் நிறுவன நாள்.

★ ★ ★

அன்று அது குழந்தை. இன்று போர்க்குணமிக்க இளைஞன். கால் நூற்றாண்டுகாலப் போராட்டத்தில் அதன் மேனியில்தான் எத்தனை வீரத் தழும்புகள் !

எழுபதாண்டுகால திருத்தல்வாத காரிருளைக் கிழித்து தரகுப் பெருமுதலாளிகள் — நிலப் பிரபுக்களை அவர்களின் எஜமானர்களான ஏகாதிபத்தியங்களை குலைநடுங்க வைத்த முன்னணி புரட்சிப்படை!
போர்முறைத் தவறுகளினால் துரோகிகள் — ஓடுகாலிகளின் சீர்குலைவுகளினால்,எதிரிகளின் கொலைவெறியாட்டத்தால் பின்னடைவுகளையும் பிளவுகளையும் சந்தித்த போதிலும் இந்திய உழைக்கும் மக்களின் ஒரே நம்பிக்கை நட்சத்திரம்!

புரட்சி வானிலே அதன் செம்பதாகை உயர்த்திய ஆயிரமாயிரம் உயிர்த் தியாகிகளின் வழியில் தொடர்ந்து முன்னேறுவோம்!

நாட்டையும் மக்களையும் அடகுவைத்து அடிமைப்படுத்தும் தேசத்துரோக பாசிச ஆளும் கும்பலையும் இந்துவெறி பாசிச அபாயத்தையும் தகர்த்தெறிவோம்! புதிய ஜனநாயகப் புரட்சியில் வெல்வோம்!

## மே நாள் சூளுரை

- ★ உலக மேலாதிக்கத்துக்கு முயலும் அமெரிக்க வல்லரசை முறியடிப் போம்!
- ★ நாட்டை மீண்டும் காலனியாக்கும் காங்கிரசின் புதிய பொருளாதாரக் கொள்கைகளை முறியடிப்போம்!
- ★ இந்து மதவெறி பாரதீய ஜனதாவை முறியடிப்போம்!
- ★ பார்ப்பன - பாசிச ஜெயாவின் காட்டாட்சியை முறியடிப்போம்!
- ★ காஷ்மீர், அஸ்ஸாம் மற்றும் அனைத்து தேசிய இனங்களின் பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமைக்கு குரல் கொடுப் போம்!
- ★ உழுபவருக்கே நிலம் சொந்தம்! உழைப்பவருக்கே அதிகாரம்! புதிய ஜனநாயகப் புரட்சிக்கு அணிதிரள்வோம்!

# "உலக வங்கி - அமெரிக்காவை எதிர்க்காதே!" —'கியூ' போலீசு தாக்குதல்

பகத்சிங் நினைவு நாளை முன்னிட்டு, "ஐ.எம்.எஃப். - உலக வங்கி- அமெரிக்காவின் பிடியில் நாட்டை அடகு வைத்த காங்கிரசு தேசத்துரோக கும்பலை ஒழிக்க, தேசபக்தனே உனது தியாக வழியில் போராட சூளுரைக்கிறோம்" என்ற முழக்கமடங்கிய சுவரொட்டியை 5.4.92 அன்று இரவு இராமேசுவரம், புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணித் தோழர்கள் ஒட்டினர். அப்போது 'கியூ' பிரிவு இன்ஸ்பெக்டர் மயில்சாமியும் இன்னொரு 'கியூ' பிரிவு போலீசும் தோழர்கள் கிரிதரன், சுந்தர் இருவரையும் அடித்து இழுத்துச் சென்றனர்.

விக்டோரியா லாட்ஜில் 'கியூ' போலீசு தங்கியிருக்கும் அறைக்கு இழுத்துச் சென்று அங்கு போனதும் புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணியிலிருந்து விலகி விட்டதாகவும் இனி செயல்பட மாட்டேன் என்று எழுதி தந்தால் விட்டுவிடுகிறோம் என்று கூறினர். அதற்கு தோழர்கள் மறுக்கவே அடித்து சித்ரவதை செய்து பிறகு நைச்சியமாகப் பேசியும் பார்த்தனர். தோழர்கள் எதற்கும் மசியாமல் இருக்கவே பொய் கேஸ் போட்டு 'தடா'வில் போட்டு விடுவதாக மிரட்டினர். பிறகு "நீங்க எழுதி ஒட்டிட்டு போய்விடுவீங்க. ஆனா எங்கள இல்ல போட்டு குடையுறான்க" என புலம்பியதோடு தோழர்களை ஆபாசமாகவும் திட்டினார்கள். இறுதியாக மாணவர்கள் யாரும் இல்லாததால் மாணவர் - இளைஞர் முன்னணி என்று செயல்படக்கூடாது என்றும் உங்கள் மேலிடத்தைக் கேட்டு பெயரை மாற்றுங்கள் என்றும் உபதேசித்தார்கள். தோழர்களின் உறுதிப்பாட்டைக் கண்டு பீதியடைந்த போலீசு கும்பல் மறுநாள் காலையில் விடுவித்தனர். பகுதி அ.தி.மு.க. புள்ளி சேகர் என்பவனும் போலீசுடன் சேர்ந்து தோழர்களை மிரட்டினான். அவனுக்கும் தோழர்கள் சூடாக பதில் தந்தனர். போலீசின் அடக்குமுறைக்கு எதிராக தோழர்கள் பகுதியில் சுவரொட்டி பிரச்சாரம் செய்து வருகின்றனர்.

www.padippakam.com

# பா.ம.க.வின் வன்னிய சாதிவெறி —இதோ சான்றுகள்!

பாட்டாளி மக்கள் கட்சியும் அதன் நிறுவனர் ராமதாசும் போட்டுள்ள முற்போக்கு வேடத்தைத் திரைகிழித்து புதிய ஜனநாயகம் ஏற்கனவே எழுதியது. அப்பொழுது பலர் "என்ன ஆதாரம்? நிரூபிக்க முடியுமா?" என்று கேட்டெழுதினார்கள். நாங்கள் பல ஆதாரங்களை முன்வைத்தும் ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள். எனினும் புதிய ஜனநாயகம் தொடர்ந்து பா.ம.க-வின் வன்னிய சாதி வெறிக்கு ஆதாரங்களை எடுத்து தந்து அம்பலப்படுத்தும் என்று அறிவித்தோம். இதோ மேலும் சில ஆதாரங்கள்.

வேதாரண்யம் - கொள்ளித்தீவைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட பெண் ராணியை ஆறுகாட்டுத்துறையைச் சேர்ந்த செல்வம் (வன்னியர்) என்பவன் கேலி - கிண்டல் செய்தான். ராணியின் அண்ணன் ரவி, செல்வத்தைக் கண்டிக்கச் சொல்லி ஊர் நாட்டாண்மைக்காரரும் வன்னிய சங்கத்தைச் சேர்ந்தவருமான சேதுபதி என்பவரிடம் முறையிட்டார். அதற்கு சேதுபதி "என்னால் ஒன்றும் செய்ய முடியாது; திறமை இருப்பவன் மோதிப் பாருங்கள்" என்று கூறிவிட்டு மறுபுறம் செல்வத்தை தூண்டி விட்டார். "பள்ளன், பறையனெல்லாம் நம்மை கண்டிப்பதா, இதற்கு ஒரு முடிவு கட்டுகிறேன்" எனக்கூறி ரவியை அடிக்க செல்வம் முயற்சித்திருக்கிறான். இதுவல்லாமல் வேதாரண்யம் காங்கிரசு எம்.எல்.ஏ., பி.வி.ராஜேந்திரனுடன், கடந்த சட்டமன்ற தேர்தலில் பா.ம.க. சார்பாக போட்டியிட்டவரும் பா.ம.க -வின் தஞ்சை-காயிதே மில்லத் மாவட்ட செயலாளருமான மாரிமுத்து கவுண்டர், தேத்தாக்குடி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் எஸ்.கைலாச கவுண்டர் (பா.ம.க.) மற்றும் பலர் சேர்ந்து தாழ்த்தப் பட்டவர்கள் மீது தாக்குதல் தொடுக்க ஆலோசனை நடத்தினார்கள். எம்.எல்.ஏ-வும் ஆசி வழங்கியிருக்கிறார்.

5.3.92 அன்று எம்.எல்.ஏ.-வும் வன்னிய சாதி சங்கத் தலைவர்களும் 15 வேன்களில் அடியாட்களைக் கொண்டு வந்து உள்ளூர் அடியாட்களையும் சேர்த்துக் கொண்டு தாழ்த்தப் பட்டவர்களைத் தாக்கினர். ஆண்கள் இல்லாத நேரத்தில் திட்டமிட்டு வந்த சாதி வெறிக் கும்பல் கொள்ளித்தீவு பகுதியில் புகுந்து பெட்ரோலை ஊற்றி வீடுகளை கொளுத்திவிட்டு, பெண்களையும் சிறு குழந்தைகளையும் தாக்கிவிட்டு பணம், நகை, நெல் முதலியவற்றை கொள்ளையடித்தும் சென்றது. ரவியின் தந்தையைத் தாக்கி வலது கையை முறித்தது, வெறிக்கும்பல்.

வழக்கம் போலவே அதிகாரிகளும் பிறகு ஓடிவந்து பார்வையிட்டு கண் துடைப்பு- நிவாரண நாடகமாடினார்கள். பின் கலெக்டர் யோசனைப்படி ஊர்ப் பிரமுகர்களைக் கொண்ட 'அமைதிக் குழு' ஆர்.டி.ஓ. ஜெயராமன் தலைமையில் உருவாக்கப்பட்டது. தாழ்த்தப் பட்டவர்கள் தரப்பில் காங்கிரசின் அரிசன பிரிவின் துணைத் தலைவர் அஞ்சப்பன் இடம் பெற்றிருந்தார். இவர் மூலம் தாழ்த்தப்பட்டவர்கள் மிரட்டப்பட்டு, "ரவிக்கும் எங்களுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை; ஆறுகாட்டுத்துறையைச் சேர்ந்தவர்களுடன் (தாக்கியவர்கள்) இனி ஒற்றுமையாக இருப்போம்" என்று எழுதி வாங்கப்பட்டது.

அஞ்சப்பனின் மனைவி செண்பகம் எம்.எல்.ஏ.-விடம் "தாக்குதல் நடந்த போது நீங்கள் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தீர்களே, இது நியாயமா?" என்று கேட்டார். அதற்கு அவர் உங்களை விட, "மேல்சாதிகாரர்களிடமும் ஆறுகாட்டுத்துறையைச் சேர்ந்தவர்களிடமும்தான் ஓட்டுக்கள் அதிகம் இருக்கிறது. எனவே அவர்கள் பக்கம்தான் நிற்பேன்" என்று பகிரங்கமாகவே கூறியுள்ளார்.

போலீசு கண் துடைப்பிற்காக ஊர் நாட்டாண்மைக்காரர் சேதுபதி உட்பட மேல் சாதிக்காரர்களில் 42 பேரையும் (பெரும்பான்மையோர் இதில் அப்பாவிகள்), பாதிக்கப்பட்ட தாழ்த்தப் பட்டோர்களில் 18 பேரையும் கைது செய்து வழக்கு பதிவு செய்துள்ளது. பா.ம.க.வைச் சேர்ந்த மாரிமுத்துக் கவுண்டரின் மகன் (வக்கீல்)தான் மேல் சாதிக்காரர்களுக்கு ஆதரவாக வழக்கை நடத்தி வருகிறார்.

தாக்குதலின் போது சம்பவத்தை நேரில் கண்ட தாழ்த்தப்பட்ட சிறுவன் முருகேசன் மனநிலை பாதிக்கப்பட்டு மருத்துவமனையிலிருந்து இப்போதுதான் வீடு திரும்பினான். தாழ்த்தப்பட்டவர்கள் வயதுக்கு வந்த தங்கள் பெண்களை வெளியூரிலுள்ள உறவினர் வீடுகளில் தங்க வைத்துள்ளனர். மொத்தத்தில் இத் தாக்குதலுக்குப் பின் தாழ்த்தப்பட்டவர்கள் மரண பயத்திலேயே வாழ்ந்து கொண்டுள்ளனர்.

> "தாழ்த்தப்பட்டவரையே முதல்வராக்குவோம்!" என்ற பா.ம.க.-வின் முழக்கம், மக்களை ஏய்ப்பதற்கானதுதான். பா.ம.க., வன்னிய சாதியினரை அடிப்படையாக வைத்து கட்டப்பட்டதுதான். ராமதாசு தலைகீழாக நின்றாலும் இதை மாற்றிவிட முடியாது.

அரியலூர் அருகேயுள்ள மருவத்தூர் கிராமத்தைச்சேர்ந்தவர்களான அகிலா (வன்னியர்), கிருஷ்ணமூர்த்தி (தாழ்த்தப்பட்டவர்) ஆகியோர் அரியலூர் அரசு கலைக் கல்லூரியில் ஒன்றாகப் படித்ததில் தொடர்பு ஏற்பட்டு காதலரானார்கள். சாதிவெறி பிடித்த அகிலாவின் உறவினர்கள், கிருஷ்ணமூர்த்தியை ரத்தகாயப்படுத்திவிட்டு அகிலாவை அவருடைய அக்காள் கணவருக்கே மறுமணம் செய்ய முயன்றனர். இதனால் காதலர்கள்இருவரும்சககல்லூரிநண்பர்கள்உதவியுடன் மருவத்தூரைவிட்டு சென்னைக்குத் தப்பிவந்தனர். சென்னையில் நண்பர்கள் மூலம் முற்போக்கு இளைஞர் அணியினரை (R.Y.L.) தொடர்பு கொண்டு உதவி கேட்டனர். இவ்வமைப்பினரும் சில முற்போக்கு எண்ணம் கொண்ட பிரமுகர்களும் சேர்ந்து 16.3.92 அன்று கோடம்பாக்கம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு திருமணம் செய்து வைத்துப்பாதுகாப்புகொடுத்தனர்.

இதற்கிடையே மருவத்தூர் அருகிலுள்ள செந்துறை போலீசு நிலையத்தின் சப் இன்ஸ்பெக்டர் சுலைமானிடம் அகிலாவின் உறவினர்கள் 10 ஆயிரம் ரூபாய் லஞ்சம் கொடுத்து தூண்டிவிடவே வெறியாட்டம் போட்டார் சுலைமான். போலீசு பட்டாளத்துடன் சென்னை வந்து கிரௌன் ஹோட்டலில் தங்கி தாழ்த்தப்பட்ட மாணவர் விடுதிகளில் புகுந்துபலரைஇழுத்துவந்துமிரட்டியும்,தாக்கியும்விசாரித்தார்.

இன்னொருபுறம் மருவத்தூரில் தாழ்த்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொள்ளக் கூடாது என வன்னியர்கள் ஊர்கட்டுப்பாடு விதித்தார்கள். தாழ்த்தப்பட்டவர்கள் பொது இடத்தில் தண்ணீர் பிடிக்க தடைசெய்தனர். கிருஷ்ணமூர்த்தியின்தந்தையைமுந்திரிகாட்டில் தலைகீழாக கட்டி தொங்கவிட்டு தாக்கி வெறியாட்டம் போட்டனர். மருவத்தூர் பஸ் நிறுத்தத்தில் இறங்கும் வெளியூர்காரர்களிடம் "யார் வீட்டுக்கு வந்தீர்கள்?" எனக் கேட்டு அவர்கள் தயக்கம் காட்டினாலேயே உடன் மூர்க்கமாக தாக்கினர். இதைத் தொடர்ந்து சாதியப்பகைமையும்பதட்டமும் அருகிலுள்ளபொன்பரப்பி,குடிக்காடு,பெரியங்குறிச்சி, சிறுகளத்தூர், சேடக்குடிக்காடு, இலைக்கடம்பூர், நின்னையூர், செந்துறை, உஜ்ஜயினி, நல்லாம்பாளையம் முதலிய பகுதிகளுக்குப்பரவியது.

www.padippakam.com

செந்துறையில் தாழ்த்தப்பட்டவர்கள் பெரும்பான்மையோர் உள்ளதால் இவர்கள் கொடுத்த தைரியத்திலும் உதவியாலும்தான் இத்திருமணம் நடந்ததாக எண்ணிக் கொண்டு பிற பகுதிகளிலுள்ள வன்னியர்கள் ஆத்திரமடைந்தனர். பலபகுதிகளைச்சேர்ந்த வன்னிய சாதி வெறியர்கள், செந்துறையில் உள்ள சினிமா தியேட்டர் உரிமையாளர் வீர பாண்டியன்(வன்னியர்)துணையுடன்தாழ்த்தப்பட்டவர்களை தாக்க திட்டமிட்டனர். தியேட்டரில் நடந்த சிறுபிரச்சினையை சாக்காக வைத்து சைக்கிள் செயின், ஆக்சிலேட்டர் ஒயர், கத்தி போன்ற கொலைவெறி ஆயுதங்களுடன் 150பேர்கொண்டவன்னிய கும்பல் தாழ்த்தப்பட்டவர்களை தாக்கியது. இதில் 15 பேர் பலத்த காயமடைந்தனர். நான்கு பேர் உயிர் ஊசலாடும் நிலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர். இவர்களுக்கு சிகிச்சையளித்த ஜெயங்கொண்டம் மருத்துவமனை மருத்துவர் சின்னசாமி, வன்னியராதலால் சிறிய காயமே என பொய்ச்சான்றிதழ்வழங்கினார்.

கொலை வெறித்தாக்குதலில் ஈடுபட்ட பொன்பரப்பியைச் சேர்ந்த சொக்கலிங்கம், செந்துறை வீரபாண்டியன், ரமேஷ் உள்ளிட்ட அனைவரையும் கைது செய்யக் கோரி தாழ்த்தப்பட்டமக்கள்செந்துறையில்25.3.92 அன்று சாலை மறியலில் ஈடுபட்டனர். வேறு வழியின்றி போலீசு அதிகாரி சிலரைக் கைது செய்து நாடகமாடினர். மேற்கொண்டு எவ்வித நடவடிக்கையும் இல்லை. போலீசு உயர் அதிகாரிகள், கலெக்டர், முதலமைச்சர், அரிசன நலத்துறை அமைச்சர் ஆகியோரிடம் தாழ்த்தப்பட்டமக்கள்முறையிட்டும்எவ்வித நடவடிக்கையும்இல்லை.

தாழ்த்தப்பட்டவர்கள் மீது வன்னிய சாதிவெறியர்களின் தாக்குதல் இச்சுற்று வட்டாரத்தில் தொடர்ந்து நடக்கிறது. தாழ்த்தப்பட்டவர்களான நக்கம்பாடியைச் சேர்ந்த ஆசிரியர் மாறன் மற்றும் செந்துறை அரசு மருத்துவர் இளம்வழுதியும் வன்னியர்களால் தாக்கப்பட்டனர். விறகு பொறுக்கச் சென்ற நக்கம்பாடி பெண்களையும் வன்னியர்கள்தாக்கியுள்ளனர்.

இவ்வளவு நடந்தும் அனைத்து செய்தி தெரிந்தும் பா.ம.க. தலைவர்ராமதாஸ்எதையும்கண்டுகொள்ளவேஇல்லை. முற்போக்கு இளைஞர் அணியினர், செங்கொடி அமைப்பைச் சேர்ந்த நீண்டபயண சுந்தரம், மக்கள் கல்வி இயக்கத்தின் பா.கல்யாணி முதலானோர் இப்பிரச்சினையை ராமதாஸ் முன் கொண்டுவந்து வைத்தும் தனது முற்போக்கு வேடம் கலைந்துவிடக் கூடாதே என்ற எச்சரிக்கையில் இதில் மூக்கை மட்டும் நுழைத்தார். மருவத்தூரைச் சேர்ந்த வன்னியர்கள் ராமதாசிற்கு கட்டுப்பட மறுத்ததோடு ராமதாசின் சமாதான முயற்சியைக் கண்டு வெறுப்புற்ற ஊரிலுள்ள பா.ம.க. கொடிக் கம்பங்களை வெட்டிப்போட்டனர். இதைக்கண்டு ஆடிப்போன ராமதாசு நுழைத்த மூக்கையும் திருப்பிஇழுத்துக்கொண்டார். மேலும்பெண்ணின் உறவினர்களையும், மருவத்தூர் வன்னியர்களையும் அழைத்து ராமதாசு எப்படி கண்டித்தார் தெரியுமா? ''ரெண்டு பேரும் காதலிக்கிற அளவுக்கும் பிறகு, இப்படி ஆகுமளவிற்கும்ஏய்யாபிரச்சினையைமுத்தவிட்டீங்க, முளையிலேயே கிள்ளியிருக்க வேண்டியதுதானே'' என்ற தோரணையில் கண்டித்துள்ளார். மேலும் மருவத்தூரில் பா.ம.க. கொடி வன்னியர்களால் வெட்டப்பட்டதை அறிந்ததும் ஆடிப்போன பா.ம.க. திருச்சி மாவட்டத்தலைவர், தாழ்த்தப்பட்டவர்களை கூப்பிட்டு 3 நாள், 5 நாள் என கெடுவைத்து அதற்குள் பெண்ணை கொண்டு வந்து ஒப்படைக்கவேண்டும்என்றுமிரட்டியுள்ளார்.

ஆனாலும் பா.ம.க.-வையும் ராமதாசையும் ''முற்போக்கு'' என தலையில் தூக்கி வைத்துக் கொண்டு ஆடுகிறார்கள் பா.கல்யாணி, பிரபஞ்சன் முதலான அறிவுஜீவி கோஷ்டியினர்! இதில்முற்போக்குஇளைஞர் அணியினரும் கூட சேர்ந்து அப்பாவித்தனமாக(?)ராமதாசைஅணுகிஉதவிகேட்டுராமதாசின் நாடகத்தைக் கண்டு மூக்குடைபட்டு பின்வாங்கினார்கள். குறிப்பிட்ட அரசியல் கண்ணோட்டமின்றி, எந்த வரையறையும், இலக்கும், நோக்கமும் இன்றி பொருளாதார போராட்டங்களிலும்கூட்டு நடவடிக்கைகளிலுமே தமது போர்குணத்தைக் காட்டுகிறார்




கள் முற்போக்கு இளைஞர் அணியினர். இதில் எத்தனைமுறை குட்டுப்பட்டாலும் தவறை திருத்திக்கொள்ள மறுக்கிறார்கள். இப்பிரச்சினையில் கூடராமதாசின்இரட்டை வேடத்தையும் பா.ம.க.-வின் சாதிய வெறியையும்அம்பலப்படுத்தபகிரங்கமாகமுன்வரவில்லை.


கும்பகோணம் அருகிலுள்ள குடிதாங்கி கிராமத்தில் கொள்ளிட ஆற்றுக்கரையில் உள்ள சுடுகாட்டிற்கு பிணத்தை வன்னியர்கள் தெருவழியாகத்தான் எடுத்துச் செல்ல வேண்டும். அழகர் என்ற தாழ்த்தப்பட்டவர் இறந்ததும் இவரை வன்னியர் தெருவழியே எடுத்துச் செல்ல முயன்றபோது வன்னியர்களால் தடுக்கப்பட்டு, இதைத்தொடர்ந்துநடந்தகலவரம்துப்பாக்கிச்சூடு வரை முடிந்தது. பின் அழகரது பிணம் அவர் வீட்டுத் தோட்டத்திலேயே நான்குநாட்களுக்குப்பிறகுவேறுவழியின்றி புதைக்கப்பட்டது. இதில்தீவிரம்காட்டிஇன்று வரை தாழ்த்தப்பட்டவர்களது பிணத்தை தங்கள் தெருவழியே செல்ல அனுமதிக்க மறுக்கும் வன்னியர்கள் பெரும்பான்மையோர் பா.ம.க-வில்உள்ளனர்.

திருநெல்வேலியில் குறிஞ்சாக்குளம் கிராமத்தில் காந்தாரி அம்மன் கோவில் பிரச்சினை வெகுநாளாக இருந்து வருகிறது. தாழ்த்தப்பட்டவர்கள் புறம்போக்குநிலத்தில்குலதெய்வத்திற்குகோயில் கட்டி காந்தாரி அம்மன் சிலையை நிறுவிய போது நாயக்கர் சாதியினரால் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு போலீசார் தலையிட்டு சிலையை அகற்றினர். ''அது துடியான சாமி, ஊருக்கு ஆகாது. அதோட ஊரைப்பார்க்கும் திசையில் திருப்பிவச்சுட்டாங்க'' என்ற காரணத்தைக்கூறி நாயக்கர்கள் அச்சிலைவைக்க அனுமதிக்கவில்லை. எனவேதாழ்த்தப்பட்டவர்கள் ஜான்பாண்டியன் மூலம் மீண்டும் சிலை வைத்தபொழுது இருதரப்பினருக்குமிடையே மோதல் நடந்தது. தொடர்ந்து அவ்வப்போது நாயக்கர்களால் தாழ்த்தப்பட்டவர்கள் தாக்கப்பட்டு வந்தனர். 14.3.92 அன்று சிறு சம்பவத்தைத் தொடர்ந்து சினிமா பார்த்துவிட்டு திரும்பிய தாழ்த்தப்பட்ட இளைஞர்களை நாயக்கர் சாதிவெறியர்கள் கும்பலாக சேர்ந்து தாக்கினர். நான்கு பேரை அந்த இடத்திலேயே வெட்டிக் கொன்றனர். போலீசோ சமாதான கூட்டம் பேசுவதற்கு எனக்கூறிதாழ்த்தப்பட்டவர்களைஅழைத்து கைதுசெய்து சிறையிலடைத்துள்ளது. நாயக்கர்கள்தங்கள்தோட்டங்களில்தாழ்த்தப்பட்டவர்களுக்கு வேலைதர மறுத்து ஊர்க்கட்டுப்பாடு போட்டு ஒதுக்கிவைத்துள்ளனர். நாயக்கர்களும் பெரும்பான்மையோர் பா.ம.க.-காரர்கள் என்று சொல்லத் தேவையில்லை. இதிலெல்லாம் பா.ம.க.-வும் ராமதாசும் தாழ்த்தப்பட்டவர் - வன்னியர் ஒற்றுமையை சாதிக்க என்ன முயற்சியெடுத்தார்கள் என்பதைகூறட்டும்!

''தாழ்த்தப்பட்டவர் - வன்னியர் ஒற்றுமையைச் சாதிப்போம்; தாழ்த்தப்பட்டவரையே முதல்வராக்குவோம்'' என்ற பா.ம.க.-வின் கோஷம் மற்ற ஓட்டுக் கட்சிகளின் தேர்தல் வாக்குறுதி போலவே மக்களை ஏய்க்கத்தான் என்பது நிரூபனமாகிவிட்டது. தமது வன்னிய சாதிவெறியை மூடி மறைத்து ஓட்டுப் பொறுக்கத்தான் இத்தகைய கோஷங்களை முன்னிறுத்துகிறார்கள் என்பதும் வெளிப்படை! '' நாங்கள் முஸ்லீம்களுக்கு எதிராவனர்கள் அல்ல; நாங்கள் தாழ்த்தப்பட்டவர்களுக்கு எதிரானவர்கள் அல்ல'' என்று பாரதீய ஜனதா கட்சியும் தான் கூறுகிறது! அதனாலேயே அதன் இந்து மதவெறிமறைந்துவிடுமாஎன்ன? பா.ஜ.க.-விற்கு இந்து மதவெறி எப்படி அடிப்படையோ அதுபோல வன்னிய சாதியினரை அடிப்படையாக வைத்து கட்டப்பட்டது தான் பா.ம.க! ராமதாசே தப்பிதவறி நினைத்தாலும் ''பா.ம.க-தான் வன்னியர் கட்சி, வன்னியர் கட்சிதான் பா.ம.க.'' என்பதை மாற்றமுடியாது.

ஆனால் ஒன்று மட்டும் உண்மை; பா.ம.க.-வை நம்பினால் தாழ்த்தப்பட்டவர்கள் மட்டுமல்ல; வன்னிய - உழைக்கும் மக்களும் விடிவைப் பெறமுடியாது. எனவே சாதிவெறியர்களுக்கும், சாதிய கட்சிகளுக்கும், சாதியக் கருத்திற்கு வக்காலத்து வாங்குபவர்களுக்கும்தக்கபதிலடிகொடுக்கஉழைக்கும் மக்கள் சாதிய வேறுபாட்டை உதறிவிட்டு ஒன்றுதிரளவேண்டும்.

www.padippakam.com




# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

திரிபுராவில் கூட்டணி ஆட்சி நடத்தும் காங்கிரசுக்கும் இன வெறிக் கட்சியான திரிபுரா உபஜாதி ஜூபா சமிதி (TUJS)க்கும் இடையிலான உரசலைப் பயன்படுத்திக் கொண்டு, அக்கட்சியுடன் கூட்டணி சேர்ந்து ஆட்சியைப் பிடிக்க கடந்த பிப்ரவரி மாதத்தில் 'மார்க்சிஸ்டு'கள் கேவலமான முயற்சியில் இறங்கினர். மாநில கட்சி செயலாளரான நிருபன் சக்ரவர்த்தி இதற்கான ரகசிய பேரம் நடத்திய விவகாரம் அம்பலப்பட்டதும் கட்சியின் 21 மூத்த தலைவர்களும் ஆயிரக்கணக்கான ஊழியர்களும் கட்சியின் துரோகத்தை எதிர்த்து வெளியேறிவிட்டனர். 'இடது'களின் மிகப் பெரிய தொழிற்சங்கமான அரசு ஊழியர் கூட்டுக் கமிட்டியும் இதனால் பிளவுபட்டுப் போயுள்ளது. "நூற்றுக் கணக்கான 'மார்க்சிஸ்டு' தொண்டர்களைக் கொன்ற இன வெறிக் கட்சியுடன் கூட்டு சேர்வது என்ன நியாயம்?" என்று குரலெழுப்புகின்றனர் வெளியேறிய 'மார்க்சிஸ்டு' கட்சி ஊழியர்கள். சந்தர்ப்ப வாதம் தான் போலிகளின் அரசியல் நியாயம் என்பது பாவம், அவர்களுக்குத் தெரியாது போலிருக்கிறது.

கடந்த தீபாவளி பண்டிகையின் போது டெல்லியில் "சுரா" எனும் விஷச் சாராயத்தைக் குடித்து 200 பேர் மாண்டனர். 40 பேர் குருடர்களானார்கள். இக் கோரக் கொலை பற்றி விசாரிக்க ஜெகதீஷ் சந்திரா கமிஷன் நிறுவப்பட்டு 4 மாதங்களுக்கு மேலாகியும் இன்று வரை குற்றவாளிகள் கண்டு பிடிக்கப்படவில்லை. "சுரா" என்பது 11.4% ஆல்ஹகால் கலந்த ஆயுர்-வேத மருந்து. போதைக்காக இந்த மலிவு விலை மருந்தை பலர் குடிப்பது வழக்கம். இதில் ஆல்ஹகாலின் அளவு அதிகரித்ததுதான் சாவுக்குக் காரணம் என்று தெரிந்த போதிலும், எந்த நிறுவனம் இந்த மருந்தை தயாரித்தது என்று தெரியவில்லை. காரணம், லஞ்சம் பெற்றுக் கொண்டு போலீசாரும், சுகாதாரத் துறையினரும், கலால் பிரிவு அதிகாரிகளும் நூற்றுக் கணக்கான போலி மருந்துக் கம்பெனிகளை அனுமதித்திருப்பதுதான்! போதாக் குறைக்கு இவர்கள் விசாரணையை திசை திருப்பி சிதறடிக்க முயற்சித்ததாக கமிஷன் குற்றம் சாட்டுகிறது. ஒட்டு மொத்த அதிகார வர்க்க அமைப்பு முறையே லஞ்ச ஊழல் மோசடிகளில் மூழ்கியுள்ள போது, போபர்ஸ் விசாரணைக்கு ஏற்பட்ட கதிதான் இதற்கும் ஏற்படும்.

மகாராஷ்டிர மாநிலத்தின் வார்தா மாவட்டத்தில் 1990-ல் காந்தி பிறந்த நாளன்று எழுத்தறிவு இயக்கம் துவக்கப்பட்டது. ஓராண்டுக்குள் இம் மாவட்டம் எழுத்தறிவு பெற்ற முதல் மாவட்டமாக அறிவிக்கப் பட்டு ஆடம்பரமான விழாக்களும் நடந்தன. ஆனால் பல்வேறு சமூக சேவை அமைப்புகள் நடத்திய ஆய்வின்படி இன்னமும் 30% மக்களுக்கு தமது பெயரைக்கூட எழுதத் தெரியவில்லை. எனவே பொய்யான தகவல் கொடுத்து மக்களை ஏமாற்றி விட்டதாக அரசின் மீது குற்றம்சாட்டி சில அமைப்புகள் வழக்கு தொடுத்தன. அரண்டு போன காங்கிரசு அரசு மிகை மதிப்பீடு செய்து தவறான தகவல் கொடுத்து விட்டதாக இப்போது வருத்தம் தெரிவித்துள்ளது. காங்கிரசு கயவாளிகள் அறிவிக்கும் திட்டங்களின் யோக்கியதைக்கு இது இன்னுமொரு சான்று.




1986-ல் "சுராத்" எனும் லாட்டரிச் சீட்டு மோசடியில் சிக்கி அன்றைய ம.பி. காங்கிரசு முதல்வர் அர்ஜூன்சிங் (இன்றைய மத்திய மந்திரி) பதவியிழந்த பிறகு அம் மாநிலத்தில் லாட்டரி சீட்டு விற்பனை நிறுத்தப்பட்டது. பாரதீய ஜனதா ஆட்சிக்கு வந்ததும் இப்போது மீண்டும் லாட்டரி சீட்டு சூதாட்டத்தைத் துவக்கியுள்ளது. "எந்த சூதாட்டத்தையும் இஸ்லாமிய சட்டம் ஏற்பதில்லை; அதில் ஈடுபடுவோரை தண்டிக்கக் கோருகிறது; எனவே முஸ்லிம் மத உணர்வுகளுக்கு எதிரான இந்த லாட்டரி சூதாட்டத்தை நிறுத்த வேண்டும்" என்று ம.பி.யிலுள்ள முஸ்லிம் மதத் தலைவர்கள் அரசை எச்சரித்துள்ளனர். ஆனால் "இந்து மதம் சூதாட்டத்தை ஏற்கிறது; இந்துக்கள்தான் பெரும்பான்மையினர். அவர்களது மத உணர்வுகளுக்கு எதிராக சூதாட்டத்தை நிறுத்த முடியாது" என்று நியாயம் கற்பிக்கிறது ம.பி.யின் இந்துவெறி பாரதீய ஜனதா அரசு. எப்படியிருக்கிறது இந்து வெறியர்களின் சூதாட்ட அரசியல்?

உருது இலக்கியத்தில் புதிய சாதனை படைத்தோருக்கு கவிஞர் இக்பால் நினைவுப் பரிசை ம.பி. அரசு ஆண்டுதோறும் வழங்கி வருகிறது. ஆனால் கவிஞர் இக்பாலை பாகிஸ்தான் கைக் கூலி என்று குற்றம் சாட்டி அப் பெயரை மாற்ற வேண்டுமென்று ஆர்.எஸ்.எஸ். குண்டர்கள் தாங்கள் ஆளும் ம.பி. அரசை எச்சரித்துள்ளனர். இதே போல தாழ்த்தப்பட்ட - பழங்குடி மக்களை "ஆதிவாசிகள்" என்று குறிப்பிடக் கூடாது; இது இந்துக்களை ஆரியர்கள் - வந்தேறிகள் என்றும் மற்றவர்களை பூர்வகுடிகள் என்றும் குறிப்பதாகிறது; எனவே அவர்களை அரிசனங்கள் என்று குறிப்பிடுமாறும் கோரியுள்ளது. இந்துவெறி பாரதீய ஜனதா அரசும் இவற்றை ஏற்கத் தீர்மானித்துள்ளது. பார்ப்பன சூழ்ச்சி என்றால் என்னவென்று இப்போது புரிகிறதல்லவா?

பஞ்சாப் நாளேடுகளில் அண்மைக்காலமாக சில நூதன விளம்பரங்கள் அதிகமாக வெளி வந்து கொண்டிருக்கின்றன. "எங்கள் கிராமத்தில் யாரும் தேர்தலில் போட்டியிடவோ பங்கேற்கவோ இல்லை; அப்படி யாராவது ஒரு சிலர் செய்திருந்தால் அவர்களை மன்னித்து கருணைகாட்ட கோருகிறோம்." "மத்திய அரசின் கொள்முதலுக்குக் கோதுமையை விற்க மாட்டோம்; எந்த எம்.எல்.ஏ.வையும் ஊருக்குள் நுழைய விடமாட்டோம்." என்று கிராமத் தலைவர்கள் சீக்கிய தீவிரவாதிகளுக்கு எழுதும் பகிரங்க கடிதங்கள் விளம்பரங்களாக செய்தித் தாளின் பாதிக்கும் மேற்பட்ட பக்கங்களை அடைத்துக் கொள்கின்றன. பஞ்சாபின் பிரச்சினையைத் தீர்க்காமல் மோசடித் தேர்தல் நடத்தி, தீவிரவாதத்தின் முதுகெலும்பை முறித்துவிட்டதாக காங்கிரசு மாய்மாலம் செய்தது. அதன் எதிர் விளைவாக சீக்கிய தீவிரவாதம் புதிய வேகத்தோடு வளர்ந்து வருவதைக் கண்டு ஆப்பசைத்த குரங்காக அலறுகின்றனர் அரச பயங்கரவாதிகள்.

இந்தியாவிலேயே முழுமையாக கல்வி அறிவு பெற்ற மாநிலமான கேரளாவில் தற்கொலை செய்து கொள்வோரின் எண்ணிக்கை பெருகிவருகிறது. 1983-ல் 4380 பேராக இருந்த இந்த எண்ணிக்கை 1991-ல் 8400 ஆக உயர்ந்துள்ளது. கடந்த 8 ஆண்டுகளில் தற்கொலைகள் இரு மடங்கு

படிப்பகம்

www.padippakam.com

உயர்ந்துள்ளதோடு ஒவ்வொரு 15 நிமிடத்திலும் ஒரு தற்கொலை முயற்சி நடப்பதாக ஆய்வுகள் காட்டுகின்றன. அற்ப விஷயங்களுக்குக்கூட விரக்தியடைந்து தற்கொலை செய்து கொள்ளும் மேலைநாட்டு கலாச்சார சீரழிவின் தாக்கம், மதவாதிகளின் அஞ்ஞான போதையில் மயங்கி சொர்க்கத்துக்குச் செல்ல தற்கொலை செய்து கொள்வது, வேலையின்மை, வரதட்சிணைக் கொடுமை முதலானவையே பெருகிவரும் தற்கொலைச் சாவுகளுக்குக் காரணம் என்று உளவியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். கல்வியறிவினால் மட்டும் நாகரீக வளர்ச்சி ஏற்பட்டுவிடாது: சீரழிவுக் கலாச்சாரத்துக்கு எதிரான போராட்டமில்லாமல் தற்கொலைகளைத் தடுத்துவிடவும் முடியாது.

சோவியத் உளவு நிறுவனமான கே.ஜி.பி.யிடமிருந்து இந்தியப் போலிக் கம்யூனிஸ்டுகளான வலதுகள் ஆண்டுக்கு 50 லட்ச ரூபாய் அளவுக்கு ரகசியமாக நிதியுதவி பெற்று இத்தனை நாளும் வயிறு வளர்த்துள்ளனர் என்ற அதிர்ச்சியூட்டும் உண்மை இப்போது ஆதாரங்களுடன் வெளி வந்துள்ளது. 1990-ல் மட்டும் சோவியத்துக்குத் துதிபாட 'கம்யூனிஸ்டு' அல்லாத கூட்டத்தை உருவாக்குவதற்காக 5 லட்சம் அமெரிக்க டாலர் தரப்பட்டுள்ளது. முதலில் இதையெல்லாம் பொய் என்று மறுத்த போலிகள் இப்போது எல்லாவற்றுக்கும் நேர்மையாக கணக்குக் காட்ட தயாராக உள்ளதாக சதிராடுகின்றனர். அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ.விடமிருந்து நிதியுதவி பெறும் கைக்கூலிகளைப் போலவே, கே.ஜி.பி-யிடமிருந்து நிதியுதவி பெற்றுள்ள வலதுகளும் இன்னுமொரு தேசவிரோத பிழைப்புவாத கும்பல் என்பதை இச்சம்பவம் நிரூபித்துக் காட்டியுள்ளது. இக் கும்பலை ரஷ்ய கைக்கூலிகள் என்று நக்சல்பாரி புரட்சியாளர்கள் நீண்ட காலத்திற்கு முன்பே அறுதியிட்டுக் கூறியது இன்று நிதர்சன உண்மையாகியுள்ளது.

ஈராக்கின் அதிபர் சதாம் உசேனை ஆட்சியிலிருந்து அகற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ள அமெரிக்கா, தனது கொலைகார உளவு நிறுவனமான சி.ஐ.ஏ. மூலம் ரகசிய சதிகளை மேற்கொண்டு வருகிறது. இதன்படி ஈராக்கிய நாணயமான தினார் போன்ற கள்ள நோட்டுகளை ஈரான், துருக்கி, ஜோர்டான் வழியாக கடத்தல்காரர்கள் மூலம் ஈராக்கிற்குள் உலாவ விட்டுள்ளது. இதன் மூலம் ஈராக்கில் பொருளாதார சீர்குலைவை ஏற்படுத்த அமெரிக்கா முயற்சிக்கிறது என்று அமெரிக்காவின் ''வாஷிங்டன் போஸ்ட்'' நாளேடே செய்தி வெளியிட்டு அம்பலப்படுத்தியுள்ளது. ஏகாதிபத்திய வாதிகள் பீற்றிக் கொள்ளும் புஷ் மாமாவின் ஜனநாயக யோக்கியதை இதுதான்!





மேலை நாட்டிலுள்ள ஒரு குடிமகன் ஒரு நாளைக்கு 150 - 200 லிட்டர் தண்ணீரைப் பயன்படுத்துகிறான். ஏழை நாட்டினரோ ஒரு நாளைக்கு 5-10 லிட்டர் தண்ணீரையே பயன்படுத்துகின்றனர். உலகின் 6% மக்கள் தொகையைக் கொண்ட அமெரிக்கா, உலகின் 30% எரிசக்தியைப் பயன்படுத்துகிறது. உலகின் 20% மக்கள் தொகையைக் கொண்ட இந்தியா, 2% எரிசக்தியைத் தான் பயன்படுத்துகிறது. ஏழை நாடுகளைவிட 40% அதிகமான மோட்டார் வாகனங்களை மேலை நாடுகள் உபயோகிக்கின்றன. இவற்றின் விளைவாக காற்று மண்டலம் 80% அளவுக்கு நஞ்சாகிறது. ஆண்டுக்கு 20 கோடி டன் காகிதத்தைப் பயன்படுத்தும் ஏகாதிபத்திய நாடுகள் காடுகளை பெருமளவு அழித்து சுற்றுச் சூழலைத் தொடர்ந்து நாசப்படுத்துகின்றன. இவை தவிர அணு ஆயுத தயாரிப்பு, நட்சத்திரப் போருக்கான தயாரிப்பு ஆகியவற்றால் ஓசோன் வாயு மண்டலம் சிதைக்கப்பட்டுள்ளதாக ஏகாதிபத்தியங்கள் மீது சுற்றுச்சூழல்வாதிகள் குற்றம் சாட்டுகின்றனர். வரும் ஜூன் மாதத்தில் பிரேசில் நாட்டில் நடைபெறவுள்ள உலகச் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மாநாட்டை சீர்குலைக்க ரகசிய சதிகளை மேற்கொண்டும் இம் மாநாட்டில் கலந்துக்கொள்ள முடியாது என்று அமெரிக்கா அடம்பிடிக்கும் காரணம் என்னவென்று இப்போது புரிகிறதல்

படிப்பகம்

இலங்கையில் ஜே.வி.பி. இயக்கத்துக்கு எதிரான வேட்டை என்ற பெயரில் சிங்கள அரச பயங்கரவாதிகள் ஏராளமான இளைஞர்களை மிருகத்தனமாக சுட்டுக் கொன்றும், கடத்திச் சென்று சித்திரவதை செய்து கொன்றுவிட்டு காணாமல் போய் விட்டதாக கதை கட்டியும் ஈராண்டுகளாக அட்டூழியம் புரிந்தனர். இந்த நரவேட்டையில் தமது அருமைப் புதல்வர்களைப் பறி கொடுத்த சிங்கள தாய்மார்கள் நூற்றுக் கணக்கில் திரண்டு, அண்மையில் கொழும்பிலிருந்து கண்டியை நோக்கி எதிர்க் கட்சிகள் நடத்திய பாத யாத்திரையில் பங்கேற்று தமது குமுறலை வெளிப் படுத்தியுள்ளனர். பாசிச பிரேமதாசா அரசு தமிழின மக்களுக்கு மட்டுமல்ல; சிங்கள உழைக்கும் மக்களுக்கும் எதிரானதுதான் என்பதை மீண்டும் உலகிற்கு இதன் மூலம் உணர்த்தியுள்ளனர்.

கோவா தலைநகர் பனாஜியில் தண்ணீர் பஞ்சம் தலை விரித்தாடுவதைப் போக்க ஆட்சியாளர்கள் உரிய நடவடிக்கை எடுக்காததைக் கண்டு ஆத்திரமடைந்த மக்கள், கடந்த மார்ச் 28 -ந் தேதியன்று, சோப்பு-வாளி - துண்டுகளை எடுத்துக் கொண்டு பெண்கள் குழந்தைகளுடன் திரண்டு முதல்வர் ரவி நாயக் வீட்டின் குளியலறையை நோக்கிச் சென்று குளிக்க முற்பட்டனர். முதல்வர் ஊரில் இல்லை என்று காவலர்கள் தடுத்ததால், அருகிலிருந்த தலைமைச் செயலர் வீட்டை நோக்கி ஊர்வலமாகச் சென்றனர். அவரும் அங்கு இல்லாததால், அவர் வீட்டுக்கு வரும் குழாய் இணைப்பை நடு வீதியில் துண்டித்து அங்கேயே குளித்தனர். சொரணையற்ற ஆட்சியாளர்களுக்கு எதிராக கோவா மக்கள் பொருத்தமான போராட்டத்தைத்தான் நடத்

www.padippakam.com

# உலக வங்கி - ஐ.எம்.எஃப் உத்திரவு நாசமாக்கப்படும் விவசாயம்

# டங்கல் திட்டம்: விவசாயிகளுக்கு சுருக்குக் கயிறு

சர்வதேச வர்த்தகம் பற்றிய டங்கல் திட்டத்தை முன்வைத்து உற்பத்திப் பொருட்களுக்கு மட்டுமின்றி பயிர்களுக்கும் விதைகளுக்கும் வளர்ப்புப் பிராணிகளுக்கும்கூட உரிமைப்பதிவுச் சட்டத்தைக் கொண்டுவந்து நமது நாட்டு விவசாயத்தின் மீது ஏகாதிபத்தியங்கள் தங்குதடையின்றி ஆதிக்கம் செலுத்த முயற்சிப்பதைப் பற்றி சென்ற இதழில் பார்த்தோம். அதன் தொடர்ச்சியாக இந்திய விவசாயத்தையும் விவசாயிகளையும் இச் சட்டம் எவ்வாறு நாசமாக்கப் போகிறது என்பதைப் பார்ப்போம்.

ஒரு பொருளை உற்பத்தி செய்யும் முறைக்கு அல்ல; செய்யப்படும் பொருளுக்கே பேடண்ட் உரிமை தரப்பட வேண்டும்; அதுவும் 20 வருடத்திற்கு தரவேண்டும் என்று ஏகாதிபத்தியங்கள் இந்தியாவை மிரட்டி வருகின்றன. மேலும் உற்பத்திப் பொருட்களுக்கு மட்டுமின்றி பயிர்களுக்கும், விலங்குகளுக்கும் (ஆடு, மாடு, கோழி, பன்றிகளுக்கும்) இந்தமாதிரியானபேடண்ட் சட்டங்களைக்கொண்டுவர வேண்டுமென்று டங்கல்முன்மொழிதல்கள்குறிப்பிடுகிறது.

### விதையிலிருந்து விளையும் பயிர் வரை ஏகாதிபத்திய ஆதிக்கம்

அது சரி; இதனால் விவசாயிகளாகிய நமக்கென்ன பிரச்சினை என்று உங்களுக்கு சந்தேகம் வரலாம்! மேலே சொன்னவாறு பேடண்ட் சட்டங்களை இந்திய அரசு மாற்றி விட்டால் (அப்படித்தான் இந்திய அரசு செய்யப் போகிறது) ஒரு விவசாயி வாங்கும் விதை நெல், விதை சோளம், விதை கம்பு போன்றவைகளை அவர் தனது நிலத்தில் விதைக்க மட்டுமே செய்யலாம்; விளைந்த நெல்லைப் பயன்படுத்தி அடுத்த பட்டத்திற்கு விதைகளை உருவாக்கிக் கொள்வது சட்டப்படி குற்றமாகும்; வாங்கி வந்த விதையில் மீதமிருந்து பக்கத்து காட்டுக்காரரிடம் விற்றாலும் அது குற்றமாகும். குறிப்பிட்ட ரக விதைக்கு பேடண்ட் உரிமை பெற்றுள்ள கம்பெனி மட்டுமே விதைகளை உற்பத்தி செய்யவும், விற்கவும் உரிமை பெற்றிருக்கும்; வேறு யாருக்கும் அந்த உரிமை கிடையாது. எனவே, ஒவ்வொரு விதைப்புக்கும் இந்திய விவசாயி அந்நிய ஏகபோக கம்பெனியிடம் தான் விதை நெல் வாங்க வேண்டும்.

இன்று இந்தியாவில் பொதுத்துறை நிறுவனங்கள் புதிய ரக விதைகளை உருவாக்குகின்றன. இன்றுள்ள முறைப்படி, சிறிய தனியார் விதைக் கம்பெனிகள் இந்த ரக விதைகளை வாங்கி அவற்றை பெருக்கி விற்க சுதந்திரம் உண்டு. வேறு எந்த தனியார் கம்பெனி உருவாக்கும் விதைகளையும் வாங்கி இவ்வாறு தாராளமாக பெருக்கலாம்; விற்கலாம்; விதைகளை வாங்கும் விவசாயிகள் கூட மீதமுள்ள விதைகளை அண்டைநில விவசாயிக்கு விற்கலாம்; விதைகளை தாமாக பெருக்கிக் கொள்ளலாம்; விற்கலாம்.

கள் கிடைப்பது திருப்திகரமாகவும் போதுமானதாகவும் இல்லை. விதைகளை விநியோகிப்பதற்கான அமைப்பு முறை பலவீனமாக இருப்பதால், புதிய மற்றும் நல்ல ரக விதைகள் உருவாக்கப்பட்டும் அவை விவசாயிகளுக்குக் கிடைப்பதில்லை. உற்பத்தி மற்றும் விநியோகத்தில் உள்ள பொதுத்துறை நிறுவனங்கள் இத்தேவையை பூர்த்தி செய்வதில் அக்கறை செலுத்துவதில்லை. தனியார் விதைக் கம்பெனிகள் பல இருப்பினும் அவைகள் விஞ்ஞான பூர்வமற்ற முறைகளைக் கையாளுவதால், தரமான விதைகளை அவைகளாலும் சப்ளை செய்ய முடிவதில்லை. பெரிய அளவில் விஞ்ஞான பூர்வமான முறையில் விதைகளை தயாரிப்பதோடு, தனித்தனி விவசாயிகள், விவசாயிகளின் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தனியார் விதைக் கம்பெனிகள் ஆகியவற்றை ஊக்குவிப்பதன் மூலமும் தரமான விதைகளை போதுமான அளவு சப்ளை செய்ய முடியும்.

விவசாயத் துறை மீதான டங்கல் பரிந்துரைகள் நமது நாட்டு விவசாயத்தை எப்படி நடத்த வேண்டுமென்று சொல்கின்றன. விவசாய விளைபொருட்களுக்கு மானியங்களோ, விலை ஆதரவுக் கொள்கைகளோ அமுல்படுத்தக் கூடாது; விவசாயத்தில் அரசாங்கத்தின் தலையீடு எப்படி, எந்த அளவு இருக்க வேண்டுமென்றும் இது வரையறை செய்கிறது. நுகர்வோருக்கு மானியம் கொடுப்பதையும் இந்த பரிந்துரைகள் முற்றாக தடை செய்கின்றன. உணவு தானிய பாதுகாப்பு நோக்கங்களுக்காக ஸ்டாக் வைக்கும் முறையைக் கையாளலாம் என்று அனுமதி வழங்குகிறது. ஆனால், விவசாய விளைபொருட்களை வாங்குவது மற்றும் விற்பது ஆகியவை நடப்பு விலைகளில் தான் நடக்க வேண்டுமென்று சொல்கிறது. பொது மக்களில் சில பிரிவினருக்கு உணவு உதவி வழங்குவதை (ரேஷன் கடைகள் மூலம்) "ஊட்டச்சத்து நோக்கங்களோடு தொடர்புடைய, தெளிவாக நிறுவப்பட்ட வரையறைகளுக்கு" உட்பட்டுத்தான் செய்ய வேண்டும். இது பற்றி தீர்மானித்து நடத்தப்படுவது பிற நாடுகளால் கண்காணிக்கப்படும் என்று டங்கல் முன்மொழிதல்கள் கூறுகின்றன. அடிப்படைக் கட்டுமானத் துறை, சுற்றுப்புற சூழல் பாதிக்கப்படுவதை சோதித்தறிதல், சந்தைக்கு உதவி போன்றவைகளில் ஆதரவு வசதிகளை செய்து தருவ

சுயமாக செயல்பட முடியும்.

ஏறத்தாழ 250 எம்.பி.க்கள் (காங்கிரஸ் உட்பட பல கட்சிகளைச் சேர்ந்தவர்கள்) டங்கல் திட்டத்தை ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று அறிக்கை விடுத்த பின்தான், பல முதலாளித்துவ அறிஞர்களும் கட்சிகளும் எதிர்ப்பு தெரிவித்த பின்னர்தான் டங்கல் திட்டம் பற்றி பாராளுமன்றத்தில் விவாதித்து முடிவெடுக்கப்படும் என்று வர்த்தக அமைச்சர் சிதம்பரம் தெரிவித்துள்ளார். எதிர்ப்பு தெரிவிக்கின்ற எம்.பி.க்கள் முதலாளித்துவ அறிஞர்கள் மற்றும் கட்சிகள் கூட உறுதியாக நிற்க மாட்டார்கள் என்பதும் நமக்குத் தெரியும்; ஏற்கனவே உலகவங்கி, ஐ.எம்.எஃப் ஆகியவற்றின் உத்திரவுப்படி அன்னிய மூலதனமும் பன்னாட்டு பகாசுர கம்பெனிகளும் நமது நாட்டைச் சுரண்ட கதவுகளை அகல திறந்துள்ள இந்திய அரசாங்கம் நிச்சயம் விவசாயத் துறையையும் அவைகளுக்கு தாரை வார்க்கவே செய்யும். உலக வங்கி உத்திரவுப்படி செய்யப்பட்ட பஸ் கட்டண உயர்வு, ரேஷன் அரிசி விலை உயர்வு, உர மானிய வெட்டு, இரும்பு, நிலக்கரி, டீசல் விலை ஏற்றம் ஆகியவைகளால் பாதிக்கப்பட்டிருக்கும் நமக்கு இது நன்றாகவே தெரியும்.

ஒரு புதிய ரக விதையை ஒரு அன்னிய பகாசுர கம்பெனி கண்டுபிடித்து விற்பதாக எடுத்துக் கொள்வோம். இந்த குறிப்பிட்ட ரகத்தின் தன்மை ஆற்றலைக் கொண்ட இன்னொரு ரகத்தைக் கண்டுபிடிக்க சாதாரணமாக 10 ஆண்டுகள் ஆகும்; ஆகையால் இந்த 10 ஆண்டுகளிலும் குறிப்பிட்ட அன்னிய கம்பெனி போட்டியின்றி ஏகபோகமாக சந்தையில் ஆதிக்கம் செலுத்த முடியும். தனது ஏகபோகத்தைப் பயன்படுத்தி செயற்கையான விதைப் பற்றாக்குறையை ஏற்படுத்தி விலையை ஏற்றி கொள்ளைலாபமடிக்கும்.

அடுத்து, அன்னிய ஏகபோக கம்பெனிகள், வானொலி, வானொளி, பத்திரிகையில் பணத்தை வாரியிறைத்து விளம்பரம் செய்து ஒரு மோகத்தையே செயற்கையாக உருவாக்கும் ஆற்றல் கொண்டவை; ஆராய்ச்சிக்கு செலவிடுவதை விட பன்மடங்கு தொகையை இக்கம்பெனிகள் விளம்பரத்திற்கு பயன்படுத்துகின்றன என்பது உலகறிந்த உண்மையாகும்.

www.padippakam.com

உள்ள புதிய தாவர வளர்ப்பாளர்களின் உரிமைகளின்படி ஒரு புதிய ரகத்தின் தன்மைகளிலிருந்து பெறப்பட்ட புதிய ரகங்களை வேறு யாரும் தயாரிக்கவும் முடியாது. எனவே, முதல் கம்பெனியே தான் ஏற்கனவே உருவாக்கிய ஒரு ரக விதையின் குணாதிசயங்களிலிருந்து பெறப்பட்டு உருவாக்கப்பட்ட ஆனால் சாராம்சத்தில் அந்த குணாதிசயங்களைக் கொண்ட விதையே, புதிய மற்றும் அபிவிருத்தி செய்யப்பட்ட ரகங்கள் என்று சித்தரித்து விற்க முடியும். இவ்வாறு அன்னிய பகாசுர கம்பெனிகளின் ஏகபோக ஆதிக்கம் மேலும் உறுதிப்படுத்தப் படுகிறது. இவ்வாறு வல்லரசுகளால் நம் மீது திணிக்கப்பட உள்ள "தாவர வளர்ப்பாளர்களின் உரிமை" (தா.வ.உ) அன்னிய பகாசுர கம்பெனிகள் தங்கள் வருமானத்தையும் லாபத்தையும் பெருக்கிக் கொள்ள உதவுகின்ற ஒரு கருவியேயாகும்.

ஏற்கனவே உள்ள தாவர வளர்ப்பாளர்கள் உரிமைகளின்படி, ஒரு விதைக் கம்பெனி உருவாக்கிய விதையை மற்ற கம்பெனிகள் பெருக்கி விற்கக்கூடாது; ஆனால், ஒரு கம்பெனி கண்டுபிடித்த விதை ரகத்தை அடிப்படையாகக் கொண்டு புதிய ரகங்களை உற்பத்தி செய்து கொள்ளலாம். சந்தையில் கிடைக்கின்ற பல புதிய ரகங்களையும் கலந்து புதுப்புது ரகங்களை பல கம்பெனிகள் உருவாக்க முடியும். இதன் விளைவாக முதல் கம்பெனி ஒரு புதிய ரகங்களைக் கண்டுபிடித்ததனாலேயே ஏகபோக ஆதிக்கம் செலுத்த முடியாது. ஆனால், புதிதாக கொண்டு வர தீர்மானிக்கப் பட்டுள்ள தாவர வளர்ப்பாளர்கள் உரிமைகளின்படி ஒரு கம்பெனி கண்டுபிடித்த விதை ரகத்தைப் போன்ற விதைகளை பிற கம்பெனிகள் தயாரிக்க முடியாது. இதன் விளைவாக ஒரு கம்பெனி ஏகபோக நிலையை அடைய முடியும். விதைகள் வாங்க வேறு வாய்ப்பு இல்லாத நிலையில், இது தவிர்க்க முடியாததாகும்.

இம்மாதிரி குறுகிய கால நலன்கள் மட்டுமின்றி, விவசாயிகளின் நீண்டகால நலன்களும் பாரதூரமாக பாதிக்கப் படுகின்றன. நவீன தொழில் நுட்பங்களின் பலன்களையும் விவசாயிகள் அடைய முடியாது. விதை தயாரிப்பில் ஏகபோக நிலையை அடைகின்ற பன்னாட்டு பகாசுர கம்பெனிகளின் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கண்டுபிடிக்கிற புதிய ரகங்களை இந்தியாவின் தட்பவெட்ப நிலைக்கு ஏற்ப மாற்றியமைக்க வேண்டும். ஆனால், உலக சந்தையைக் கைப்பற்றுவதையும் ஏகாதிபத்திய நாடுகளின் நலன்களையும் முதன்மையாகக் கொண்டுள்ள இக்கம்பெனிகள் அவ்வாறு செய்யா. மேலும் உலக அளவில், எங்கு தமக்கு அதிக ஆதாயம் இருக்கிறதோ அந்த இடங்களை மட்டுமே கவனத்தில் கொண்டு விதைகளை அபிவிருத்தி செய்யும். இதனால் இந்திய விவசாயிகள் நவீன தொழில் நுட்பங்களின் பலன்களை அடைய விடாமல் தடுக்கப்படுவர். பிற விதைக் கம்பெனிகள் இந்திய மயமாக்குவதையும் ஏகபோக கம்பெனிகள் தடுக்கும். பசுமைப்புரட்சி கால கட்டத்தில், சர்வதேச விதை ஆராய்ச்சி நிறு

கள் எல்லா நாட்டு மக்களுக்கும் சொந்தமாக இருந்தன. ஆனால், டங்கல் (அமெரிக்க) திட்டத்தின் புதிய தாவர வளர்ப்பாளர்கள் உரிமைகளின்படி இவ்வாறு செய்ய முடியாது.

**"மாட்டுக்கும் பணம் கொடு! அதன் பாலுக்கும் பணம் கொடு!"**

விதைகளுக்கு மட்டுமல்ல, விலங்குகளுக்கும் அதாவது எல்லா உயிரினங்களுக்கும் உரிமைப் பதிவு சட்டத்தை விரிவாக்க வேண்டுமென்றும் டங்கல் திட்டத்தில் உள்ளது. இதன்படி புதிய ரக ஆடு, மாடு, பன்றிகள் ஆகியவைகளை உருவாக்குவது



தொடர்பான உரிமைப் பதிவுகளில் பன்னாட்டு (ஏகாதிபத்திய) பகாசுர கம்பெனிகள் ஏகபோக நிலையை பெற வழிவகுக்கப் படும்.

டங்கல் முன்மொழிதல்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டால், ஆடு, மாடு, குதிரை உட்பட எல்லா உயிரினங்களும் உரிமைப் பதிவு செய்யப்பட்டு விடும். இதன் மூலம் நாய், பூனை, பூச்சி மற்றும் எந்தவொரு பறவை, விலங்கு மற்றும் தாவரத்தையும் ஒரு தனி மனிதனோ, கம்பெனியோ உரிமைப்பதிவு செய்து கொள்ள முடியும். அதனால் அந்த உயிரினத்தின் மீது அவரோ, கம்பெனியோ ஏகபோக உரிமையைப் பெற முடியும். ஒரு விவசாயி பசு மாடு ஒன்று வாங்கினால், அதன் பாலை விற்கும் பணத்திலிருந்து ஒரு பங்காக இப்பசுவை உருவாக்கிய அன்னிய கம்பெனிக்கு சன்மானமாக (ராயல்டியாக) தரவேண்டும். மேலும் அப்பசு ஈனுகின்ற கன்றுகளை விற்றால் கூட அதிலிருந்து ராயல்டி தரவேண்டும். இந்த ரக பசுவை அக்கம்பெனி தவிர வேறு யாரும் உருவாக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள். இதனால், அப்பசுவின் சந்ததியே அக்கம்பெனிக்கு கட்டுப்பட்டிருக்கும்.

இதைப் புரிந்து கொள்ள கோழி வளர்ப்பு - முட்டை வியாபாரத்தை எடுத்துக் கொள்வோம். ஒரு பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு கோழி இறைச்சி மற்றும் முட்டை வியாபாரம் நகர்ப்புறங்களில் மட்

இன்று நகர்ப்புறம், கிராமப்புறம் என்று அது பரவி நீக்கமற நிறைந்துள்ளது. அந்த அளவிற்கு அதன் சந்தை விரிவாக்கம் நடந்துள்ளது. இதற்கேற்ப கோழிப் பண்ணைகள், கோழிக் குஞ்சு பொறிப்பகங்கள் மற்றும் மருத்துவம் பார்க்கும் கம்பெனிகள், கோழித் தீவன கம்பெனிகள், கோழிக்கறி - முட்டை வியாபார நிலையங்கள் என்று பெருகியுள்ளன. இதில் கொள்ளை லாபம் அடிப்பவை குஞ்சு பொறிப்பகங்களும் தீவனக் கம்பெனிகளும்தான். கோழி வளர்ப்பாளர்களுக்கு ஏதோ லாபம் கிட்டுகிறது. நுகர்வோர் - மக்கள்தான் இதில் பெரும் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள். ஒரு முட்டை விலை ஒரு ரூபாய்க்கும் கோழிக்கறி, ஆட்டுக்கறி அளவிற்கும் விலை உயர்ந்து விட்டது.

கடையில் விற்கும் முட்டையை வாங்கி அடை வைத்தால் குஞ்சு அதிலிருந்து வராது; எனவே, கோழி வளர்க்க வேண்டுமானால், கோழிக்குஞ்சு கம்பெனிகளிடமிருந்து குஞ்சாகத்தான் வாங்க வேண்டும். அதுமட்டுமல்ல, அவர்கள் சொல்கிறபடி சூழ்நிலை, தீனி, மருத்துவம் ஆகிய பக்குவங்களைச் செய்தால் தான் கோழி வளரும்; இல்லாவிட்டால் செத்துவிடும்; இந்த ரக குஞ்சுகளை நாமாக தயாரிக்கவும் முடியாது. குறிப்பிட்ட ரகத்தை உற்பத்தி செய்ய குஞ்சு பொறிப்பக கம்பெனியோ மூன்று நான்கு ஆண்டுகள் எடுத்துக் கொள்கின்றன. கம்பெனிக் குஞ்சிலிருந்து தயாராகும் பெட்டைக் கோழி ஒரு சேவலுடன் இணைந்து இடும் முட்டையை அடை வைத்தால் குஞ்சு வரும்; ஆனால், அது ஒரிஜினல் ரகமாக இருக்காது; கோழிக் கம்பெனிகள் சப்ளை செய்கின்ற ரகங்களின் விசேஷம் என்னவென்றால், ஒரு பெட்டைக்கோழி வருடத்திற்கு 250-280 முட்டைகள் இடும்; இறைச்சிக்காக வளர்த்தால், இரண்டு மாதங்களிலேயே இரு கிலோ எடை வளரும். நாம் தயாரிக்கும் ரகமோ அல்லது நாட்டுக் கோழி ரகமோ வருடத்திற்கு 80-90 முட்டைகள் தான் இடும்; அளவும் சிறியது; இதனால் தான் ஒரு குஞ்சை சராசரியாக ரூ.10-க்கு விற்று லாபமடிக்கின்றன கம்பெனிகள். தமிழ்நாட்

www.padippakam.com

காப், டீகால் என்ற இரு ரகங்களே. இவைகளை சப்ளைசெய்வது அமெரிக்க, பிரெஞ்சு ஏகாதிபத்திய கம்பெனிகளே!

இதே நிலைதான், இனி ஆடு, மாடு, பன்றி, மற்றும் பறவைகளுக்கும் வரப்போகிறது தாவர வகைகளும், விலங்கு, பூச்சி, பறவை வகைகளும் ஆசிய, ஆப்பிரிக்கா, தென் அமெரிக்கா கண்டங்களைச் சேர்ந்த நம் போன்ற வளரும் ஏழை நாடுகளில்தான் இலட்சக்கணக்கில் இருக்கின்றன. நகர்ப்புறங்களைக் கொண்ட அமெரிக்கா, ஜெர்மன் போன்ற ஏகாதிபத்திய நாடுகளில் இவ்வளவு வகைகள் இல்லை. நம்மைப் போன்ற ஏழை நாடுகளிலிருந்து இந்த உயிரின வகைகளை வல்லரசு நாட்டு பகாசுர கம்பெனிகள் திருடிச் சென்று கொண்டிருக்கின்றன. அங்கு கொண்டு போய் அவற்றை வைத்து ஆராய்ச்சி செய்து, வீரிய ரகங்களைத் தயார் செய்து உரிமைப்பதிவு செய்து வைத்துக் கொள்கின்றன. பின்னர் அந்த ரகங்களை விளம்பரம் செய்து விற்கின்றன; அதன் மூலம் நமது நாடுகளிலிருந்து எடுத்துச் சென்ற ஒரிஜினல் ரகங்களை இல்லாமலேயே செய்து விடுகின்றன. நெல் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். கிச்சிடி சம்பா, ஒன்றரை சம்பா, காரு போன்ற பழைய ரக நெல்கள் இன்று கண்ணில் கூட படுவதில்லை; எல்லாம் புதிய ரகங்களே ஆட்சி செய்கின்றன. இதைப் போலத்தான் பிற தாவர மற்றும் விலங்கினங்களை உரிமைப் பதிவு செய்து நம்மை கொள்ளையடிப்பதோடு அவர்களையே என்றென்றைக்கும் சார்ந்திருக்கும்படி அன்னிய பகாசுர கம்பெனிகள் வைத்துவிடும். அவர்கள் கையில் உள்ள பணபலம், விளம்பர உத்திகள், சந்தை மீது கொண்டுள்ள ஆதிக்கம், அரசாங்கம் மீது அவர்களுக்கு உள்ள எஜமான அதிகாரம் ஆகியவற்றைக் கொண்டு மிகச் சுலபமாக இவைகளை சாதிக்கும்.

### உயிரியல்உரிமைபதிவுச்சட்டம் விவசாயிகளின்உரிமைக்குவேட்டு

அமெரிக்கா போன்ற வல்லரசு நாடுகளில் ஏகாதிபத்திய கம்பெனிகள் உயிரியல் ஆராய்ச்சிகளில் தீவிரமாக இறங்கியுள்ளன. ஆராய்ச்சிமுடிவுகளைஇவைமிகமிகஇரகசியமாக, தமது தனிவுடைமையாக வைத்துள்ளன. விதைகள்மற்றும்ஆடு,மாடுகளின்உயிரணுக்களில் மாற்றத்தைக் கொண்டு வருவதன் மூலம் விளைச்சலைப் பெருக்குவது, பால் உற்பத்தியை அதிகரிப்பது, பெரிய அளவு ஆடு, மாடுகளை இறைச்சிக்காக உருவாக்குவது என்ற திசையில் இந்த ஆராய்ச்சிகள்நடந்துகொண்டுள்ளன.

டங்கல் திட்டப்படி, ஒரு விவசாயி பசுமாடு வாங்கினால் அதன் பாலுக்கும், அப்பசு ஈனுகின்ற கன்றுகளுக்கும் கூட அன்னிய கம்பெனிகளுக்கு ராயல்டி தரவேண்டும்.

விவசாயத்தில்நிலம்,தண்ணீர்தவிரமீதி மூன்று முக்கியமான உள்ளீடுகள் விதை, உரம், பூச்சி மருந்து ஆகியவைகளாகும். டங்கல் முன்மொழிதல்களின்படி உயிரின வகைகளுக்கும் உரிமைப் பதிவு கொடுத்து விட்டால், இந்த மூன்று உள்ளீடுகளும் உரிமைப் பதிவு சட்ட வரம்புக்குள் வந்துவிடும். ஏனென்றால், உயிரியல் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் புதிய வகை விதைகள், உரங்கள், பூச்சி மருந்துகள் அனைத்தும் ஜீவராசிகளாகும் (உயிருள்ள பொருட்களாகும்).

ஏகாதிபத்திய உயிரியல் தொழில்நுட்ப கம்பெனிகளுக்கு உயிரின வகைகளை உரிமைப் பதிவு செய்ய உரிமமும், நமது சந்தையில் நுழைய தாராள அனுமதியும் வழங்கப்பட்டு விட்டால், அப்போது அவைகளால் உயிரியல்ரீதியாகதயாரிக்கப்படும்உணவுப் பொருட்களும் பணப்பயிர் ரகங்களும்தான் இந்திய சந்தையில் ஆதிக்கம் செலுத்தும் நிலைஏற்படும்.

இந்திய விவசாயியும் மக்களும் இந்த ஏகாதிபத்திய கம்பெனிகளை அடிமைத்தனமானமுறையில்சார்ந்திருப்பது தவிர்க்கமுடியாததாகிவிடும்.

இதுவரை, அறிவுத்துறை உரிமைப் பாதுகாப்புஉள்ளஎல்லாநாடுகளிலும்தாவர வளர்ப்பாளர்கள் எவ்வித சன்மானமும் (ராயல்டியும்)தராமலேயேநாற்றுகளைதயாரித்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டு வந்தார்கள். அறிவுத்துறை உரிமைப் பாதுகாப்பு சட்டத்திலிருந்து அவர்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டிருந்தது.

அதேபோல,ஒருவிவசாயிதான்விளைவித்த தானியத்திலிருந்து விதைத் தானியம் தயாரிக்கவும் உரிமை அளிக்கப்பட்டிருந்தது.

டங்கல் முன்மொழிதல்கள் இந்த இரு வகை உரிமைகளையும் ஒழித்துக் கட்டச் சொல்கிறது.

விவசாயத்தில்தற்போதுபயன்படுத்தப் படும்ரசாயனஉரங்களும்பூச்சிமருந்துகளும் மண், தண்ணீர் ஆகியவைகளை நஞ்சாக்குவதோடு, தானியத்திலும் புகுந்து நஞ்சாக்குகிறது; மனிதனுக்கும் ஆபத்தை உண்டாக்குபவை.எனவே,இவைகளைப்பயன்படுத்தக் கூடாது என்று சுற்றுப்புற சூழல்வாதிகள் பிரச்சாரம் செய்து வருகிறார்கள். இந்த ரசாயன உரங்கள், பூச்சி மருந்துகளுக்கு மாற்றாக, உயிரியல் ரீதியான உரங்கள், பூச்சி மருந்துகளைத்தயாரித்து வருகின்றனர்; இவை போதுமான அளவு உருவாக்கப்படும் காலம் தூரத்தில் இல்லை; அப்போது இவைகள் பெருமளவில்பயன்படுத்தப்படும்.

உயிர்ப் பொருட்களான பாக்டீரியா, அல்கே (Algae) ஆகியவைகளைப் பயன்படுத்தி உயிரியல் உரங்கள் தயாரிக்கப்படுகின்றன. சிலவகையானபாக்டீரியாக்களும்நீல-பச்சை அல்கேகளும் காற்றில் கலந்துள்ள நைட்ரஜனை மாற்றி அதைப் பயிர்கள் உரமாக பயன்படுத்த உதவுகின்றன. எனவே, உயிரியல்ரீதியாகநெறிப்படுத்தப்பட்டஇந்த



வகையான பாக்டீரியாக்களும் அல்கேகளும்உரமாகபயன்படுத்தப்படுகின்றன.

பேசில்லஸ் மெகாடெரியம் என்ற ஒரு வகை சிறப்பு பாக்டீரியா மண்ணின் பாஸ்பேட் உள்ளடக்கத்தை அதிகரிக்கிறது. மண்ணின் பொட்டாஷிய உள்ளடக்கத்தை செழுமைப்படுத்த இயற்கை வாயு பயன்படுத்தப்படுகிறது. பூச்சி மருந்துத் துறையில், உயிரியல் ரீதியாக நெறிப்படுத்தப்பட்ட ஒரு வகை பூச்சிகளும்புழுக்களும்பயிரைத்தாக்கும்பூச்சிகளையும் புழுக்களையும் கொல்ல பயன்படுத்தப் படுகின்றன. இன்னுமொரு முறையும் உள்ளது; உயிரியல் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி பூச்சிகளைக்கொல்லும் நஞ்சை உற்பத்தி செய்கிற உயிரணுவை பயிரே உற்பத்தி செய்ய தூண்டுவதாகும். இதன் மூலம் பூச்சிகளைக் கொல்லும் நஞ்சை பயிர் தானே உற்பத்திசெய்துபயன்படுத்திக்கொள்ளும்.

இவ்வாறு பயன்படுத்தப்படும் உயிரியல் உரங்களும்பூச்சிக்கொல்லிகளும் உயிரினங்களைப்பயன்படுத்திசெய்வதால்,இவை அனைத்தும் டங்கல் முன்மொழிதல்கள்படி உரிமைப்பதிவுச்சட்டத்தின்கீழ்வரும்.

உருகுவே சுற்று பேச்சு வார்த்தையில் உள்ள இந்த டங்கல் முன்மொழிதல்களை இந்திய அரசு ஏற்றுக் கொண்டால், அது, பன்னாட்டு பகாசுர கம்பெனிகளுக்கு விதை, உரம், பூச்சி மருந்து தயாரிப்பு மற்றும் விற்பனையைத் தாரை வளர்ப்பதில்தான் முடியும். ஏனென்றால், இந்தக்கம்பெனிகள் உயிரியல் தொழில்நுட்ப ஆராய்ச்சியில் முன்னணியில் இருப்பதோடு, விவசாய ஆராய்ச்சிகளில் முதலீடு செய்ய போதிய வசதிகளையும் பெற்றுள்ளன. இதனால், விவசாய உள்ளீடு பொருட்களின் விலைகள் விஷம் போல ஏறும். பிழைப்புக்காக விவசாயம் செய்யும் சிறிய, நடுத்தர விவசாயிகளின் வாழ்க்கை வாடிவதங்கிவிடும்.

மேலும்நமதுநாட்டுபால்,இறைச்சிஉற்பத்தியும் பன்னாட்டு பகாசுர கம்பெனிகளின் இடுக்கிப் பிடியில் சிக்கிவிடும். நமது நாட்டு மக்கள் பாலையும் இறைச்சியையும் நினைத்துக்கூடப் பார்க்கமுடியாத அளவிற்கு அதன் விலையேற்றம்உயர்ந்துவிடும்.

(தொடரும்)

www.padippakam.com



## ● விலைவாசி உயர்வு எதிர்ப்பு
## ● 'தடா' சட்ட எதிர்ப்பு

# சூறாவளி பிரச்சார இயக்கம்

மத்திய - மாநில அரசுகள மாறி மாறி மக்கள் மீது விலையேற்றத்தை திணிக்கின்றன. உலக வங்கி - ஐ.எம்.எப். - அமெரிக்காவிடம் அடிபணிந்து இந்தியாவை மறுகாலனியாக்கி வருகிறது காங்கிரசு துரோக கும்பல்! இவற்றிற்கு எதிராகப் போராடினாலோ அடக்குமுறை கட்டவிழ்த்துவிடப்படுகிறது. தேசிய பாதுகாப்புச் சட்டம், 'தடா' போன்ற கொடிய சட்டங்களை ஏவி ஆட்டம் போடுகிறார் பாசிச - பார்ப்பன ஜெயா! இவற்றை எல்லாம் கண்டித்தும் அம்பலப்படுத்தியும் மக்கள் கலை இலக்கியக் கழகம், விவசாயிகள் விடுதலை முன்னணி, புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி, திருச்சி-ரயில்வே ஒர்க்கர்ஸ் யூனியன் ஆகிய அமைப்புகள் தமிழகமெங்கும் தொடர்ச்சியாக பொதுக் கூட்டங்களை நடத்தின.

**திருச்சி** பிப். - மார்ச் - ஏப். (7.4.92 வரை) மாதங்களில் திருச்சி நகரில் ர.ஒ.யூ சார்பில் **பொன்மலை ஆர்மரிகேட்** எதிரிலும், பு.மா.இ.மு சார்பில் **எடத் தெரு, துவாக்குடிமலை,** ஆகிய 2 இடங்களிலும் ம.க.இ.க சார்பில் **புத்தூர் 4 ரோடு, மேல் கல்கண்டார் கோட்டை, காட்டூர், ஆண்டார் வீதி, திருவரம்பூர், திருவானைக்காவல்,** ஆகிய 6 இடங்களிலும் பொதுக் கூட்டம் - கலைநிகழ்ச்சி நடைபெற்றது.

பொன்மலை ஆர்மரிகேட் கூட்டத்தை நடத்தவிடாமல் ரௌடித்தனம் செய்த போலீசு சப் இன்ஸ்பெக்டர் காந்தியைப் பற்றி அக் கூட்டத்திலேயே அம்பலப்படுத்திப் பேசப்பட்டது. ஒவ்வொரு கூட்டத்திலும் சுமார் 500 முதல் 1000 வரை கூடினர். முன் எப்போதும் இல்லாத அளவில் மக்களின் ஆதரவு இருந்தது குறிப்பிடத்தக்கது.

**கரூர்:** ம.க.இ.க சார்பில் 17.3.92 அன்று **நேதாஜி சிலை** அருகில் பொதுக் கூட்டம் - கலைநிகழ்ச்சி நடைபெற்றது. விலைவாசி உயர்வு பற்றி தோழர் இளஞ்செழியன், தடா - தே.பா.ச பற்றி தோழர் தமிழ்மணியும் சிறப்புரையாற்றினர். புதியப் பகுதியில் கூட்டம் போட்டு செல்வாக்கு பெறுவதை விரும்பாத ஓடுகாலிகளும் மற்றும் சில உள்ளூர் ஓடுகாலிகளின் கூட்டாளிகளும் கூட்டத்தை கெடுக்க முயற்சி செய்தது முறியடிக்கப்பட்டது. சுமார் 500 பேர் அளவில் மக்கள் கூடி நின்று ஆதரவளித்தனர்.

பொதுக் கூட்டத்திற்கு முந்தைய நாள் இரவு நமது தோழர்கள் கரூர் பேருந்து நிலையத்தில் சுவரொட்டி ஒட்டிய போது, குடி போதையில் (சாதாரன உடை அணிந்து) இருந்த இரு குற்றப் பிரிவு போலீஸ்காரர்கள் தோழர்களை கைது செய்தனர். தோழர்களை கடுமையாக தாக்கி காயப்படுத்தி அன்று இரவு முழுவதும் ஜட்டியுடன் லாக்கப்பில் வைத்து விடுதலை செய்தனர். இதை அம்பலப்படுத்தி மேடையில் பேசிய போது காவலுக்கு வந்திருந்த போலீசாரும் நமது பேச்சை தாங்கிக் கொள்ளமுடியாமல் சென்றுவிட்டனர்.

**அதிராம்பட்டினம் பேருந்து நிலையத்தில்** (வி.வி.மு) பட்டுக்கோட்டை வட்டாரம் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் சந்திரசேகர் (வி.வி.மு) தலைமை தாங்கினார். கூட்டத்தின் தொடக்க நிகழ்ச்சியாக மறைந்த வி.வி.மு தோழர் நடேசனுக்கு நினைவஞ்சலி செலுத்தப்பட்டது. தடா - தே.பா.ச பற்றி தோழர் மன்னை நன்னன் பு.மா.இ.மு (மன்னார்குடி) உரையாற்றினார். விலைவாசி - பட்ஜெட் - நாடு காலனியாதல் பற்றி தோழர் தமிழ்மணி (ம.க.இ.க) சிறப்புரையாற்றினார். சுமார் 750 பேர் அளவில் கூடினர்.

**பள்ளிப்பாளையம்:** சேலம் மாவட்டம் பள்ளிப்பாளையத்தில் 2.4.92 அன்று சனி சந்தை திடலில் பு.மா.இ.மு சார்பில் பொதுக்கூட்டம் - கலைநிகழ்ச்சி நடைபெற்றது. விலைவாசி உயர்வு - பட்ஜெட் பற்றி தோழர் முருகானந்தம் (ர.ஒ.யூ-திருச்சி), தடா - தே.பா.ச பற்றி தோழர் தமிழ்மணி (ம.க.இ.க) உரையாற்றினார். சுமார் 600 பேர் கூடினர். தோழர் ராஜாராம் (பு.மா.இ.மு) ஓடுகாலி அமைப்பிலிருந்து ஏன் வெளியேறினோம் என்பதை விளக்கி ஓடுகாலிகளின் அரசியல் - நடைமுறை ஓட்டாண்டித் தனத்தை அம்பலப்படுத்தி பேசினார்.

**சென்னிமலை:** பெரியார் மாவட்டம், **சென்னிமலை குமரன் சதுக்கத்தில்** 3.4.92 அன்று பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஓடுகாலி - அமைப்பில் முன்னணியாக செயல்பட்ட தோழர் பெரியசாமி தான் ஏன் ஓடுகாலி அமைப்பிலிருந்து வெளியேறி விவிமு அரசியலை ஏற்றுக் கொண்டேன் என்பதை விளக்கிப் பேசும் போது ஓடுகாலிகளின் அரசியல் - நடைமுறை ஓட்டாண்டித்தனத்தை தோலுரித்தார். விலைவாசி - பட்ஜெட் பற்றி தோழர் முருகானந்தம் (ர.ஒ.யூ), தடா - தே.பா.ச பற்றி தோழர் தமிழ்மணி ஆகியோர் உறையாற்றினர். சுமார் 500 பேர் கூடினர். ''பு.ஜ.'' அரசியலை சென்னிமலையில் நுழைய விடமாட்டோம், மீறி கூட்டம் நடத்தினால் கொலை செய்து விடுவோம் என ஓடுகாலி அமைப்பைச் சேர்ந்த பொன்னுசாமி (உள்ளூரில் 'ஓட்டுக் கட்சி பாணியில்' வளரும் 'நாட்டாண்மை' தலைவர்) தலைமையில் ஒரு ரவுடிக் கும்பல் தோழர் பெரியசாமியை மிரட்டியுள்ளனர். இதையெல்லாம் உடைத்தெறிந்து கூட்டம் உற்சாகமாக நடத்தப்பட்டது. பகல் முழுதும் நகரில் கலைக்குழுத் தோழர்கள் பிரச்சாரம் வீச்சாக செய்யப்பட்டது. பள்ளிப்பாளையம், சென்னிமலை இரு கூட்டங்களுக்கும் உள்ளூர் போலீசார் அனுமதி தராமல் இழுத்தடித்தனர். எத்தனை தடைகள் - கைதுகள் வந்தாலும் அதை மீறி கூட்டம் நடத்துவோம் என உறுதியாக தோழர்கள் செயல்பட்டதால் கூட்டத்தை நடத்த முடிந்தது. சென்னிமலையில் மாவட்ட போலீசு சூப்பிரண்டெண்ட் தலைமையில் போலீசு அதிகாரிகள் மற்றும் ஏராளமான போலீசை வைத்து பீதி உண்டாக்கினர்.

**துறையூர்:** திருச்சி மாவட்டம், **துறையூர் விநாயகர் தெருவில்** ம.க.இ.க சார்பில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு தோழர் P.பொம்மன் (வி.வி.மு) தலைமை தாங்கினார். விலைவாசி உயர்வு - பட்ஜெட் பற்றி தோழர் இளஞ்செழியன், தடா - தே.பா.ச பற்றி தோழர் தமிழ்மணி ஆகியோர் உரையாற்றினர். சுமார் 500 பேர் அளவில் கூடினர். இதில் பெண்கள் அதிகமாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

மேற்கண்ட அனைத்து பொதுக்கூட்டங்களிலும் ம.க.இ.க கலைக்குழு தோழர்கள் சிறப்பான கலைநிகழ்ச்சியை நடத்தினர். மக்கள் உற்சாகமாக வரவேற்று ஆதரவளித்தனர்.

**போடி:** வி.வி.மு-வின் கொள்கை விளக்கப் பொதுக்கூட்டம் 2.3.92 அன்று **போடிநாயக்கனூர் - கொக்கையர்பள்ளி** அருகில் நடந்தது. தோழர் மாசானம் தலைமையில் தோழர் சிவகாமு (வி.வி.மு - உசிலை வட்டம்), தோழர் கதிரவன் (ம.க.இ.க) ஆகியோர் சிறப்புரையாற்றினர். விவிமு கொள்கைகளையும், இன்றைய விலைவாசி உயர்வைக் கண்டித்தும் - அம்பலப்படுத்தியும் பேசினர். பகுதி மக்கள் சுமார் 200 பேர் வரை கூடி ஆதரவளித்தனர்.

**சென்னை**யில் 5 பகுதிகளில் விலைவாசி உயர்வு கண்டனப் பொதுக்கூட்டங்கள் திட்டமிடப்பட்டு போலீசு அனுமதி மறுப்பினால் ஒரு இடத்தில் மட்டுமே நடந்தேறியது. 20-3-92 அன்று வில்லிவாக்கம் - பட்மேடு பகுதியில் நடந்த கூட்டத்தில் தோழர் சீனிவாசன் சிறப்புரையாற்றினார். வியாசர்பாடி, தண்டையார் பேட்டை, சேத்துப்பட்டு, சைதாப்பேட்டை ஆகிய பகுதிகளில் அடுத்தடுத்து நடைபெறவிருந்த பொதுக்கூட்டங்களுக்கு கடைசி நேரத்தில் - முதல் நாள் மாலையில் வந்து அடாவடித்தனமாக போலீசு அனுமதி மறுத்தது. காரணம் கேட்டதற்கு கமிசனர் உத்தரவு என்று பதிலுரைத்தது. கருத்துரிமை பறிக்கப்பட்டதை கண்டித்து உடன் அனைத்து பொதுக்கூட்ட பகுதிகளிலும் தட்டி எழுதி வைக்கப்பட்டது. தெரு முனைக் கூட்டங்களும் ஆங்காங்கே நடத்தப்பட்டது. மேலும் உரிமை பறிப்பை கண்டித்து அரசுக்கு எதிராக வழக்கும் தொடுக்கப்பட்டது. இதை விசாரித்த நீதிபதி பொதுக் கூட்டம் மறுக்கப்பட்டதற்கு காரணம் கேட்ட போது அரசு தரப்பு வக்கீல் 'திருதிரு'வென முழித்தார். பிறகு பொதுக்கூட்டம் நடத்த அனுமதியளிக்கும்படி உத்தரவிட்டார், நீதிபதி. மீண்டும் பொதுக்கூட்டங்கள் நடத்த தீர்மானித்து விண்ணப்பிக்கப்பட்டுள்ளது ●

படிப்பகம்

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM R.N. 42648/85 Regd. No. TN/MS(S) 344



திருப்பதியில் அண்மையில் நடந்த 79-வது காங்கிரசு மாநாட்டில் மேயும் 'மாண்புமிகு'க்கள்! இவர்களது உணவிற் காக மட்டும் 3 கோடி ரூபாய் செலவு! மாநாட்டிற்காக அவிலாலா கிராமத்தில் காட் டையும், மேய்ச்சல் நிலத்தையும் அழித்து 187 ஏக்கரில் ஒரு புதிய நகரத்தையே உரு வாக்கி ராஜீவ் நகர் என பெயர் சூட்டினார் கள். உணவு செலவைத் தவிர ஏனைய அனைத்திற்கும் அரசுத் துறையை கேடாகப் பயன்படுத்தி மக்கள் பணத்தையே அள்ளி இறைத்துள்ளார்கள், கயவாளிகள்!

ஹைதராபாத், பெங்களூர், சென்னை முதலிய நகரங்களின் சாலைகளுடன் ராஜீவ் நகருக்கு சாலைகள் போட்டு இணைப்பு கொடுத்தது போக்குவரத்துத் துறை. ராஜீவ் நகருக்குள் 30 ஏக்கர் நிலத்தில் குடியிருப்புக் காலனி ஒன்றையே திருப்பதி நகர்ப்புற வளர்ச்சிக் குழுமம் அமைத்துக் கொடுத்தது. தனியொரு துணை மின் நிலையம் ஒன்றும் அமைக்கப்பட்டது. திருப்பதி தேவஸ்தானத் தின் தங்கும் அறைகள் பயணியர் விடுதிகள், வாகனங்கள் பயன்படுத்தப்பட்டன. வெளி நாடுகளுடனும் தொடர்பு கொள்ளும்வண் ணம் தொலைபேசி, ஃபேக்ஸ், டெலெக்ஸ் முதலியவை பத்து பதினைந்து இடங்களில் தொலைத் தொடர்பு துறையால் நிர்ணயிக் கப்பட்டது. இத்தனையும் சேர்ந்து 3.5 கோடி ரூபாய் செலவானதாக வும் இதை ஆந்திர அரசுக்கு கட்டிவருவதாக வும் சரடு விடுகிறது காங்கிரசு. ஆனால் எதிர்க்கட்சியினரும் பத்திரிகையாளர்களும் அரசு பணம் 100 கோடி ரூபாய் செலவாகியி ருக்கும் என கணிக்கிறார்கள்.

இதோ இவர்கள் இந்தியக் குடிமக்கள்! 45 ஆண்டு கால ஆட்சியில் காங்கிரசு கும் பல் இழைத்த துரோகத்தால் இப்படி தட் டேந்தி காத்திருக்கிறார்கள்! கொடியவர்க ளின் சுரண்டலால் விவசாயிகளும் தொழி லாளர்களும் வீதியில் நிற்கிறார்கள் நிராதர வாக! சாலையிலும் சாக்கடையிலும் குப்பை யிலுமே குடியிருக்கிறார்கள் பஞ்சை பராரிக ளாக! வறட்சியால் பட்டினிச்சாவின் விளிம் பில் நின்று கதறுபவர் லட்சக்கணக்கானோர்! பசி தாங்காமல் குப்பைப் பொறுக்கி வயிறு நனைக்க வீதியிலே புற்றீசலாய் இளம்பிஞ்சு கள்! இவர்களையெல்லாம் சிக்கனமாக வாழச் சொல்கிறது நரசிம்மராவ் கும்பல். இப்படி எல்லோரும் வீதியில் தட்டேந்தி உட் கார்ந்தாலும் திமிர்பிடித்தவர்கள் சிக்கன உப தேசத்தை நிறுத்தமாட்டார்கள்.

கோடானு கோடி வயிறை பசி தின்று கொண்டிருக்கையில், காங்கிரசு கும்பல் சில வேளை உணவிற்கு 3 கோடியையே முழுங் குகிறது. லட்சக்கணக்கான கிராமங்கள் சாலை, மின்சாரம், குடிநீர் வசதியின்றி தவிக் கையில் சினிமாக் காட்சி 'செட்டிங்ஸ்' போல் 3 நாள் கூத்துக்காக பல கோடிகள் அதுவும் மக்கள் பணத்தையே கொட்டி அழிக்கிறார் கள். களிவெறியாட்டம் போடும் காங்கிரசு கும்பலை இனியும் அனுமதித்தால் நம்மிடம் எஞ்சியிருக்கும் கோவணமும் ஒட்டியிருக் கும் உயிரும் உடலில் தங்காது. இந் நிலையை மாற்றவேண்டாமா?



# இதுதான் இன்றைய இந்தியா

படிப்பகம்